தமிழ் இலக்கியக் கோவை

நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி

திருநெல்வேலி டயோசீஸன் புக் டெப்போ,
பாளையங்கோட்டை.

தமிழ் இலக்கியக் கோவை.

நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி.

[புதிய பாடத் திட்டத்தை ஒட்டித் தொகுக்கப்பெற்றது.]

தொகுத்தோர் :
வித்துவான் வ. தங்கையா,
தலைமைத் தமிழாசிரியர்,
பேரன்புரூக் உயர்நிலைப் பள்ளி, பங்களாச்சுரண்டை.

வெளியிடுவோர் :
திருநெல்வேலி டயோசீஸன் புக் டெப்போ,
பாளையங்கோட்டை.

பதிப்புரிமை] **1956** [ரூ. 0—14—0

First Edition — 1955
Reprinted — 1956

Approved by the Madras Text Book Committee for Class use in Secondary and High Schools. Vide Fort St. George Gazette Page 20 dated 4—4—'56.

திருநெல்வேலி டயோசிசன் பிரஸ், பாளையங்கோட்டை — K. 418.

முன்னுரை

"தமிழ் இலக்கியக் கோவை" என்னும் பெயர் வரிசையில் இப்புத்தகம் **நான்காம் படிவம் சிறப்புப் பகுதிக்கு** உரியதாகும். மாணவர்கள் தமிழ் இலக்கியத்தில் முறையான பயிற்சியும், சிறந்த தேர்ச்சியும் பெறுவதற்கென சென்னை அரசியலார் 27—1—54 இல் அமைத்த பாடத்திட்டத்தைத் தழுவியும், இப்பொழுது வெளியிடப்படும் பள்ளியிறுதித் தேர்வுத் தமிழ்ப்பாடப் புத்தக அமைப்பைப் பின்பற்றியும் இப்பாடப்புத்தகம் தொகுக்கப் பெற்றுள்ளது.

இத்தொகை நூலில் செய்யுட் பகுதிக்கு '**செய்யுட் கோவை**' என்றும், உரைநடைப் பகுதிக்கு '**உரைநடைக் கோவை**' என்றும் பெயர் தந்து, செய்யுட்கோவைப் பகுதியில் **முற்கால, இடைக்கால, இக்கால** நூல்களிலிருந்து மாணவர் பயிற்சி முறைக்கு ஏற்ப, செய்யுட்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. தொகுக்கப்பெற்ற செய்யுட் பகுதி ஒவ்வொன்றிற்கு முன்னும் நூல் வரலாறு, ஆசிரியர் வரலாறுகளும், இறுதியில் குறிப்புரை, பயிற்சி வினாக்கள் முதலியனவும் தரப்பெற்றுள்ளன.

உரைநடைக்கோவைப் பகுதியில் **இலக்கியம், சீர்திருத்தம், வரலாறு, கட்டுரை, கலை, நாடகம்,** சொற்பொழிவு முதலியன பற்றிய எட்டுக் கட்டுரைகள் சேர்க்கப்பெற்றுள்ளன. அவை ஒவ்வொன்றின் இறுதியிலும் மாணவர் எளிதில் படித்துத் தெரிந்துகொள்ளு முறையில் குறிப்புரை, பயிற்சி வினாக்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

எனது வேண்டுகோளுக்கு இணங்கி இப்பாடப் புத்தகத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு தத்தம் கவிதைகளையும், கட்டுரைகளையும் தந்துதவிய தமிழ்ப் பேரறிஞர்களுக்கு எனது நன்றி என்றும் உரியதாகட்டும்.

எவ்வகையிலும் நன்முறையில் அமைந்த இப்பாடப் புத்தகத்தை உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், தமிழாசிரியர்களும் தங்கள் பள்ளிகளில் பாடப்புத்தகமாக வைத்து எம்மை ஆதரிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பங்களாச் சுரண்டை,
1—10—'55.

வ. தங்கையா.

உள்ளுறை.

செய்யுட் கோவை.

வரிசை எண்.	பொருள்.	பக்க எண்.
I.	வாழ்த்து.	
1.	கடவுள் வாழ்த்து	
	(1) மணிமேகலை	1
	(2) திருவருட்பா	2
2.	தமிழ்த்தாய் வாழ்த்து	4
II.	அறவுரை.	
1.	நாலடியார்	7
2.	பழமொழி	8
3.	புறநானூறு	9
III.	கதை.	
1.	வில்லி பாரதம்—கன்ன பருவம்	13
2.	மனோன்மணீயம்	19
IV.	சிறுநூல்கள்.	
1.	தூது	29
2.	ஆற்றுப்படை	30
V.	புனைந்துரை.	
1.	இசை இன்பம்	33
2.	மதிலும் அகழியும்	34
3.	பாரத நாடு	35
VI.	பல்சுவை.	
1.	வீரத்தாயின் கடமையுணர்ச்சி	38
2.	தனிப்பாடல்	38
3.	சீதக்காதியின் கொடைத்திறன்	39
4.	கிறிஸ்துபெருமான் தந்த செபம்	40

உரைநடைக் கோவை.

வரிசை எண்.	பொருள்.		பக்க எண்.
1.	திருக்குறள் உரைப்பாயிரம். — பரிமேலழகர்.	....	43
2.	சீவகாருண்ய ஒழுக்கம். — இராமலிங்க அடிகள்.	....	46
3.	பண்டிதமணியின் மாண்பு. — சித்தாந்த கலாநிதி, பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி பிள்ளை.	....	53
4.	நாகரிகம். — பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ.	....	59
5.	அன்பும் அருளும். — வித்துவான் வ. தங்கையா நாடார்.	....	64
6.	தமிழகத்துக் கோவில்கள். — திரு. புலவர், டாக்டர். மா. இராசமாணிக்கனர்.	....	71
7.	யாதும் ஊரே யாவரும் கேளிர். — திருமதி மேரி மாசில்லாமணி அம்மையார், எம். ஏ.	....	78
8.	நாடக வகைகள் — தெருக்கூத்து. — பேராசிரியர். ரம்போலா மஸ்கரன் ஹாஸ், எம். ஏ.	....	84

நான்காம் படிவம்—சிறப்புப்பகுதி.

செய்யுட்கோவை.

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

(1) மணிமேகலை.

மணிமேகலை ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று; ஏனை யவை **சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டல கேசி** என்பனவாம். கோவலனுக்கும், மாதவிக்கும் பிறந்த மணிமேகலையைப்பற்றி இந்நூல் கூறுகின்றது. கதை யைத் தொகுத்துக் கூறும் பதிகத்தை முதலில் கொண்டு **விழாவறை காதை** முதல் **பவத்திற மறுகென பாவை நோற்ற காதை** இறுதியாகக் கொண்ட முப்பது காதைகளையுடையது. பாடமாக வந்துள்ள பகுதி **பாத்திரம் பெற்ற காதை** யிலுள் ளது. அஃதாவது **மணிபல்லவம்** என்னும் தீவில் தீவ திலகை கூறியபடி மணிமேகலை புத்த பீடிகையை வணங்கி, கோமுகி என்னும் பொய்கையை வலம் வந்து நின்ற போது, அப்பொய்கையிலுள்ள அட்சயபாத்திரம் அவள் கையில் வந்து சேர்ந்தது; அதைக் கண்டு ஆனந்தமுற்ற மணிமேகலை புத்ததேவனை வாழ்த்தியதாகவுள்ள பகுதி யாகும்.

மணிமேகலையைப் பாடியவர் கடைச் சங்கப் புலவர் களில் ஒருவராகிய **சீத்தலைச்சாத்தனார்**. இவர் சீத்தலை என் னும் ஊரில் பிறந்தவர். இவருடைய சமயம் பௌத்தம். இவர் சேரன் செங்குட்டுவனுக்கு உற்ற நண்பராகவிருந் தவர். இவர் மதுரையில் கூலவாணிகம் செய்து வந்தமை யால் '**கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்**' என்று பெயர் பெற் றார். இவருடைய காலம் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலமாகும்.

"மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்காது"

— *சீத்தலைச்சாத்தனார்.*

குறிப்புரை.

மாரன் — இச்சைகளை மனத்தில் உண்டாக்கும் ஒரு தேவன்; தீ நெறிக் கடும் பகை—கொடிய வழிகளாகிய மிக்க பகைவர்; கடிதல்—நீக்குதல்; அறமுயலும்-புண்ணிய முண்டாதற்கு முயற்சி செய்யும்; துறக்கம்-சுவர்க்கம்; தொல்லோய்-பழமையானவனே; எண்-மக்கள் எண்ணங்கள்; பிறக்கு ஒழிய-பின்னாகப் போகும்படி; இறந்தோய்-கடந்தவனே; தீமொழி - பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்பன; மொழிக்கு-சொல்லைக் கேளாதிருத்தற்கு; வாய் மொழி - உண்மையான மொழி; நடப்போய் - (நரகலோகத்திற்குச்) சென்றவனே; உரகர்-நாகர்; நாகர்களுக்குக் கருடனாலுண்டான துயரத்தை நீக்கும் பொருட்டுப் புத்தர் அதற்குத் தருமோபதேசம் செய்தார் என்பது வரலாறு. வணங்குதல்-பணிதல்; வாழ்த்தல் — துதித்தல்.

(2) திருவருட்பா.

திருவருட்பா என்பது இராமலிங்க அடிகள் பாடிய தோத்திரப்பாடல்களின் தொகுதியாகும். இறைவனது திருவருளினால் பாடிய பாடல் என்றாவது, இறைவனது திருவருளைப் பெறுதற்குப் பாடியபாடல் என்றாவது இதற்குப் பொருள் கொள்ளலாம். இப்பாடல்கள் இனிமையும், எளிமையும் உடையன. கற்றார்க்கும் மற்றார்க்கும் களிப்பூட்டு

வன. இராமலிங்க அடிகள் பாடிய பாடல்களும் பிறவும் இப்பொழுது ஆறு திருமுறைகளாக வகுக்கப்பட்டு வழங்கி வருகின்றன.

இராமலிங்க அடிகள் சோழ நாட்டில் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூரில் கருணீகர் குலத்தில் பிறந்தார். இவரது தந்தை பெயர் **இராமையா பிள்ளை**; தாயார் பெயர் **சின்னம்மையார்**; சமயம் — சைவம். இவர் சில காலம் இல்லறத்திலிருந்து பின் துறவியானார். இறைவனருளால் கவி பாடும் திறம் பெற்றுப் பல தோத்திரப் பாடல்களைப் பாடினார். **வடலூர்** என்னும் பார்வதிபுரத்தில் இவர் தரும சாலை ஒன்று கட்டுவித்து அதில் நாள்தோறும் பலவகைத் தருமம் செய்து வந்தார். **மேட்டுக்குப்பம்** என்னுமிடத்தில் ஞானசபை ஒன்று தோற்றுவித்து, அங்கு வருகின்றவர்களுக்குச் சிவ நெறியைப் போதித்து வந்தார். அங்குள்ள **சித்திவளாகம்** என்னும் மாளிகையில் தான் இவர் முத்தியடைந்தார். இவருடைய காலம் கி. பி. 1823 முதல் 1874 ஆம் ஆண்டுவரையுமாகும்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே!
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே!
மேடையிலே வீசுகின்ற மேல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே! சுகத்திலுறும் பயனே!
ஆடையிலே எனைமணந்த மணவாளா! பொதுவில்
ஆடுகின்ற அரசே! என் அலங்கல்அணிந் தருளே!

— **இராமலிங்க அடிகள்**

குறிப்புரை.

தரு-மரம்; தீஞ்சுவை-இனிய சுவை, **பண்புத்தொகை**; சுகந்த மணம்—நறுமணம்; ஆடையிலே—கூத்து ஆடும்போது; பொதுவில்—மன்றம்; அலங்கல்—மாலை.

2. தமிழ்த்தாய் வாழ்த்து

தமிழ்த்தாய் வாழ்த்து என்பது, தமிழ் மொழியாகிய தாய்மொழியை வாழ்த்துவதாக அமைந்த பாடலாகும். இதனைப்பாடியவர் **யோகி சுத்தானந்த பாரதியார்**. இவர் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கிலுள்ள காட்டுப்புத்தூரில் அந்தணர் குலத்தில் 1897ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை பெயர் சடாதரனர்; தாயார் பெயர் **காமாட்சியம்மையார்**. இவருடைய பெற்ருேர் இவருக்கு இட்ட பெயர் **வேங்கடசுப்பிரமணியன்** என்பது. இவரது ஞானதீட்சையின் போது இவருக்கு '**சுத்தானந்தம்**' என்று பெயரிட்டனர். பின்னர் இவர் துறவியானபோது **பாரதி** என்று அழைக்கப்பட்டார். இவருடைய பள்ளித் தோழர் இவரை '**யோகி**' என்று அழைத்து வந்தனர். எனவே இவர் இப்பொழுது '**யோகி சுத்தானந்த பாரதியார்**' என்று அழைக்கப்படுகின்ருர்.

இவர் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நல்ல தேர்ச்சியுடையவர். பசுமலையில் ஆசிரியத் தொழில் பயின்று சில காலம் ஆசிரியராக வேலை பார்த்தார். இவர் சமய நூல்களை ஆராய்ந்து கிறித்துவ முதலிய எல்லாச் சமயங்களின் கொள்கைகளும் அமையும்படி '**பாரதசக்தி**' என்னும் மகா காவியத்தை இயற்றினர். இவர் இயற்றமிழேயன்றி, இசைத்தமிழிலும், நாடகத்தமிழிலும், வல்லவராய்ப் பல நூல்கள் எழுதி வருகின்ருர். இப்பொழுது இவர் தென்னுற்காடு சில்லாவிலுள்ள வடலூர் என்னும் ஊரில் இருந்து தமிழ் வளர்ச்சிக்கான பணிகளைச் செய்து வருகின்ருர்.

இன்னிசை அணிந்த பொன்னிளஞ் செல்வி!
இனிமையே தன்பெய ராளுள்:
மன்னுல கெல்லாம் வணங்கிடத் தக்க
போதுமறை யருளிய வாணி!

பன்மொழிக் குயர்ந்த தொன்மொழி யரசி!
பரமனின் வரம்பெற்ற புதல்வி;
தன்னிக ரற்ற தமிழெனு மமுதத்
தாய்மல ரடிபணிந் துய்வாம்!

—*யோகி சுத்தானந்த பாரதியார்.*

குறிப்புரை.

இன்னிசை-இனிமை+இசை, **பண்புத்தொகை**; **இனிமையே தன் பெயரானாள்**: தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருளாதலால் இவ்வாறு கூறினார். மன் உலகு-நிலைபெற்ற உலக மக்கள்; பொதுமறை-திருக்குறள்; வாணி-கலைமகள்; தொன்மொழி-பழமையான மொழி.

பயிற்சி வினாக்கள்.

மணிமேகலை

1. மணிமேகலையைப் பாடிய ஆசிரியர் யார்? அதில் கூறப்படும் செய்தி யாது? அதற்கு ஆசிரியர் இட்ட பெயர் யாது?

2. கடவுள் வாழ்த்தாக மணிமேகலையில் வந்துள்ள பகுதி யார் யாரைப் பாடியது? எப்பொழுது பாடியது?

3. மணிமேகலையில் புத்த தேவனது சிறந்த பண்புகளாகக் கூறப்படுவன யாவை?

4. புத்ததேவன் மாரனை வென்றமை, பிறர்க்கற முயன்றமை, துறக்கம் வேண்டாமை, கண்பிறர்க் களித்தமை, நரகர் துயர்கெட நடந்தமை, உரகர் துயரம் ஒழித்தமை—எவ்வெவ்வாறு?

5. 'தீமொழி' என்று கூறப்படுவன யாவை?

திருவருட்பா

1. திருவருட்பா என்பதன் பெயர்க்காரணம் என்ன? அது எவ்வாறு அமைந்துள்ளது?

2. திருவருட்பா ஆசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

3. இராமலிங்க அடிகள் இறைவனை எவற்றிற்கு ஒப்பிடுகின்றார்?

4. பொதுவில் ஆடுகின்ற அரசு யார்? ஆடக் காரணம் யாது?

5. இராமலிங்க அடிகள் இறைவனிடம் வேண்டுவது யாது?

தமிழ்த்தாய் வாழ்த்து

1. யோகி சுத்தானந்த பாரதியார் யார்? அவருக்கு இப்பெயர் எவ்வாறு ஏற்பட்டது?

2. சுத்தானந்த பாரதியார் இப்பொழுது எங்கு இருக்கிருர்? அவர் எழுதிய இயல், இசை, நாடக நூல்களில் ஒவ்வொன்று கூறுக.

3. தமிழ் மொழியின் தனிப்பண்புகளாக ஆசிரியர் குறிப்பிடுவன யாவை?

4. 'இனிமையே தன் பெயரானுள்' — விளக்குக.

5. 'தன்னிக ரற்ற தமிழெனு மமுதத் தாய்'—என்பதை ஆதாரம் காட்டி விளக்குக.

II. அறவுரை

1. நாலடியார்.

நாலடியார் என்பது, பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. நாலடி + ஆர் = நாலடியார்; நாலடி என்பது, நாலடியாலாகிய நேரிசை, இன்னிசை வெண்பாக்களைக் குறிக்கும். இங்கு அத்தகைய பாக்களால் ஆகிய நூலைக் குறிப்பதால், நாலடியார் என்பது கருவியாகு பெயர். ஆர் சிறப்புப்பற்றி வந்த அடைமொழியாகும். திருக்குறளிற் போல இந்நூலும் பால், இயல், அதிகாரம் ஆகிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களாக இதில் 400 பாடல்கள் உள்ளன. எனவே இதனை '**நாலடி நானூறு**' என்றுங் கூறுவர். இதற்கு முற்காலத்தில் **பதுமனார்** என்னும் புலவர் ஓர் உரையெழுதியுள்ளார். "**ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலுமிரண்டும் சொல்லுக்குறுதி**" என்பது இதன் சிறப்பை விளக்கும் பழமொழியாகும். நாலடியாரைப் பாடிய புலவர்கள் சமண முனிவர்களாவர். அவர்கள் காலம் கி. பி. 2ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலமாகும்.

அறன் வலியுறுத்தல்

உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்(கு)—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கை பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

கல்விச் செல்வம்

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்
எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

—சமண முனிவர்கள்.

குறிப்புரை.

1. உறக்கும்-மிகச்சிறிய; துணை-அளவு; ஈண்டி-வளர்ந்து; இறப்ப-அளவு கடந்து; பயந்தா அங்கு-தருதல்போல; அறப்பயனும்—அறஞ்செய்து அதனல் உண்டாகும் பயனும்; உம்மை, அசை நிலை; தான்-தன்னுற் செய்யப்பட்ட தருமம்; வான்-ஆகாயம்; போர்த்து-மூடி.

2. வைப்புழி-வைக்குமிடத்தில்; கோட்படா-கவர்ந்து கொள்ளப் படா; வாய்த்தீயின்-வாய்த்து + ஈயின், வாய்த்து-முறையாக; ஈயின்-கொடுத்தால்; கேடு-குறைவு; செறின்-கோபித்தால்; வவ்வார்-அபகரிக்க மாட்டார்; எச்சம்-மீந்த செல்வம்; விச்சை-வித்தை, கல்வி.

2. பழமொழி.

பழமொழி என்பது, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று, செய்யுள்தோறும் ஒவ்வொரு பழமொழியமையப் பாடப்பட்ட நானூறு வெண்பாக்களையுடைய இந்நூல் 'பழமொழி நானூறு' என்றும் வழங்கும். இதிலுள்ள பழமொழிகளில் சில இக்காலத்தில் வழங்காதனவாகும்; பல சிதைவின்றி இப்பொழுதும் வழங்கி வருகின்றன. இந்நூற் செய்யுளில் பெரும்பாலும் முதலிரண்டடிகளில் ஆசிரியர் கூற வேண்டிய பொருளும், மூன்ருவது அடியில் ஆடூஉ அல்லது மகடூஉ முன்னிலைத் தொடரும், இறுதியடியில் அப்பொருளை விளக்கும் பழமொழியும் அமைந்துள்ளன.

இந்நூலாசிரியர் **முன்றுறை** என்னும் ஊரையாண்ட ஒரு சிற்றரசராவர். ஆகையால் இவர் **முன்றுறையரையனர்** என்று அழைக்கப்பட்டுள்ளார். இவர் தமது பேரரசனகிய பாண்டியனை முன்னிலைப்படுத்தியே இந்நூலைப் பாடியுள்ளார். இந்நூற் சிறப்புப்பாயிரத்தில் '**பிண்டியின் நீழல் பெருமானடி வணங்கி**' என வரும் அடியால் இவர் சைன சமயத்தினர் என்று தெரிகிறது. இவருடைய காலம் கி. பி. 2ஆம் **நூற்ருண்டின் இறுதிக் காலமாகும்.**

சான்ருண்மை

1. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்ரோர்க் கணி.

தீவினையச்சம்

2. எனக்குத் தகவன்ருல் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானுய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணுர்
எனச்செய்யார் மாணு வினை.

— *முன்றுறையரையனுர்.*

குறிப்புரை.

1. *'அறிமடமும் சான்ரோர்க் கணி'* என்பது இதிலமைந்த பழமொழி. முல்லை-முல்லைக்கொடி; தொல்லை-முன்னுளில்; கேட்டறிதும்—காதால் கேட்டுள்ளோம்; சொல்லின்—ஆராய்ந்து சொல்லப் புகின்; நெறிமடல்-நெருங்கிய மடல்களையுடைய; நெடுநீர்ச் சேர்ப்ப-மிக்க நீரையுடைய கடல் நாடனே; அறிமடம்-அறிந்தும் அறியாது போன்று இருத்தல்.

2. *'காணுர் எனச்செய்யார் மாணு வினை'* என்பது இதிலமைந்த பழமொழி; தகவன்ருல்—தகுதியாகாது; ஆல்-அசைநிலை; நோக்கி-ஆராய்ந்தறிந்து; கரி-சான்று; தவற்றை-தன் குற்றத்தை; குறைத்தான்-வெட்டி வீழ்த்தினுன்; தென்னவன்-பாண்டியன்; மாணு வினை-மாட்சிமையில்லாத செயல்.

3. புறநானூறு.

புறநானூறு என்பது, சங்ககாலத்தில் தோன்றிப் பிற்காலத்தில் தொகுக்கப்பெற்ற எட்டுத்தொகை நூல்களில் ஒன்று; ஏனையவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு என்பனவாம். புறப்பொருள் பற்றித் தொகுக்கப்பட்ட நானூறு பாடல்களையுடைமையால் இந்நூல் 'புறநானூறு' என்று பெயர் பெற்றது. இது சுமார் 150 புலவர்களால் பாடப் பெற்றது. இதற்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனுராவர்.

புறநானூற்றில், பண்டைக்காலத் தமிழ்நாட்டிலிருந்த சேர, சோழ, பாண்டியர்களாகிய முடியுடை மூவேந்தர்களை யும், குறுநிலமன்னர், அமைச்சர், சேனைத்தலைவர், வீரர் முதலியவர்களையும், கடையெழு வள்ளல்களையும் பற்றிய வரலாறுகள் கூறப்படுகின்றன. இதனால் பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகத்தையும், பழக்கவழக்கங்களையும் நாம் அறியலாம். இதனைத் தொகுத்தோரும், தொகுப்பித் தோரும் இன்னாரென்று தெரியவில்லை.

கல்விச் சிறப்பு

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்,
மேற்பா லொருவனு மவன்கட் படுமே!

—ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்.

உயர்ந்தோர் தன்மை

உண்டால் அம்ம! இவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!

—கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி.

குறிப்புரை.

1. உற்றுழி-துன்புற்ற இடத்து; உறுபொருள்-மிக்க பொருளை; பிற்றைநிலை-வழிபாட்டு நிலைமை; முனியாது-வெறுக்காது; பிறப்போரன்ன-பிறப்பு ஒரு தன்மையாகிய; உடன்வயிற்றுள்ளும்-ஒரு வயிற்றில் பிறந்த பலருள்ளும்; சிறப்பு-கல்வி விசேடம்; மனந்திரியும்-மனம் வேறுபட்டு நோக்கும்; ஆறு-வழி; அரசு-அரசன்; வேற்றுமை தெரிந்த-வேறுபாடுற்ற; நாற்பால்-நான்கு குலம்; அவராவார் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர். கீழ்ப்பால்-கீழ்குலம்; அவன் கட்படும்-அவனிடம் சென்று வழிபடுவான்.

2. ஆல், அம்ம-அசைகள்; இந்திரர் அமிழ்தம்-தேவாமிர்தம்; இயைவது-கிடைப்பது; தமியர்-தனித்தவராய்; முனிவு-வெறுப்பு; துஞ்சல்-சோம்பியிருத்தல்; பழி-பழியொடு வந்த பொருள்; அயர்வு-சோர்வு; மாட்சி-தன்மை; நோன்தாள்-வலிய முயற்சி; முயலுநர்-முயற்சி செய்பவர்.

பயிற்சி வினாக்கள்

நாலடியார்.

1. நாலடியார் என்பதன் பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

2. நாலடியாரைப்பற்றி வழங்கும் பழமொழி யாது?

3. அறன் வலியுறுத்தல் என்பதன் பொருளையும், அதுபற்றிய செய்யுட் கருத்தையும் எழுதுக.

4. கல்விச் செல்வத்திற்கும், பொருட்செல்வத்திற்குமுள்ள வேறுபாடு யாது?

5. 'ஆலம்வித் தீண்டி, இறப்ப நிழற்பயந் தாஅங்கு'—உவமேயத்துடன் பொருத்திக் காட்டுக.

6. எச்சமென வொருவன் மக்கட்குச் செய்வன எது? அதற்குக் கூறப்படும் காரணம் யாது?

பழமொழி.

1. பழமொழியாசிரியரைப் பற்றிக் குறிப்பு வரைக.

2. பழமொழிப் பாடலின் அமைப்பு முறையை எழுதி உதாரணம் காட்டுக.

3. 'காணார் எனச்செய்யார் மாண வினை'—இப்பழமொழியினை விளக்கும் கதை யாது?

4. 'முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும்'—தந்தார் யார் யார்? வரலாறு தருக.

5. ஆடுஉ முன்னிலையாவது யாது? எடுத்துக்காட்டொன்றால் விளக்குக.

6. 'அறிமடமும் சான்றோர்க் கணி'—இதன் பொருள் யாது? இதனை விளக்கும் வரலாறு ஒன்று தருக.

புறநானூறு.

1. புறநானூறு என்பது யாது? அதனோடு வைத்து எண்ணப் படும் வேறு நூல்கள் யாவை?

2. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?

3. நெடுஞ்செழியன் கற்றலின் முறையை எங்ஙனம் விளக்கு கின்றான்?

4. கல்வியின் சிறப்பு புறநானூற்றுள் எங்ஙனம் கூறப்பெற்றுள் ளது?

5. 'உலகம் உண்டு' என்பதை இளம்பெருவழுதி எங்ஙனம் குறிப்பிடுகின்றார்?

6. உயர்ந்தோர் பண்புகளாகப் புறநானூற்றில் கூறப்படுவன யாவை?

III. கதை

1. வில்லிபாரதம்—கன்னபருவம்.

பாரதம் என்பது, பரதனது குலத்தில் தோன்றிய பாண்டவர் துரியோதனுதியர் வரலாற்றைக் கூறும் நூலாம். அதனை முதல் முதல் வியாசர் வடமொழியில் எழுதினர். அதற்கு '**வியாசபாரதம்**' என்று பெயர். அதன் மொழிபெயர்ப்பாக **வில்லிபுத்தூரார்** என்னும் புலவர் தமிழில் விருத்தப்பாவால் பாடிய நூலே **வில்லிபாரதம்** என்று பெயர் பெற்றது.

வில்லிபாரதத்தைப் பாடிய வில்லிபுத்தூரார் திருமுனைப்பாடிநாட்டில் சனியூரில் அந்தணர் குலத்தில் பிறந்தார். இவர் வடமொழி, தென்மொழி இரண்டையும் நன்கு கற்றவர்; சந்தஇன்பம் தோன்றக் கவி பாடுவதில் வல்லவர். **வக்கபாகை** என்னும் நகர்க்கு அரசனுன வரபதியாட்கொண்டான் வேண்டுகோளுக்கு இணங்கி இவர் இந்நூலைப் பாடி, அவனது அவைக்களத்தில் அரங்கேற்றினர். நன்றியறிதலாக இவர் தம்மை யாதரித்த அவ்வரபதியாட்கொண்டானை இந்நூலில் பல இடங்களிலும் புகழ்ந்து பாடியுள்ளார். இவருடைய காலம் கி. பி. 15ஆம் நூற்ருண்டாகும்.

வில்லிபாரதத்தின் பெரும் பிரிவிற்குப் **பருவம்** என்றும், சிறு பிரிவிற்குச் **சருக்கம்** என்றும் பெயர். வில்லிபாரதம் ஆதிபருவம் முதலிய பத்து பருவங்களையும், பல சருக்கங்களையுமுடைய 4351 பாடல்களைக் கொண்டது. இங்குப் பாடமாக வந்துள்ள **கன்னபருவம்** எட்டாவது பருவமாகும். அது பாரதப்போரில் துரியோதனன் சார்பில் கன்னன் பதினுறு, பதினேழாம் நாட்களில் சேனைத்தலைவனுக நின்று செய்த போரைப்பற்றிக் கூறுவது. இப்பாடப் பகுதி பதினேழாம் நாள் போர்ச்சருக்கத்தில் உள்ளது.

இதில் கன்னன் செய்த புண்ணியத்தின் காரணமாகப் போர்க்களத்தில் அவன் உயிர் நீங்காமல் இருக்க, அதனை அவனுக்கு எதிராகப் போர் செய்த அருச்சுன

னுக்குச் சாரதியாயிருந்த கண்ணன் அறிந்து அப்புண்ணியத்தை அவனிடமிருந்து தான் பெற்று அவனைப் போரில் வீழ்த்தக் கருதி, அவனிடத்து வந்து அவனை இரத்தலும், அவன் தன் புண்ணியமனைத்தையும் கண்ணனுக்கு ஈதலும், கண்ணனது திருக்கோலத்தைக் கண்டு மகிழ்தலுமாகிய செய்திகள் கூறப்படுகின்றன.

கண்ணன் கன்னனிடம் வருதல்

1. அத்தவெற் பிரண்டு விற்கிடை யெனப்போய்
ஆதவன் சாய்தல்கண் டருளி
முத்தருக் கெல்லா மூலமாய் வேத
முதற்கொழுந் தாகிய முதல்வன்,
சித்திரச் சிலைக்கை விசயனைச் "செருநீ
யொழி" கெனத் தேர்மிசை நிறுத்தி
மெய்த்தவப் படிவ வேதிய னாகி
வெயிலவன் புதல்வனை யடைந்தான்.

இயைந்ததொன்று அளிக்க வேண்டுதல்

2. "தாண்டிய தரங்கக் கருங்கட லுடுத்த
தரணியிற் றளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி நீயெனக் கேட்டேன்;
மேருவி னிடைத்தவம் பூண்டேன்;
ஈண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தேன்;
இயைந்ததோன் றிக்கணத் தளிப்பாய்;
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச்
சுடர்தரத் தோன்றிய தோன்றல்."

கன்னன் பாற் கண்ணன் விரும்பிய பொருள்

3. என்றுகொண் டந்த அந்தணன் உரைப்ப
இருசெவிக் கமுதெனக் கேட்டு
வென்றிகொள் விசயன் விசயவெங் கணையான்
மெய்தளர்ந் திரதமேல் விழுவோன்
நன்றெனா நகைத்துத் தரத்தகு பொருணீ
நவில்கென நான்மறை யவனும்

ஒன்றிய படிநின் புண்ணியம் அனைத்தும்
உதவுகேன் றலுமுள மகிழ்ந்தான்.

கன்னன் கூறுதல்

4. ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை
யகத்ததோ புறத்ததோ வறியேன்;
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந் தன்னில்வந் திலையால்
ஒவிலா தியான்செய் புண்ணிய மனைத்தும்
உதவினேன் கொள்கநீ யுனக்குப்
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றுற்
புண்ணியம் இதனினும் பெரிதோ!

கன்னன் தன் இதய இரத்தங் கொண்டு தானம் அளித்தல்

5. என்னமுன் மொழிந்து கரங்குவித் திறைஞ்ச
இறைஞ்சலர்க் கெழிலியே றனையான்,
கன்னனை யுவகைக் கருத்தினல் நோக்கிக்
"கைப்புன லுடன்றரு" கென்ன
அன்னவன் இதயத் தம்பின்வாய் அம்பால்
அளித்தலும் அங்கையால் ஏற்றான்;
முன்னமோ ரவுணன் செங்கைநீர் ஏற்று
மூவுல கமுமுடன் கவர்ந்தோன்!

வரங்கேட்குமாறு கண்ணன் கன்னனுக்குக்
கூறுதலும், கன்னன் கேட்டலும்

6. மல்லலந் தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து "நீ வேண்டிய வரங்கள்
சொல்லுக வுனக்குத் தருதும்" என் றுரைப்பச்
சூரன்மா மதலையுஞ் சொல்வான்
"அல்லல்வெவ் வினையால் இன்னமுற் பவமுண்
டாயினு மேழெழு பிறப்பும்
இல்லையேன் றிரப்போர்க் கில்லையேன் றுரையா
இதயம்நீ யளித்தருள்" என்றான்.

கண்ணன் வரம் அளித்தல்

7. மைத்துனன் உரைத்த வாய்மைகேட் டையன்
மனமல ருகந்துகந் தவனைக்
கைத்தல மலரான் மார்புறத் தழுவிக்
கண்மலர்க் கருணைநீ ராட்டி
"எத்தனை பிறவி யெடுக்கினும் அவற்றுள்
ஈகையுஞ் செல்வமு மெய்தி
முத்தியும் பெறுதி முடிவில்" என் றுரைத்தான்
மூவரும் ஒருவனும் மூர்த்தி.

கண்ணன் அளித்த காட்சி

8. போற்றிய கன்னன் கண்டுகேண் களிப்பப்
புணரிமோண் டெழுந்தகார் முகிலை
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதமும்
வயங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்முன் அன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன்.

கன்னன் அடைந்த மகிழ்ச்சி

9. அமரரா னவரும் அமரயோ னிகளும்
அமரருக் கதிபனு னவனும்
கமலநான் முகனும் முனிவருங் கண்டு
கனகநாண் மலர்கோடு பணிந்தார்;
"சமரமா முனையிற் றனஞ்சயன் கணையாற்
சாய்ந்துயிர் வீடவுஞ் செங்கண்
அமலநா ரணனைக் காணவும் பெற்றேன்"
என்றுதன் னகமிக மகிழ்ந்தான்.

கன்னன் தன் வாழ்க்கையில் வெற்றிகண்டு மகிழ்தல்

10 "தருமன் மகன் முதலான அரிய காதற்
றம்பியரோ டமர்மலைந்து தறுக ணுண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ்சோற்றுக் கடன்கழித்தேன்; தேவர்
கோவுக்(கு)

உரைபெறுநற் கவசமுங் குண்டலமும் ஈந்தேன்;
உற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்;
மருதிடைமுன் தவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே
மாதவத்தால் ஒருதமியன் வாழ்ந்த வாறே!"

குறிப்புரை

1. அத்த வெற்பு-சூரியன் மறையும் மேற்குமலை; விற்கிடை-வில் கிடக்கும் இடை, தூர அளவு; ஆதவன்-சூரியன்; முத்தர்-முத்தியடைந்தவர்; முதல்வன்-இறைவன், இங்குக் கண்ணன்; சித்திரம்-அழகிய; சிலை-வில்; விசயன்-அருச்சுனன். செரு-போர். ஒழிகென-ஒழிக + என, தொகுத்தல் விகாரம்; தவப் படிவம்-தவக் கோலம்; வெயிலவன் புதல்வன்-சூரிய புத்திரனாகிய கன்னன்.

2. தாண்டிய-மோதுகின்ற; தரங்கம்-அலை; வேண்டிய-விரும்பிய பொருளை: *வினையாலணையும் பெயர்;* தருதி-கொடுக்கின்றாய், முன்னிலை ஒருமை வினைமுற்று; ஈண்டிய-மிக்க; உழந்தேன்-அனுபவித்தேன்; இயைந்தது ஒன்று-(உன்னால்) கொடுக்கக் கூடியதொரு பொருளை; இக்கணத்து-இப்பொழுதே; கவனம்-நடை; துரகதம்-குதிரைகள்; சுடர்-சூரியன்; தோன்றல்-கன்னனே; *விளிவேற்றுமை.*

3. வென்றி-வெற்றி; விசயன்-அருச்சுனன் விசயவெம்கணை-வெற்றி பொருந்திய கொடிய அம்புகளால்; விழுவோன்-விழும் நிலையிலுள்ள கன்னன்; நவில்க-சொல்லுக; ஒன்றிய-(இதுவரை) சேர்ந்துள்ள.

4. வேண்டும் பொருள் எலாம்-வேண்டுவார் வேண்டும் பொருள்களையெல்லாம்; நயக்கும்-விரும்பிக் கொடுக்கும்; பக்குவம்-சமயம்; வந்திலையால்; ஆல், *அசைநிலை:* ஓவு இலாது-ஒழிதல் இல்லாமல்; பூவில் வாழ் அயனும்-தாமரை மலரில் வாழுகின்ற பிரமனும் பிரமன் அந்தணனாதலின் இவ்வந்தணனுக்கு அவனும் நிகரலன் என்றபடி; இதனினும்-உனக்குக் கொடுக்கும் இச்செயலினும்.

5. கரம்-கைகள்; இறைஞ்ச-வணங்க; இறைஞ்சலர்க்கு-தன்னை வணங்காத பகைவர்களுக்கு; எழிலி ஏறனையான்-மேகத்தில் தோன்றும் இடியை ஒத்தவனான கன்னன்; கைப்புனல்-கையினால் தாரை வார்க்கும் நீர் அன்னவன்-கன்னன், இதயத்து அம்பின் வாய்-தன் மார்பில் தைத்த அம்பின் வாய் வழியே வெளிவரும்; அம்பால்—செந்நீராகிய இரத்தத்தால்; முன்-முன் (வாமனாவதாரத்தில்), அவுணன்-மாவலிச் சக்கரவர்த்தி.

6. மல்லல் அம் தொடையல் - வளமிக்க அழகிய மாலையை யணிந்த; நிருபன் - அரசனாகிய கன்னன்; முனிவன் - அந்தணன்; சூரன்மா மதலை - சூரியபுத்திரனான கன்னன்; அல்லல் - பிறவித் துன் பங்களுக்குக் காரணமான; உற்பவம் - பிறப்பு.

7. மைத்துனன்-கன்னன்; உகந்து உகந்து-மிகவும் மகிழ்ந்து; கைத்தல மலரால்-கையாகிய மலரால்; மூவர்-சிவன், பிரம்மா, விஷ்ணு; ஒருவனும் மூர்த்தி-ஒன்றாயுள்ளவனான கண்ணன்.

8. புணரி-கடல் நீரை; கார் முகில்-கரிய மேகத்தை; மாற்றிய-வென்ற; பஞ்சவாயுதம்-ஐந்து படைகள்; அவையாவன சங்கு, சக்கரம் கதை, வாள், வில்; வயங்கு-விளங்கும்; கூற்று உறழ் கராவின்-எமனை ஒத்த முதலையின்; குஞ்சர ராசன் - கஜேந்திரன் என்னும் யானை; முடிவும் தோற்றமும் இலாத - இறப்பும் பிறப்பும் அற்ற; பைந்துளவோன்-பசுமையான துளசி மாலையை அணிந்த கண்ணன்.

9. அமரயோனிகளும்-ஏனைய தேவசாதிகளும்; அமரருக்கு அதி பனாவான் - இந்திரன்; கனம் - பொன்மயமான; நாள் மலர் - அன்று பூத்த மலர்: மா சமர முனையில் - பெரிய போர்க் களத்தில்; தனஞ்சயன்-அருச்சுனன்; அமலன்-குற்றமற்றவன்.

10. தருமன் மகன்-தருமபுத்திரன்; அமர் மலைந்து-போர் செய்து; தறுகண் ஆண்மை செருவில் - அஞ்சாமையோடு கூடிய வீரப்போரில்; தோழன்-துரியோதனன்; தேவர்கோ-தேவேந்திரன்; உரைபெறு-புகழ் பெற்ற; முன் - முன்பு (கிருஷ்ணாவதாரத்தில்); மருது இடை-இரட்டை மருத மரங்களினிடையே; வாழ்ந்த ஆறு ஏ-பெரு வாழ்வை அடைந்த விதம் என்னென்பது!

பயிற்சி வினாக்கள்.

1. பாரதம் என்பது யாது? வில்லிபாரதத்திற்கு முதனூல் எது? வில்லிபாரதம் பாடக் காரணமாயிருந்தவர் யார்?

2. வில்லிப்புத்தூராரைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

3. வில்லிபாரதத்தின் அமைப்பு முறையையும், அதிலமைந்த பாடப் பகுதியையும் குறிப்பிடுக.

4. கண்ணன் போர்க்களத்தில் மெய்த்தவப் படிவ வேதியனாகியது ஏன்? எப்பொழுது?

5. கண்ணன் கன்னனிடம் எவ்வாறு இரந்தான்? அப்பொழுது கன்னனுடைய நிலை யாது?

6. 'தூண்டிய கவனத்......தோன்றல்'—பதப் பொருள் தருக.

7. கன்னன் தன் நிலையை எங்ஙனம் கூறினான்?

8. 'பூவில் வாழ் அயனும் நிகரலன் என்றால்' —இல்லை பூவில் வாழ் அயன் யார்? அவன் யாருக்கு நிகரலன்?

9. கன்னன் கண்ணனுக்கு எவ்வாறு தான மளித்தான்?

10. கன்னன் கேட்ட வரம் யாது? அதனைக் கண்ணன் அவனுக்கு எவ்வாறு அளித்து அவனைத் தழுவிக்கொண்டான்?

11. கண்ணன் கன்னனுக்கு அளித்த காட்சி எங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளது?

12. கண்ணன் தோற்றத்தைக் கண்டு பணிந்து கொண்டவர் யார்? கன்னன் அதை எவ்வாறு கண்டு மகிழ்ந்தான்?

13. கன்னன் தன் வாழ்க்கையின் வெற்றியை எங்ஙனம் குறிப்பிடுகின்றான்?

14. பாரதத்தில் கண்ணனது எந்தெந்த அவதாரம் எவ்வெவ்வாறு எடுத்தாளப்படுகின்றது?

2. மனோன்மணீயம்.

மனோன்மணீயம் என்பது, ஆங்கில நாடகாசிரியரான **சேக்ஸ்பியர்** என்பவர் எழுதிய நாடக முறையைத் தழுவித் தமிழ்ச்செய்யுளில் எழுதியதோர் நாடக நூல். பிற்காலத் தமிழ் இலக்கிய உலகில் பலரும் தமிழ் நாடகநூல் எழுதுவதற்கு இதுவே வழிகாட்டி என்று கூறலாம். இதற்கு முதனூல் **இலீட்டன் பிரபு** ஆங்கிலத்தில் எழுதிய **இரகசியவழி** (The Secret way) என்னும் சிறு நூலேயாகும். இத்தமிழ் நாடகநூல் ஐந்து அங்கங்களையும், இருபது களங்களையும் கொண்டது. பாடமாக வந்துள்ள பகுதி இரண்டாம் அங்கம் முதற்களத்தில் உள்ளது.

மனோன்மணீயம் பாடிய **சுந்தரம் பிள்ளை** திருவாங்கூர் நாட்டிலுள்ள **ஆலப்புழை** என்னும் இடத்தில் சைவ வேளாளர் குலத்தில் 1855ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தை பெயர் **பெருமாள் பிள்ளை**; இவர் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் ஆங்கிலம் பயின்று 1876இல் பி. ஏ. பட்டம் பெற்றார். இவருக்குத் தமிழ் கற்பித்தவர் நாகப்பட்டினம் **நாராயண பிள்ளை** என்பவராவர். இவர் தமது 23ஆம் ஆண்டில் கோடகநல்லூர் **சுந்தரசுவாமிகளைக்** கண்டு, அவருக்கு மாணுக்கராயிருந்து தத்துவக்கலையில் தேர்ச்சி பெற்றார். 1880ஆம் ஆண்டில் இவர் எம். ஏ. தேர்வில் வெற்றி பெற்றார். பின்னர் தாம் பயின்ற திருவனந்தபுரம்

மகாராசா கல்லூரியிலேயே இவர் நீண்ட காலம் தத்துவ ஆசிரியராயும், சிலகாலம் அரசாங்க அலுவலாளராயும் இருந்து பணி புரிந்தார். அக்காலத்தில் அரசாங்கம் இவருக்கு "இராவ்பகதூர்" என்னும் பட்டத்தை அளித்து இவரைப் பெருமைப்படுத்தியது. இவர் கி. பி. 1897ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 26ஆம் நாள் இம்மண்ணுலக வாழ்வை நீத்தார்.

சீவகன் பாண்டிய நாட்டு மன்னன். இவன் தன்னுடைய அமைச்சனாகிய குடிலன் உபதேசத்தால் திருநெல்வேலியில் புதிதாகக் கோட்டை முதலியன கட்டி, மதுரையை விட்டு திருநெல்வேலியில் வந்து குடியிருந்தான். சீவகனின் ஒரே மகளான **மனோன்மணி** சேரநாட்டரசனை புருடோத்தமனைக் கனவில் கண்டு, அவனைக் காதலித்தாள். இதனை அவள் தோழியான **வாணியின்** மூலம் அறிந்த சீவகன் **சுந்தரமுனிவர்** என்னும் தம் குருவின் விருப்பப்படி புருடோத்தமனுக்கு அவளை மணமுடிக்கக் கருதி, அவன் எண்ணத்தையறிய குடிலனிடம் உபாயம் கேட்டான்.

இப்பகுதியில் நாஞ்சில் நாட்டுச் சிறப்பும், வளமும் நன்கு வருணித்துக் கூறப்பட்டிருப்பதுடன், தூதுவர் இலக்கணமும், சுந்தரமுனிவர், நடராசன் ஆகியோரைப் பற்றிய குடிலன் கருத்தும் அமைந்துள்ளன.

சீவகன் வினவும், குடிலன் கூறிய உபாயமும்

சீவகன் : நல்லது! குடில! இல்லை யுனைப்போல்
எங்குஞ் சூழ்ச்சித் துணைவர்.
பங்கமி லுபாய மேன்கோல்? பகரே.

குடிலன் : வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன் றுளதுஅதன்
அந்தமில் பெருவள மறியார் யாரே!
மருதமும் நெய்தலும் மயங்கியங் கெங்கும்
புரையறுசெல்வம் நிலைபெற வளரும்;

மழலைவண் டானம் புலர்மீன் கவர,
ஓம்புபு நுளைச்சிய ரேறிகுழை, தேன்பொழி
புன்னைநுண் தாதாற் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருந் திருஞ்சிறை புலர்த்தும்
அலைகடற் காக்கைக் கலக்கண் விளக்கும்;
கேதகை மலர்நிழல் இனமெனக் கருதித்
தாராத் தழுவிடச் சார்தரச் சிரித்த
ஆம்பல்வாய் கொட்டிடும் கோங்கலர் தாதே;
வால்வளை சூலுளைந் தீன்றவெண் முத்தம்
ஓதிமக் குடம்பையென் றுன்னுபு காலாற்
பருந்தினங் கவர்ந்துசென் றடம்பிடைப் புதைக்கும்,
கரும்படு சாலையின் பெரும்புகை மண்டக்
கூம்பிய நெய்தற் பூந்தளிர் குளிர
மேய்ந்தகல் காரா தீம்பால் துளிக்கும்;
அலமுகந் தாக்குழி யலமரு மாமை
நுளைச்சியர் கணவரோ டிழைத்திடு மூடலில்
வழித்தெறி குங்குமச் சேற்றிடை யொளிக்கும்;
பூஞ்சினை மருதிடை வாழ்ந்திடும் அன்றில்
நளிமீன் கோட்பறை விளிகேட் டுறங்கா;
வேயென வளர்ந்த சாய்குலைச் சாலியில்
உட்பார் பஃறி யொருநிரை பிணிப்பர்;
இப்பெருந் தேயத் தெங்கு மிராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறு.
கொண்மூ வெண்ணுங் கோள்கலங் கொண்ட
அமிழ்தினை யவ்வயிற் கவிழ்த்தபின் செல்புழி
வடியும்நீ ரேநம் மிடிதீர் சாரல்
நன்னீர்ப் பெருக்கும் முந்நீர் நீத்தமும்
எய்யா தென்று மெதிர்த்திடும் பிணக்கில்
நடுக்கடல் நன்னீர் சுவைத்திடு மொருகால்;
மரக்கலம் வந்திடும் வயற்கரை யொருகால்;
வாய்த்தலை விம்மிய மதகுபாய் வெள்ளம்
ஓமென வோவிறந் தொலிக்கப் பிரணவ

நாதமே தொனிக்குமந் நாட்டிடை யொருசார்;
நறுமலர்க் குவளையும் நானிறத் திரணமும்
படர்தரும் பழனக் கம்பளம் பரப்பித்
தாமரைத் தூமுகை தூமமில் விளக்கா,
நிலவொளி முத்துங் கவடியும் பணமா,
அலவன் பலவிர லாலாய்ந் தெண்ண,
துகிர்க்கா லன்னமும் புகர்க்கால் கொக்குஞ்
செங்கட் போத்துங் கம்புட் கோழியுங்
கனைகுரல் நாரையுஞ் சினமிகு காடையும்
பொய்யாப் புள்ளும் உள்ளான் குருகும்
என்றிவை பலவு மெண்ணில குழீஇச்
சிரஞ்சிறி தசைத்துஞ் சிறகை யடித்தும்,
அந்தியங் காடியின் சந்தங் காட்டித்
தந்தங் குழூஉக்குரல் தமைவிரித் தெழுப்பும்
பேரொலி யொன்றுமே யார்தரு மொருசார்;
வீறுடை யெருத்தினம் வரிவரி நிறுத்தி
ஈறிலாச் சகர ரெண்ணில ராமெனப்
பொன்னேர் பூட்டி நின்றவர் தம்மைப்
போற்றிய குரவையே பொலிதரு மொருசார்;
சேற்றிடை யடர்ந்த நாற்றடைத் தெடுக்குநர்
நாறுகூ றுக்குநர் வேறுபுலம் படுக்குநர்
நடுபவர் களைப்பகை யடுபவ ராதியாக்
கள்ளுண் கடைசியர் பள்ளும் பாட்டும்
தருமொலி பரந்தே தங்குவ தொருசார்;
குன்றென அரிந்து குவித்திடுஞ் செந்நெற்
போர்மிசைக் காரா காரெனப் பொலியக்
கறங்குங் கிணைப்பறை முழவுடன் பிறங்கும்
மங்கல வொலியே மல்குவ தொருசார்;
தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்குஞ்
சிறுமிய ரென்னவச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனல் கூசி
உடல்குழைந் தெங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்.

எனிலினி யானிங் கியம்புவ தென்னை?
அனையவந் நாடெலாம் அரச!மற் றுனக்கே
உரித்தென அங்குள பாடையே யுரைக்கும்.
சின்னா ளாகாச் சேரனாண் டிடினும்
இந்நாள் வரையு மந்நாட் டுரிமை
கொடுத்தது மில்லை,நாம் விடுத்தது மில்லை.
பண்டைநம் முரிமைபா ராட்டிட வென்றே
கண்டன னிப்புரி. ஆயினும் அதுவிம்
மணத்திற் குதவியாய் வந்தது நன்றே.
ஆதலி லவன்பால் தூதரை விடுத்துக்
கிழமையும் பழமையு மெடுத்துக் கிளத்தில்,
நாட்டிய நமது நகர்வலி சருதி
மீட்டும் விடுப்பினும் விடுப்பன். அன்றி
வாதமே பலவும் ஓதினு மொருவிதம்
ஒப்புர வாகா தொழியான். பின்னர்,
அந்நியோந் நியசமா தானச் சின்னம்
ஆகவோர் விவாக மாயின் நன்றெனக்
குறிப்பாற் பொதுவாய்க் கூறிடின்,
மறுத்திடா னுடன்மண முடிக்குதும் நன்றே;

சீவகன்: மெத்தவுங் களித்தோம்! உத்தமோ பாயம்
இதுவே! குடில! இதனால்
வதுவையும் நடந்ததா மதித்தேம் மனத்தே.

குடிலன்: அப்படி யன்றே செப்பிய உபாயம்
போது மாயினு மேகுந் தூதுவர்
திறத்தாற் சித்தி யாகவேண் டியதே.
வினைதெரிந் துரைத்தல் பெரிதல. அஃது
தனைநன் காற்றலே யாற்றல். அதனால்,
அன்புங் குடிமைப் பிறப்பு மரசவாம்
பண்பு மறிவும் பரவுநூ லுணர்வும்
தூய்மையும் மன்னவை யஞ்சாத் திண்மையும்
வாய்மையுஞ் சொல்லில் வழுவா வன்மையுந்
துணிவுங் காலமுங் களமுந் துணியுங்

குணமும், மந்திரத் தலைவர் துணைமையும்
உடையனே வினையாள் தூதனென் றோதினர்.
அன்ன தூதரை யனுப்பின் மன்னவ!
உன்ன தெண்ண முறுமே யுறுதி;
அன்றேனி லன்றே; அதனால்
வென்றிவை வேலாய் விடுவாய் தெரிந்ததே.

சீவகன்: அத்திறம் முற்றும் ஒத்தவ னாய்நமக்
குரிமை பூண்டநின் னருமை மகன்பல
தேவனே யுள்ளான். மேவலர் பலர்பால்
முன்னம் பன்முறை தூதிலும் முயன்றுளான்.
அன்னவன் றன்னை யமைச்ச!
ஏவிடத் தயையா யிசைவாய் நீயே.

குடிலன்: ஐய மதற்கேன்? ஐய என்னுடல்
ஆவியும் பொருளும் மேவிய சுற்றமும்
நினதே யன்றோ! உனதே வலுக்கியான்
இசையா தொழிவனோ! வசையறு புதல்வன்
பாலியன் மிகவும்; காரியம் பெரிது.

சீவகன்: பெரிதேன்? அங்கவன் பேசவேண் டியவெலாம்
விரிவா யெடுத்துநீ விளம்பி விடுக்கில்,
நலமாயுரைப்பன் நம்பல தேவன்.
வருத்த மிவையெலாங் கருத்தி லுணராது
உரைத்தனர் முனிவர். உதிய னவைக்கே
யோசனை யின்றி நடேசனை யேவில்
நன்றாய் முடிப்பனிம் மன்றல்
என்றார். அவர்கருத் திருந்த வாறே!

குடிலன்: குற்றமோ? அதுவுங் கொற்றவ! முனிவர்
அறிந்ததவ் வளவே யாகும். ஏழை!
துறந்தா ரறிவரோ, தூதின் தன்மை?
இகழ்ச்சியும் புகழ்ச்சியு மின்பமுந் துன்பமும்
எல்லா மில்லை; ஆதலா லெவருங்
கட்டுக கோவில், வெட்டுக ஏரி,
என்று திரிதரு மிவர்களோ நமது

நன்றுந் தீதும் நாடி யுரைப்பர்?
இராச்சிய பாண சூத்திரம் யார்க்கும்
நீச்சே யன்றி நிலையோ? நடேசன்
யோசனை நன்று! நடேசன்! ஆ! ஆ!
ஏதோ விவ்வயிற் சூதாப் பேதையர்
உள்ளம் மெள்ள வுண்டு மற்றவர்
அம்மை யப்பரை யணுகா தகன்று
தம்மையும் மறந்தே தலைதடு மாறச்
செய்யுமோர் சேவக முண்டுமேற் றவன்பால்.
ஐயமொன் றில்லை. அதனால் மொய்குழல்
மாதர்பாற் றூதுசெல் வல்லமை கூடும்.
பித்த னெப்படிச் சுந்தரர்க்கு
ஒத்த தோழனு யுற்றனன்! வியப்பே!
முனிவரும் வரவர மதியிழந் தனரே.

சீவகன்: இருக்கும், இருக்கும். இணையறு குடில!
பொருக்கெனப் போயுன் புதல்வற் குணர்த்தி
விடுத்திடு தூது விரைந்து;
கால விளம்பனஞ் சாலவுந் தீதே.

குடிலன்: ஈதோ அனுப்பினேன்; இன்றிம் மாலையில்
தூது செல்வான் தொழுதுன் னநுமதி
பெறவரு வான் நீ காண்டி;
இறைவ! மங்கல மென்றுமுன் னடிக்கே!

குறிப்புரை.

வரி. 1-3: சூழ்ச்சித்துணைவர்-ஆலோசனை கூறி உதவுபவர்; பகர்-சொல்; ஏவல் வினைமுற்று.

வரி. 4-8: வஞ்சிநாடு-சேரநாடு; நன்செய் நாடு-நாஞ்சில் நாடு; மயங்கி-ஒன்றுபட்டு; புரை-குற்றம்.

வரி. 9-13: மழலை-இளஞ்சொல்; வண்டானம்-நாரை; புலர் மீன்-உலர்ந்த மீன், கருவாடு; ஓம்புபு-பாதுகாத்து; நுளைச்சியர்-நெய்தல் நிலமகளிர்; குழை-காதணி; தாது-மகரந்தம்; புறம்-முதுகு; இருஞ்சிறை-கரிய இறகு; அலக்கண்-துன்பம்.

வரி. 14-25: கேதகை-தாழை; சார்தர-நெருங்க; வால்வளை-வெண்சங்கு; சூல் உளைந்து-கருக்கொண்டு முற்றி; ஓதிமக் குடம்பை

என்று உன்னுபு-அன்னத்தின் முட்டை என்று எண்ணி; அடம்பு-நெய்தல் நிலக் கொடி; கரும்படுசாலை-கருப்பஞ்சாறு காய்ச்சும் இடம்; கூம்பிய-குவிந்த; காரா-எருமை; துளிக்கும்-சொரியும்; அலமுகம்-கலப்பையின் நுனி; அலமரும்-வருந்தும்; ஊடல்-பிணக்கு, சிறு சண்டை.

வரி. 26-29: சினை-கிளை; அன்றில்-அன்றில் பறவை; ஆணும் பெண்ணும் இணைபிரியாது வாழும் ஒரு வகைப் பறவை இனம். நனி-நெருங்கிய; மீன்கோட்பறை-மீன் பிடிப்பதற்கு அடிக்கப்படும் பறை; விளி-முழக்கம்; வேய்-மூங்கில்; சாவி-நெல்; உப்பார் பஃறி-உப்பு மூடைகள் நிறைந்த ஓடம்; நிரை-வரிசை; பிணிப்பர்-கட்டுவர்.

வரி. 30-40: மாரி-மழை; கொண்மூ-மேகம்; கொள்கலம்-பாத்திரம்; அமிழ்து-மழைநீர்; மிடி-வறுமை; முந்நீர் நீத்தம்-கடல் வெள்ளம்; எய்யாது-பொருந்தாது; எதிர்த்திடும் பிணக்கில்-மோதிக் கலப்பதினல்; வாய்த்தலை-தலைவாய், முதலிடத்து; ஓம் என ஓ இறந்து-ஓம் என்ற ஒலியுடன் மதகுப் பலகையைக் கடந்து.

வரி. 41-55: இரணம்-உப்பு, உப்பளம்; பழனம்-வயல்; தூமம்-புகை; கவடி-சோவி; அலவன்-நண்டு; துகிர்-பவளம்; புகர்-மங்கியநிறமுடைய; போத்து-ஆண்மயில்; கம்புட்கோழி-சம்பங்கோழி; குழீஇ-கூடி; சிரம்-தலை; அந்தி அங்காடி-அந்திக் காலத்துக் கடைவீதி; சந்தம்-அழகு; ஒலி எனினுமாம். குழூஉ-கூட்டம்; ஆர்தரும்-நிரம்பும்.

வரி. 56-68: வீறு-இறுமாப்பு; இனம்-கூட்டம்; ஈறு-முடிவு, எல்லை; சகரர்-சகரபுத்திரர்; குரவை-குரவைக்கூத்து; பொலிதரும்-விளங்கும்; நாறு-நாற்று; படுக்குநர்-கொண்டு செல்வோர்; அடுபவர்-அகற்றுவோர்; கடைசியர்-உழத்தியர்; காரா-எருமை; கார்-மேகம்; கறங்கும்-ஒலிக்கும்; மல்குவது-நிறைவது.

வரி 69-73: தூவி-பீலி; நீவுதல்-தடவுதல்; உலப்பு-கேடு; பயிர் மயிர்-பயிராகிய மயிர்.

வரி. 74-92: பாடை-மொழி; இங்குப், பேசப்படும் தமிழ்மொழி என்பது; கண்டனன்-செய்தனன்; புரி-கோட்டை; கிளத்தில்-சொன்னல்; நாட்டிய-புதிதாகக் கட்டியுள்ள; மீட்டும்-திரும்பவும்; வாதம்-மறுப்பு; ஒப்புரவு-இணக்கம்; அந்நியோந்நியம்-ஒன்றுபட்ட; சின்னம்-அடையாளம்.

வரி. 93-111: உத்தமம்-மேன்மை; வதுவை-திருமணம்; செப்பிய-சொன்ன; சித்தி-கைகூடுதல்; வினை-உபாயம்; ஆற்றலே ஆற்றல்-செய்து முடிப்பதே வலிமை; அவாம்-விரும்பும்; மன்னவை-அரச சபை; திண்மை-மனவுறுதி; களம்-இடம்; துணியும்-முடியும் வகை ஆராயும்; மந்திரம்-ஆலோசனை; துணைமை-தோழமை; வினை ஆள் தூதன்-

வினையைச் செய்து முடிக்கும் தூதனுவான்; உறுதி-வெற்றி; வை வேல்-கூர்மையான வேல்.

வரி. 112-130: பலதேவன்-குடிலன் மகன்; மேவலர்-பகைவர்; இசைவாய்-சம்மதிப்பாய்; ஏவல்-கட்டளை; வசை-குற்றம்; முனிவர்-சுந்தர முனிவர்; உதியன் அவை-சேரமன்னன் சபை; நடேசன்-நடராசன், வாணியின் காதலன்; மன்றல்-திருமணம்.

வரி. 131-151: துறந்தார்—துறவிகள்; திரிதரும்—சுற்றித் திரியும்; நாடி-ஆராய்ந்து இராச்சிய பாண சூத்திரம்- இராச்சியத்தை ஆளும் பொருட்டு ஏற்பட்ட சாசனம்; நீச்சே-எட்டாத ஆழமுடையதே; நிலையோ-எட்டக்கூடியதோ; சூதா-வஞ்சகமாக; பேதையர்-பெண்கள்; தலைதடுமாற-மயங்கும்படி; சேவகம்-பணி, தொண்டு; பித்தன்-நடராசன்.

வரி. 152-159: இருக்கும் இருக்கும்-உண்மையாக இருக்கலாம்; இணை-ஒப்பு; விளம்பனம்-தாமதம், காலக்கழிவு.

பயிற்சி வினுக்கள்.

1. மனோன்மணீயம் என்பது யாது? அதற்கு முதநூல் எது? அதன் அமைப்பு முறையைக் கூறுக.

2. மனோன்மணீயம் பாடிய ஆசிரியரைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

3. நாஞ்சில் நாடு எங்குளது? அதன் வளம் எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

4. நாஞ்சில் நாடு மருதமும், நெய்தலும் மயங்கிய தென்பதற்கு இரு சான்றுகள் தருக.

5. இப்பகுதியில் நெய்தலுக்கும், மருதத்திற்குமுரிய மலர், புள், விலங்குகளாகக் கூறப்படுவன யாவை?

6. 'கரும்படுசாலை.........தீம்பால் துளிக்கும்' – இதன் பொருள் யாது?

7. 'அலமுகந் தாக்குழி அலமரு மாமை' — இதன் செயலாகக் கூறப்படுவது யாது?

8. அன்றில், பஃறி இவைபற்றிக் கூறப்படும் செய்திகள் யாவை?

9. 'நடுக்கடல் நன்னீர் சுவைத்திடு மொருகால்' — சுவைக்குமாறு எங்ஙனம்?

10. 'பிரவண நாதமே தொனிக்குமந் நாட்டிடை' — எங்ஙனம்?

11. நாஞ்சில் நாடு அந்தி யங்காடியாக வருணிக்கப்பட்டிருப்ப பதேன் ?

12. நாஞ்சில் நாட்டிடைக் கேட்கப்படும் ஒளிகளாக எவை கூறப் படுகின்றன ?

13. 'தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்கும் சிறுமி யரென்ன' — உவமேயத்துடன் பொருத்திக் காட்டுக.

14. புருடோத்தமனிடம் மணம் பேசுதற்குக் குடிலன் கூறிய உபாயம் யாது?

15. தூதுவர் இலக்கணமாகக் குடிலன் கூறியன யாவை ?

16. சீவகன் சுந்தர முனிவரை எங்ஙனம் நொந்துரைத்தான் ?

17. குடிலன் எங்ஙனம் சுந்தரமுனிவரையும், நடராசனையும் இகழ்ந்துரைத்தான் ?

18. 'இராச்சிய பாண சூத்திரம் யார்க்கும், நீச்சே யன்றி நிலை யோ'-இடஞ்சுட்டி விளக்குக.

IV. சிறு நூல்கள்.

1. தூது.

தூது என்பது, தமிழ் மொழியிலுள்ள சிறுநூல் வகைகளில் ஒன்று. இது ஒரு பாட்டாகவேனும், பல பாட்டுக்கள் சேர்ந்த ஒரு நூலாகவேனும் வழங்கும். ஒருவன் அல்லது ஒருத்தி தன் செய்தியைப் பாணன் முதலிய உயர்திணைப் பொருள்களோடேனும், நாரை, அன்னம் முதலிய அஃறிணைப் பொருள்களோடேனும் சொல்லித் தூது சென்று வருமாறு அனுப்புவதாகக் கூறுவது தூதின் இலக்கணமாகும். பாடமாக வந்துள்ள பாடல் **நாரைவிடு தூதா**கும்.

இத்தூதைப் பாடியவர் சத்திமுற்றம் என்னும் ஊரிலுள்ள ஒரு புலவர். அவரைச் '**சத்திமுற்றப் புலவர்**' என்று நூல்கள் கூறுகின்றன. சத்திமுற்றம் என்பது, சோழ நாட்டில் காவிரிக்கரையிலுள்ளதோர் ஊர். அப்புலவர் ஒரு நாள் பாண்டியனைக் காண மதுரைக்குச் சென்று, பாண்டியன் அரண்மனையினுள் நுழைந்தபோது, வாயிற் காவலர் தடுக்க, இரவில் அவ்வூர் அம்பலமொன்றில் தங்கித் தன் ஆதரவற்ற நிலையையும், சத்திமுற்றத்தில் இருந்த தன் மனைவியின் வறுமை நிலையையும் நினைந்து ஆகாயத்தில் கூட்டமாய்ப் பறந்து சென்றுகொண்டிருந்த நாரைகளுக்குத் தூதுரைப்போர் போல இப்பாடலைப் பாடினர் என்பர்.

நாராய் நாராய் செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் பெடையுந்
தென்றிசைக் குமரி ஆடி வடதிசை
காவிரி யாட ஏகுவி ராயின்,
சத்தி முற்றத்து வாவியிற் சேன்று
நனைசுவர்க் கூரை அரிகுரற் பல்லி

வரவுபார்த் திருக்கும் மனைவியைக் கண்டெங்
கோமான் வழுதி கூடன் மன்றத்(து)
ஆடை இன்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலுறத் தழீஇ
அலகுதிறந் தன்ன பல்லின ளாகிப்
பேழைசெய் பாம்பென வுயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டன மென்மே.

— *தமிழ் நாவலர் சரிதை.*

குறிப்புரை.

பழம் படு - பழமையான; பவளம் - பவளம் போன்று சிவந்த; பெடை - பெண் நாரை; குமரி - குமரிக்கடல்; வாவி - குளம்; இங்குக், குளக்கரையைச் சுட்டும். கூரை-சிறு குடிசை; அரிகுரல்-அழகிய சத்தத்தையுடைய; வழுதி-பாண்டியன்; கூடல் மன்றம்-மதுரையிலுள்ள அம்பலம்; மேல் உற-மேலே பொருந்தும்படி; அலகு-பறவையின் மூக்கு; பேழைசெய்-பெட்டியில் அடைக்கப்பட்ட; உயிர்க்கும்-பெருமூச்சு விடும்.

2. ஆற்றுப்படை.

ஆற்றுப்படை என்பது, தமிழ்மொழியிலுள்ள சிறுநூல் வகைகளில் ஒன்று; ஆறு - வழி; படை - படுத்துதல், செலுத்துதல்; அஃதாவது, பரிசு பெற்று மீளும் ஒரு புலவன் தன் எதிரே வறுமையால் வாடி வரும் மற்றொரு புலவனுக்குத் தான் பெற்ற அப்பரிசிலைக் கூறி, அப்பரிசில் தந்தோனிடத்திற்கு அவனை வழிகாட்டி அனுப்புவதாகப் பாடுவது. இது **பொருநராற்றுப்படை, பாணராற்றுப் படை, கூத்தராற்றுப்படை, புலவராற்றுப்படை, விறலியாற்றுப் படை** எனப் பலவகைப்படும். இங்குப் பாடமாக வந்துள்ள பாடல் **பாணராற்றுப்படையாகும்.** இதனைப் பாடியவர் இன்னார் என்று தெரியவில்லை. தனிப்பாடல் திரட்டில், இஃது கம்பர் பாடியதாகக் கூறப்பட்டுள்ளது.

தேருளைப் புரவி வாரணத் தொகுதி
திறைகொணர்ந் துவரு மன்னநின்
தேயமே தனது நாமமே துபுகல்!
செங்கை யாழ்தடவு பாணகேள்!
வாருமொத் ததுடி நீரும் நாமுமக
தேசன் ஆறைநகர் காவலன்
வான பூபதி மகிழ்ந்த ளித்தவெகு
வரிசை பெற்றுவரு புலவன்யான்!
நீருமிப் பரிசு பெற்று மீளவர
லாகு மேகுமவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆருநிற் குமுயர் வேம்பு நிற்கும்வளர்
பனையு நிற்குமதன் அருகிலே
அரசு நிற்குமர சைச்சுமந் தசில
அத்தி நிற்குமடை யாளமே!

—**தனிப்பாடல் திரட்டு.**

குறிப்புரை.

உளைப்புரவி–பிடரி மயிரினையுடைய குதிரை; வாரணத்தொகுதி–யானைக்கூட்டம்; திறை–கப்பம்; நாமம்–பெயர்; புகல்–கூறுக; ஏவல் **வினைமுற்று.** தடவு–பிடித்துள்ள; வாரும்–வருக; ஒத்த–சமமான; ஆறைநகர் ஆற்றூர்; வாணபூபதி-ஏகம்பவாணன் என்னும் மன்னன்; வரிசை–பரிசில்; பரிசு–தன்மை; ஏகும்–செல்லுவீராக; முன்றில்வாய்–முற்றத்திடம்; நித்திலம் முத்து; சிகரம்–உச்சி; மருங்கு-பக்கம்; ஆர்–ஆத்திமரம்; ஆத்தி மாலையையுடைய சோழன்; வேம்பு–வேப்பமரம், வேப்பம்பூ மாலையையுடைய பாண்டியன்; பனை–பனைமரம், பனம்பூ மாலையையுடைய சேரன்; அரசு அரசமரம், (பல நாட்டு) அரசர்கள்; அத்தி–அத்திமரம், யானைகள்.

பயிற்சி வினாக்கள்.

நாரை விடுதூது.

1. தூது என்பது யாது? அதன் இலக்கணத்தைக் குறிப்பிடுக.

2. சத்திமுற்றப் புலவரைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

3. சத்திமுற்றப் புலவர் நாரை விடுதூது பாடிய சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

4. நாரையின் வாய்க்கு ஆசிரியர் எதனை உவமையாகக் கூறி யுள்ளார்? விளக்கி எழுதுக.

5. நாரைவிடுதூதில் சத்திமுற்றப் புலவர் தம் மனையாள் நிலையையும், தம் நிலையையும் எங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்?

6. பேழை செய் பாம்பென—உவமேயந் தந்து விளக்குக.

7. நாரைவிடுதூதில் தூதிலக்கணம் எவ்வாறு அமைந்துள் ளது?

பாணராற்றுப்படை.

1. ஆற்றுப்படையின் இலக்கணம் யாது? அது பாடமாக வந் துள்ள ஆற்றுப்படையில் எவ்வாறு அமைந்துள்ளது?

2 ஆற்றுப்படை வகைகளில் ஐந்தினைக் குறிப்பிடுக.

3. பரிசில் பெற்று வரும் புலவனைக் கண்ட பாணன் யாது கருதி னன்? அவனைப் புலவன் எவ்வாறு உறவு கொண்டாடினன்?

4. பரிசு பெற்று வந்த புலவன் பாணனை ஆற்றுப் படுத்திய தெங்ஙனம்?

5. 'ஆருநிற் குமுயர்......அடை யாளமே'—இதற்குத் தெளி வான பொருள் தருக.

6. ஆர், வேம்பு, பனை, அரசு, அத்தி—இவற்றிற்கு இரு பொருள் தருக.

V. புனைந்துரை.

1. இசை இன்பம்.

இசையும் அதனாலுண்டாகும் இன்பமும் பற்றிய இப் பாடல்கள் **நாலாயிரதிவ்யப் பிரபந்தத்தில்** முதலாயிரத்தைச் சேர்ந்தனவாகும். இதனைப் பாடியவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான **பெரியாழ்வார்**. இவர் பாண்டிய நாட்டிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் அந்தணர் குலத்தில் வேயர் குடியில் பிறந்தார். இவருடைய தந்தை பெயர் **முகுந்தர்**; தாயார் பெயர் **பதுமை** என்பது. இவர் கடவுள் பத்தி, அடியார் பத்தியில் சிறந்து விளங்கினர். கண்ணபிரானுடைய பிள்ளை விளையாட்டுக்களை இனிய எளிய பாடல்களில் அமைத்துப் பாடியுள்ளார். இவருடைய பாடல்கள் '**திருமொழி**' என்று பெயர் பெறும். இது 461 பாடல்களையுடையது; இவர் பாடிய மற்றொரு நூல் '**திருப்பல்லாண்டு**' என்பது. ஸ்ரீஆண்டாளுக்கு இவர் தந்தையார். இவருடைய காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம்.

1. சிறுவிரல் கள்தட விப்பரி மாறச்,
　செங்கண்கோ டச்,செய்ய வாய்கோப் பளிக்கக்,
குறுவெயர்ப் புருவம் கூட லிப்பக்
　கோவிந்தன் குழல்கொடு ஊதின போது,
பறவையின் கணங்கள் கூடு துறந்து
　வந்து சூழ்ந்து படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
　கவிழ்ந்திறங் கிச்செவி யாட்டகில் லாவே!

2. கருங்கண் தோகை மயிற்பீலி யணிந்து
　கட்டிநன் குடுத்த பீதக வாடை
அருங்கல வுருவின் ஆயர் பெருமான்
　அவனொரு வன்குழ லூதின போது,
மரங்கள் நின்றுமது தாரைகள் பாயும்;
　மலர்கள் வீழும்; வளர்கொம் புகள்தாழும்,
இரங்கும், கூம்பும் திருமால் நின்றநின்ற
　பக்கம் நோக்கி அவைசெய்யும் குணமே!

குறிப்புரை.

1. தடவிப் பரிமாற - (வேய்ங்குழலில் துவாரமுள்ள இடத்தைத்) தேடிப் பரவ; கோட - வளைந்து தோன்ற; கொப்பளிக்க - (வாய் நீரைத் துளை வழியாய்ச்) செலுத்த; கூடலிப்ப - நெறிந்து ஏற; கோவிந்தன் - கண்ணன்; கணம் - கூட்டம்; துறந்து - விட்டுப் பிரிந்து; படுகாடு கிடப்ப - வெட்டி வீழ்த்தின காடு போல அசையாமல் இருக்க; கறவை - பசு; கால் பரப்பிட்டு - காலை நீட்டி; செவியாட்டகில்லாவே - செவி சாய்த்தன.

2. பீலி - இறகு; பீதகவாடை - பொன்னுடை; அருங்கலம் - அரிய ஆபரணம்; ஆயர் பெருமான் - கண்ணன்; மது - தேன்; கொம்பு - கிளைகள்; கூம்பும் - குவியும்; அவை செய்யும் குணமே - அம்மரங்கள் செய்கின்ற தன்மை இருந்தபடி என்னே!

2. மதிலும் அகழியும்.

பண்டைத் தமிழ்நாட்டு அரண்களில் மதிலும், அகழியும் முக்கியமானவை. நாட்டு வருணனை, நகர வருணனைகளில் புலவர்கள் இவை இரண்டினையுமே சிறப்பாக எடுத்துக் கூறுவர். இவ்வருணனைப் பாடல் **பிரபுலிங்க லீலையில்** உள்ளது. விளவல நாட்டின் தலைநகரமான **வனவசைமா** நகரத்தின் சிறப்பைக் கூற வந்த ஆசிரியர் அங்குள்ள மதிலின் உயர்வையும், அகழியின் தாழ்வையும் நல்லதோர் எடுத்துக்காட்டால் உயர்வு நவிற்சியாகக் கூறியிருப்பது படிப்போர் உள்ளத்தில் எளிதில் பதியத் தக்கதாம்.

பிரபுலிங்கலீலை என்னும் நூலைப் பாடியவர் **துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாவர்.** இவர் காஞ்சீபுரத்தில் தொண்டை மண்டல வேளாளர் குலத்தில் ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார். இவரது தந்தை பெயர் குமாரசாமி தேசிகர்; தாயார் பெயர் **சிவகாமியம்மையார்.** இவருக்கு வேலைய தேசிகர், கருணைப்பிரகாசர் என இரு சகோதரர்களும், ஞானம்பிகை என்னும் ஒரு சகோதரியும் இருந்தனர். இவர் சோணசைலமாலை முதலிய பிரபந்தங்களையும், பிரபுலிங்க லீலை முதலிய புராணங்களையும் பாடியுள்ளார்.

தாழ்ந்தோர் உயர்வ ரேன்றுமிக
வுயர்ந்தோர் தாழ்வ ரேன்றுமறஞ்
சூழ்ந்தோர் உரைக்கும் உரை கண்டாம்;
மதில்சூழ் கிடந்த தோல்லகழி
தாழ்ந்தோ ரனந்தன் மணிமுடிமேல்
நின்றன்(று); உயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையி னுதிப்பவன்றுட்
கீழ்நின் றதுபோய்ச் சூழெயிலே!

—*பிரபுலிங்கலீலை.*

குறிப்புரை.

அறம் சூழ்ந்தோர் - அறநூலை ஆராய்ந்தோர்; உரை - அறவுரையின் உண்மை; சூழ்கிடந்த (வனவசைமாநகரத்தைச்) சூழ்ந்திருந்த; தொல் அகழி - பழமையான அகழி; தாழ்ந்து தாழ்ந்ததினுல்; ஓர் அனந்தன் ஒப்பற்ற ஆதிசேடன்; நின்றன்று நின்றது; சூழ் எயில் - (வனவசைமாநகரத்தைச்) சூழ்ந்துள்ள மதில்; உயர்ந்து உயர்ந்ததினுல்; தடவரையைச் சூழ்ந்து - மேருமலையை வலமாக வந்து; ஏர் வரையின் உதிப்பவன் - ஒப்பற்ற உதயகிரியில் உதிக்கும் சூரியன்.

3. பாரத நாடு.

பாரத நாட்டினை வருணிக்கும் இப்பாடல் சுப்பிரமணிய பாரதியார் பாடிய **தேசீய கீதங்கள்** என்னும் பாடல் தொகுதியில் 'எங்கள் நாடு' என்னும் தலைப்பின் கீழுள்ள மூன்று பாடல்களில் ஒன்று. இதில் பாரத நாட்டின் பல்வேறு சிறப்புக்கள் கூறப்பெற்றுள்ளன. இதனைப் பாடிய தேசியக்கவி **சி. சுப்பிரமணிய பாரதியார்** இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்ப் புலவர்களில் முதன்மையானவர். நாட்டின் உணர்ச்சிக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் காரணமாயிருந்த இவர் 1882ஆம் ஆண்டில் பிறந்து, 1921ஆம் ஆண்டுவரை வாழ்ந்தார்.

மாரத வீரர் மலிந்த நன்னுடு,
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபோன் னுடு;
நாரத கான நலந்திகழ் நாடு,

நல்லன யாவையும் நாடுறு நாடு;
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு,
புத்தர் பிரான்அருள் பொங்கிய நாடு;
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே!

—பாரதியார் பாடல்.

குறிப்புரை.

மா - சிறந்த; மலிந்த - நிறைந்த; கானம் இசை; ஞானம் மெய்யறிவு; பொலிந்த - நிறைந்த; ஈடு - ஒப்பு.

பயிற்சி வினாக்கள்.

இசை இன்பம்.

1. இசையின்பம் பற்றிய பாடல் எந்நூலிலுள்ளது? அதைப் பாடிய ஆசிரியரைப்பற்றிக் குறிப்பு வரைக.

2. கோவிந்தன் குழல் கொடு ஊதிய சிறப்பு எங்ஙனம் வருணிக்கப்பட்டுள்ளது?

3. கண்ணன் குழலிசை கேட்டுப் பறவையினமும், கறவையினமும் எவ்வெவ்வாறு மயங்கின?

4. கண்ணன் குழலூதும் திருக்கோலம் எங்ஙனம் கூறப்பெற்றுள்ளது?

5. கண்ணன் குழலோசை கேட்டு மரங்கள் செய்தன யாவை?

மதிலும் அகழியும்.

1. பிரபுலிங்கலீலை, சிவப்பிரகாசர் — குறிப்பு வரைக.

2. 'அறஞ்சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்' —அறஞ்சூழ்ந்தோர் யார்? அவர் கூறிய உரை யாது?

3. வனவசைமாநகரத்தினைச் சூழ்ந்துள்ள மதிலின் உயர்வும், அகழியின் தாழ்வும் எங்ஙனம் கூறப்பெற்றுள்ளன?

4. "அகழி, தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல் நின்றன்று" —விளக்கம் தருக.

5. உயர்வு நவிற்சி யணிக்கு இப்பாடலிலிருந்து உதாரணம் தந்து விளக்குக.

பாரத நாடு.

1. பாரதியார், தேசீய கீதங்கள் — குறிப்பு வரைக.

2. பாரத நாடு பழம்பெருநாடு என்பதற்கு இரு சான்றுகள் காட்டி விளக்குக.

3. பாரதநாட்டின் பழம் பெருமைகள் யாவை?

4. "பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர்பி ரானருள் பொங்கிய நாடு" — பொருள் விளக்கம் தருக.

5. நன்னாடு, உறுநாடு, பாரதநாடு, பெருநாடு — இவற்றிற்குத் தொடர் இலக்கணம் கூறுக.

VI. பல்சுவை.

1. வீரத்தாயின் கடமையுணர்ச்சி.

பண்டைத் தமிழ்நாட்டில் ஆடவரேயன்றிப் பெண்களும் வீரமுடையவர்களாய் இருந்தன ரென்பதற்குச் சங்கநூல்களில் பல சான்றுகள் உள்ளன. இப்பாடல் **புறநானூற்றில்** உள்ளது. ஒரு வீரத்தாய் தன் கடமையும், தந்தை, கொல்லன், அரசன், மைந்தன் கடமைகளும் இன்னதென்பதை உணர்த்து முறையில் **பொன்முடியார்** என்னும் சங்ககாலப் பெண் புலவர் இப்பாடலைப் பாடியுள்ளார்.

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!

— புறநானூறு.

குறிப்புரை.

புறந்தருதல்-பேணிப் பாதுகாத்தல்; சான்றோன்-அறிவு நிரம்பியவன்; நன்னடை-ஒழுக்கம்; ஒளிறு-பிரகாசிக்கின்ற; அருஞ்சமம்-வெல்லுதற்கரிய போர்; முருக்கி-அழித்து; களிறு எறிந்து-யானைகளைக் கொன்று; பெயர்தல்-அழிதல்; காளை-இளமை பொருந்திய வீரன், உவமையாகு பெயர்.

2. தனிப்பாடல்.

ஒரு பாடலுக்கும் மற்றொரு பாடலுக்கும் தொடர்பின்றி, புலவர்கள் அந்தந்தக் காலத்திற்கேற்பப் பாடிய பாடல் 'தனிப்பாடல்' என்று பெயர் பெறும். **தமிழ் நாவலர் சரிதை, தனிப்பாடல் திரட்டு** முதலியன தனிப்பாடல்களமைந்த நூல்களாகும். மதுரையில் வணங்காமுடிப் பாண்டியன் பொய்யாமொழிப் புலவரைப் பார்த்து '**நீர் நல்ல புலவர்**' என்றபோது, அவர் தமது சிறுமையும்

திருவள்ளுவர், அகத்தியர் முதலியோர் பெருமையும் புலப்பட இப்பாடலைப் பாடினர்.

பொய்யாமொழிப்புலவர் தொண்டைநாட்டில் செங்காட்டங் கோட்டத்திலுள்ள உறையூரில் இற்றைக்கு முன்னூறு ஆண்டுகளுக்குமுன் பிறந்தார். வயிரபுரம் என்னும் ஊரில் கல்வி பயின்று இளமையிலேயே சிறந்த கவிபாடும் புலமையடைந்தார். இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. பொய்யாமொழி என்பது இவருடைய ஆசிரியர் இவருக்கு இட்ட பெயரென்பர்.

அறம்உரைத் தானும் புலவன்; முப்பாலின்
திறம்உரைத் தானும் புலவன்;— குறுமுனி
தானும் புலவன்; தரணி பொறுக்குமோ!
யானும் புலவன் எனில்.

— *தனிப்பாடல் திரட்டு.*

குறிப்புரை.

அறம் உரைத்தான் - சிவபெருமான்; முப்பாலின் திறம் உரைத்தான் - வள்ளுவன்; முப்பால் - திருக்குறள்; குறுமுனி - அகத்தியன்; தரணி - உலகம்.

3. சீதக்காதியின் கொடைத் திறன்.

சீதக்காதி என்பவர் ஒரு முஸ்லீம் வள்ளல்; அவரது இயற்பெயர் **ஷெய்கு அப்துல்காதர்** என்பது. அவர் பாண்டிய நாட்டில் **கீழக்கரை** என்னும் ஊரில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர்; புலவர்களை ஆதரித்துப் பரிசில் கொடுக்கும் இயல்புடையவர். அதனால் புலவர்கள் அவரைச் '**செத்தும் கொடுத்தான் சீதக்காதி**' என்று புகழ்வாராயினர்.

சீதக்காதியால் ஆதரிக்கப்பட்ட புலவர்களில் **படிக்காசுப் புலவரும்** ஒருவர். இவர் தொண்டை நாட்டில் **பொன் விளைந்த களத்தூரில்** செங்குந்தர் மரபில் பிறந்தார். இவர் தில்லைக்குச் சென்று கவி பாடியபோது சிவகாமியம்மை அருளால் பஞ்சாச்சரப்படிமீது பொற்காசு தோன்றிற்று என்றும்,

அவற்றைப் பெற்றதால் இவருக்குப் 'படிக்காசுப்புலவர்' என்று பெயருண்டாயிற்று என்றும் கூறுவர். இவரது இயற் பெயர் இன்னதென்று தெரியவில்லை.

ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும்
ஒக்க விற்கும்
கார்தட்டி யபஞ்ச காலத்தி லேதங்கள்
காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம லேயன்ன
தானத்துக்கு
மார்தட்டி யதுரை மால்சீதக் காதி
வரோதயனே!

— தனிப்பாடல் திரட்டு

குறிப்புரை.

ஒக்க - சமமாக; கார்தட்டிய - மழையில்லாது போன; காரியப்பேர் - காரியஞ் செய்பவர்கள், வேலைக்காரர்; தட்டினும் - தடைசெய்தாலும்; தட்டுவாராமல் - முட்டுப்பாடு இல்லாமல்.

4. கிறிஸ்துபெருமான் தந்த செபம்.

இப்பாடல் **யோகி சுத்தானந்த பாரதியார்** எழுதிய **பாரத சக்தி** என்னும் மகா காவியத்தில் இரண்டாவது காண்டமாகிய **தானவ காண்டத்தில்** கிறிஸ்து விஜயப் படலத்திலுள்ளது; ஆசிரியப்பாவாவில் அமைந்தது. இதனைக் கிறிஸ்தவர்கள் **'கர்த்தருடைய செபம்'** என்று சொல்லுவார்கள்.

சுத்தானந்த பாரதியார் இக்காலத்துப் புலவர்களில் ஒருவர்; இயல், இசை, நாடக மூன்றிலுமே வல்லவர்; எளிய இனிய நடையில் கவி பாடுபவர். சிறந்த எழுத்தாளர்; நல்ல பேச்சாளர்; ஆராய்ச்சித் திறன் மிகப் படைத்தவர். இவர் 1897ஆம் ஆண்டு பிறந்தார். இப்பொழுது தென்னாற்காடு சில்லாவிலுள்ள **வடலூர்** என்னுமிடத்தில் இருந்து தமிழ்ப்பணி புரிந்து வருகிறார்.

அன்புத் தந்தையே! ஆருயிர்க் குயிரே!
உன்பரஞ் சோதி உலகெலாம் விளங்குக;
எம்முண வளிக்கும் இறைவ, யாம் பகைவர்
தம்மைமன் னிப்பபோல் எம்மைமன் னிப்பாய்!
மற்றோர்க் கீயும் மாசறு மன்னை
யுற்றெமக் கீவாய்; உன்செய லாகுக;
ஏழைக் கிரங்கும் எம்பிரான் போற்றி!
வாழியுன் கருணை வையக மெங்கும்!
ஆசைப் பிணிகள் அணுகா தருள்க;
தேசுறு முன்பெருந் திருத்துணை தருக;
ஆவதும் போவது மனைத்துமுன் னிச்சையே;
தேவனே யுனதே திகழுல கெல்லாம்
உன்னரு ளோங்குக! உன்னிசை வாழ்க!
உன்னர சாட்சி உலகெலாம் பரவுக!

—*பாரத சக்தி.*

குறிப்புரை.

ஆருயிர் - அருமை + உயிர், பண்புத்தொகை; இனி, ஆர் + உயிர் எனப் பிரித்து வினைத்தொகையாகக் கொள்ளினுமாம். உணவு - சாப்பாடு; மற்றோர்-பரலோக வாசிகள்; மாசு அறும் - குற்றமற்ற; உற்று-பொருந்தி; வையகம் - உலகம்; தேசு - ஒளி; இச்சை - விருப்பம், சித்தம்; இசை - புகழ்.

பயிற்சி வினாக்கள்.

வீரத்தாயின் கடமையுணர்ச்சி.

1. புறநானூறு, பொன்முடியார்—குறிப்பு வரைக.

2. பண்டைத் தமிழ் நாட்டில் வீரப்பெண்களிருந்தனர் என்பதற்கு ஒரு சான்று தருக.

3. தாய், தந்தை, கொல்லன், மன்னன், மகன்—இவர்கள் கடமைகளாகக் கூறப்படுவன யாவை?

4. “ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே”—விளக்குக.

5. நன்னடை, ஒளிறுவாள், அருஞ்சமம்—தொடர் இலக்கணம் தருக.

தனிப்பாடல்

1. தனிப்பாடல் என்பது யாது? தனிப்பாடல்களமைந்த இரு நூல்களைக் கூறுக.

2. பொய்யாமொழிப் புலவர் எக்காலத்தினர்? அவரைப்பற்றி இரு வாக்கியங்கள் எழுதுக.

3. பொய்யாமொழிப் புலவர் குறிக்கும் சிறந்த புலவர்கள் யார் யார்?

4. 'அறம்உரைத் தானும் புலவன்; முப்பாலின்
திறம்உரைத் தானும் புலவன்'—இதற்கு விளக்கம் தருக.

5. பொய்யாமொழியார் தனிப்பாடலில் அவரது செருக்கின்மை எங்ஙனம் கூறப்பட்டுள்ளது?

சீதக்காதியின் கொடைத்திறன்.

1. சீதக்காதி யார்? அவரது இயற்பெயர் என்ன? அவர் எக் காலத்தவர்?

2. 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பதனால் அறியப்படும் உண்மை யாது?

3. படிக்காசுப் புலவர் பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுக.

4. சீதக்காதி காலத்துப் பஞ்சநிலை எங்ஙனம் கூறப்பெற்றுள் ளது?

5. சீதக்காதியின் கொடைத்திறனுக்கு ஒரு சான்று தருக.

கிறிஸ்து பெருமான் தந்த செபம்.

1. கிறிஸ்து பெருமான் தந்த செபத்திற்குக் கிறித்தவர்கள் என்ன பெயரிட்டு அழைக்கின்றனர்?

2. இச்செபம் பற்றிய பாடல் எந்நூலில் உள்ளது? பாடியவர் யார்?

3. சுத்தானந்த பாரதியாரைப்பற்றிச் சிறு குறிப்புத் தருக.

4. கிறிஸ்துபெருமான் தந்த செபத்தில் இறைவன் எவ்வெவ் வாறு விளிக்கப்படுகின்றார்?

5. அச்செபத்தில் தமக்காக விரும்பப்படுவன யாவை? பிறர்க் காக விரும்பப்படுவன யாவை?

6. "மற்றோர்க் கீயும் மாசறு மன்பை
யுற்றெமக் கீவாய்; உன் செயலாகுக."—விளக்கம் தருக.

7. ஆருயிர், மாசறு, தேசுறும், உன்னருள்—இவற்றைப் பிரித்து எழுதி, இவற்றுக்குத் தொடர் இலக்கணம் கூறுக.

உரைநடைக் கோவை

1. திருக்குறள் உரைப் பாயிரம்.

(பரிமேலழகர்)

இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி லின்பத் தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந் தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகை யாற் கூறப்படுவதல்லது, இலக்கணவகையாற் கூறப் படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்று மேயாம்.

அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டமென மூவகைப்படும்.

அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத் தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளி னின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்.

வழக்காவது ஒரு பொருளைத் தனித்தனியே எனதென தென்றிருப்பார். அது காரணமாகத் தம்முண் மாறுபட்டு அப்பொருண்மேற் செல்வது. அது கடன் கோடன் முதற் பதினெட்டுப் பதத்ததாம்.

தண்டமாவது அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற் பொருட்டு ஒப்பநாடி அதற்குத் தக வொறுத்தல்.

இவற்றுள் வழக்குந் தண்டமும் உலகநெறி நிறுத்து தற் பயத்தவாவதல்லது ஒழுக்கம் போல மக்களுயிர்க்கு உறுதிபயத்தற் சிறப்பிலவாகலானும், அவை தாம் நூலா

னேயன்றி உணர்வு மிகுதியானுந் தேயவியற்கையானும் அறியப்படுதலானும், அவற்றை யொழித்து, ஈண்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய ஒழுக்கமே அறமென வெடுத்துக் கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகளொழித்து, எல்லார்க்கு மொத்தலிற் பெரும் பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல்லறந் துறவறமென இருவகை நிலையால் கூறப்பட்டது.

அவற்றுள், இல்லறமாவது, இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கணின்று அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுவதாகலின், அதனை முதற்கட் கூறுவான் ரொடங்கினர்.

குறிப்புரை.

இறையவர் - தேவர்கள் ; பதம் - நிலை, இடம் ; அந்தமில் இன்பம்- எல்லையில்லாத இன்பம் ; எய்துதல் - அடைதல் ; மாந்தர் - மனிதர் ; உறுதி - நிலையான நன்மை ; உயர்ந்தோர் - பெரியோர் ; சிந்தை- மனம் ; மொழி - வாக்கு ; நிலைமை - தன்மை.

ஒழிதல் - செய்யாது விலகுதல் ; வழக்கு - வழக்கிடல் ; தண்டம்- தண்டித்தல் ; அந்தணர் முதலிய வருணத்தார் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ; வருணத்தார் - சாதியினர் ; பிரமசரிய முதலிய நிலை - பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்; பிரமசாரியம் - ஆசிரியனிடத்து கல்வி கற்று விரதங் காத்து விவாகமின்றி இருப்பது. அறம் - நல்லது இன்னதென்று வரையறுப்பது ; ஒழுகுதல் - நடத்தல்.

மாறுபட்டு - பகைகொண்டு ; அப்பொருண்மேற் செல்வது - அப்பொருளிடத்து ஆசை கொள்வது ; பதம் - வகை ; வழீஇயினர் - தவறி நடந்தவர் ; ஒப்ப நாடி - நடுவுநிலைமையாக ஆராய்ந்து ; ஒறுத்தல் - தண்டித்தல் ; பயத்தவாவது - பயனுடையதாவது ; உறுதி பயத்தல் - நன்மையைத் தருதல்; உணர்வு - அறிவு ; தேய இயற்கை – நாட்டு வழக்கம் ; ஒழித்து - நீக்கி ; ஈண்டு – இங்கு.

நால்வகை நிலை-நால்வகை ஆச்சிரமம்; அவையாவன பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம். ஒத்தல் பொருந்துதல்; முதற்கண்-முதலில்; கூறுவான்-சொல்லுதற்கு.

பயிற்சி வினுக்கள்.

1. பரிமேலழகர் யார்? உரைப்பாயிரம் என்பது யாது? விளக்கி எழுதுக.

2. மாந்தரின் சிறப்பு யாது? அவர்களுக்குரிய உறுதிப்பொருள்கள் யாவை?

3. "உறுதிப் பொருள்கள் நான்கனுள் நூல்களாற் கூறப்படுவன முதல் மூன்றுமேயாம்" — ஏன்?

4. அறமாவது யாது? அதன் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

5. அந்தணர் முதலிய வருணத்தார், பிரமசரிய முதலிய நிலை — யாவை?

6. ஒழுக்கநெறி, வழக்குநெறி என்பனவற்றை விளக்குக.

7. அறத்தின் வகைகளான ஒழுக்கம், வழக்கு, தண்டம் மூன்றனுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் சிறப்புடையதாகக் கொள்ளப்பட்டது எது? ஏன்?

8. அறவொழுக்கம் எத்தன்மையது? திருவள்ளுவர் அதனை எவ்வாறு பகுத்துக்கொண்டார்? ஏன்?

9. இல்லறம், துறவறம் இரண்டனுள் வள்ளுவர் இல்லறத்தை முதன்மையாகக் கொண்டது ஏன்?

2. சீவகாருண்ய ஒழுக்கம்.

(இராமலிங்க அடிகள்.)

சீவர்களுக்குப் பசியதிகரித்த காலத்தில் சீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது; அது மயங்கவே அறிவுக் கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது; அது மறையவே புருட தத்துவம் சோர்ந்து விடுகின்றது; அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது; அது மழுங்கவே, குணங்களெல்லாம் பேதப்படுகின்றன, மனம் தடுமாறிச் சிதறுகின்றது, புத்தி கெடுகின்றது, சித்தம் கலங்குகின்றது, அகங்காரம் அழிகின்றது, பிராணன் சுழல்கின்றது, பூதங்களெல்லாம் புழுங்குகின்றன, வாதபித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன, கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது. நா உலர்ந்து வரளுகின்றது, நாசி குழைந்து அழல்கின்றது, தோல் மெலிந்து ஸ்மரணை கெடுக்கின்றது, கை கால் சோர்ந்து துவளுகின்றன, வாக்குத் தொனி மாறிக் குளறுகின்றது, பற்கள் தளருகின்றன, மலசல வழி வெதும்புகின்றது, மேனி கருகுகின்றது, ரோமம் வெறிக்கின்றது, நரம்புகள் குழைந்து நைகின்றன. நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன, எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்கு விடுகின்றன, இருதயம் வேகின்றது, மூளை சுருங்குகின்றது, சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது, ஈரல் கரைகின்றது, இரத்தமும் சலமும் சுவறுகின்றன, மாமிசம் குழைந்து தன்னைக் கெடுக்கின்றது, வயிறு பகிரென்றெரிக்கின்றது, தாபசோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன, உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களும் அநுபவங்களும் மேன்மேலும் தோன்றுகின்றன: பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது சீவர்களுக் கெல்லாம் பொதுவாகவே இருக்கின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்த போது உண்டு பசி நீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்க

ளெல்லாம் தழைத்து, உள்ளங் குளிர்ந்து, அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் சீவ களையும் கடவுள் களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தியின்பம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டு பண்ணுகின்ற புண் ணியத்திற்கு எந்தப் புண்ணியத்தை இணை என்று சொல் லலாம்? இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர் களை எந்தத் தெய்வத்திற்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கு மேலாகிய கடவுளம்சமென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால் நரக வேதனை சனன வேதனை, மரண வேதனை என்கின்ற மூன்று வேத னைகளுங் கூடி முடிந்த வேதனையே பசிவேதனை யென்றும், அகம் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷ இன்பமே ஆகாரத்தினலுண்டாகும் திருப்தியின்பம் என்றும் அறியப் படும்.

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரம் குறித்து ஒருவரை யொருவர் எதிர்பார்க்க மாட்டார்கள்; எதிர்பாராத பக்ஷத் தில் உபகாரச் செய்கை தோன்ருது; அது தோன்ருதபோது சீவகாருணியம் விளங்காது; அது விளங்காதபோது கடவுளருள் கிடைக்க மாட்டாது. ஆதலால், பசியும் கடவு ளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவியென்றே அறிய வேண்டும்.

பசியினல் துன்பப்படுகிறவர்கள் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷமும் தாய் பிதா பெண்டு பிள்ளை காணி பூமி பொன் மணி முதலானவைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களாயின், ஆகாரம் உண்ட காலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக விருக்கும்? ஆதலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களும் கடவுளருளின் ஏகதேச சொரூபரூப சுபா வங்களாவே அறிய வேண்டும்.

பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான்

சீவகாருண்ணியம். பசியென்கிற விஷக்காற்ருனது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரம் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருண்ணியம். கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவதேகங்களென்ற ஆலயங்கள் பசியினுல் பாழாகுந் தருணத்தில் ஆகாரம் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே சீவகாருண்ணியம். கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற சீவரது தத்துவக் குடும்ப முழுதும் பசியினுல் நிலைதடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரம் கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருண்ணியம். பசியென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே சீவகாருண்ணியம். பசியென்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருண்ணியம். பசியென்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருண்ணியம், 'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாபி இன்றும் வருமே! இதற்கு என்ன செய்வோம்!' என்று ஏக்கங் கொள்கின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருண்ணியம். 'வெயிலேறிப் போகின்றதே, இனிப் பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது!' என்று தேனில் விழுந்த ஈயைப் போல, திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவதுதான் சீவகாருண்ணியம். இருட்டிப் போகின்றதே, இனி ஆகாரம் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்! என்ற விசாரத்தில் அழுந்திய ஏழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருண்ணியம். 'நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது: இனி இப்பாவி

வயிற்றுக் கென்ன செய்வோம்?' என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம். 'பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற் போக வெட்கந் தடுக்கின்றது, வாய்திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிக்கின்றது, உயிரை விடுவதற்கும் உபாயந் தெரியவில்லை: இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!' என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப்போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம். 'நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமது பசிக்குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை' என்று விவகரித்துக் கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச் சீவகர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம். தேக முழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து நினைத்து நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப்போல, அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப் பசி நெருப்பை அகற்றுவதே சீவகாருணியம். நேற்றுப் பட்டினி கிடந்தது போல் இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? நாம் பாலிய வசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத்துணிவோமாயினும் பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல, வார்த்திப திசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்து விடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த

முகத்தை எப்படிப் பார்ப்போம்?' என்று எண்ணி எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போல், பசி நெருப்பும் பய நெருப்பும் விசார நெருப்பும் உள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர்கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே சீவ காருணியம். 'கண் கை கால் முதலிய உருப்புகளிற் குறை வில்லாதவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றூர் கள்: குருடும் செவிடும் ஊமையும் முடமுமாக விருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும்! பசி எப்படி நீங்கும்!' என்று தனித்தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருணியம். பசியினுல் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச் சாதியாராயினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேச வொழுக்கம் சமய வொழுக்கம் சாதி யொழுக்கம் செய்கை யொழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம். சன்மார்க்க வொழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்து கொள்ளத்தக்க மிருகம் பறவை ஊர்வன தாபரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்த போது பசி நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்.

பசியை நிவர்த்தி செய்து கொள்ளத்தக்க புவன போக சுதந்தரங்களைப் பெறுதற்குரிய அறிவிருந்தும் பூர்வ கர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச்சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பசியினுல் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி வருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருணியம் என்கின்ற திறவுகோலைக்

கொண்டுதான் மோட்சமாகிய மேல் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அநுபவித்து வாழ வேண்டும். ஆகலில், சீவகாருணிய மென்கின்ற மோட்ச வீட்டுத் திறவு கோலைக் காலமுள்ளபோதே சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் சரியை கிரியை யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

குறிப்புரை.

சீவன்-உயிருள்ள உயர்திணை; அஃறிணைப் பொருட்கள்; சீவ அறிவு-உண்மை அறிவு; புருடதத்துவம்-ஆன்ம குணம்; பிரகிருதி தத்துவம்-பிறப்பாகிய குணம்; பேதப்படுகின்றன-வேறுபடுகின்றன; சித்தம்-அறிவு, நினைவு; அகங்காரம்-நான் என்பது; பிராணன்-உயிர்; பூதம்-பஞ்ச பூதங்கள் அவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன. புழுங்குதல்-நெருக்குதல்; பஞ்சடைந்து-மூடி; அழல்கின்றது-வெம்புகின்றது; ஸ்மரணை-உணர்ச்சி; வாக்குத் தொனி-பேச்சொலி; ரோமம்-உடலின் மயிர்; வெறிக்கின்றது-காய்ந்து போகின்றது; சுக்கிலம்-தாது; சுவறுகின்றன-வற்றிப் போகின்றன; தாபசோபங்கள்-துன்பமும் சோர்வும்; அநுபவம்-பழக்கம்; அவத்தை-துன்பம்.

தத்துவங்கள்-உட்கருவிகள்; தழைத்து-வளர்ந்து; சீவகளை-உயிர்நலம்; துளும்பி-நிறைந்து; இணை-ஒப்பு; அம்சம்-தன்மை, பங்கு; சனனம்-பிறப்பு; உபகாரச்செய்கை-உதவி; காணி-செல்வம்; சொரூபரூப-சொருப+அருப, வடிவும் வடிவில்லாமையும்; சுபாவம்-தன்மை; ஏகதேச-கிட்டத்தட்ட, ஏறக்குறைய; தருணம்-சமயம்.

கடுப்பேறி-விடமேறி, ஏக்கம்-வருத்தம்; சம்பவிக்கும்-உண்டாகும்; திகைப்பு-அச்சம்; விசாரம்-வருத்தம்; போது-நேரம்; உற்பாத சொப்பனம்-தீக்கனவு; மறுகுதல்-வருந்துதல்; மானி-மானமுள்ளவர்கள்; நேர்வார்-முன்வருவார்; விவகரித்துக் கொண்டு-நினைத்துக்கொண்டு; தூக்கம் பிடித்தல்-தூங்குதல்; விவேகி-அறிவுடையவன்; குறிப்பதும்-நினைப்பதும்; வார்த்திபதிசை-முதுமைப் பருவம்.

கன்னப்புடையில்-கன்னத்தில்; முடம்-நொண்டி; பேதித்து-வேருகக் கருதி; தாபரம்-மரஞ்செடிகள்; புவனபோகம்-உலக இன்பம்;

பூர்வ கர்மம்-பழவினை ; சாதன சகாயங்கள்-ஆதரமானவைகள் ; நித்திய முத்தர்-நிலையாக முத்தி பெற்றவர்கள்.

பயிற்சி வினாக்கள்.

1. சீவகாருண்ணிய ஒழுக்க மென்பது யாது? அதனை எழுதியவர் யார் ?

2. பசியினால் உண்டாகும் அவத்தைகளில் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்குக.

3. பசி நீக்குகை புண்ணியமாவ தெங்ஙனம் ?

4. பசி நீக்கியோர் சிறப்புக்களாகக் கூறப்படுவன யாவை ?

5. பசிவேதனையையும், பசிநீங்கியதாலுண்டாகும் திருப்தி இன்பத்தினையும் ஆசிரியர் எவற்றிற்கு ஒப்பிடுகின்றார் ?

6. 'பசியும் கடவுளால் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவியே யாகும்' — எங்ஙனம் ?

7. "ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்கள் கடவுளருளின் ஏக தேச சொரூப ரூப சுபாவங்களாகவே அறியவேண்டும்" — எங்ஙனம் ?

8. பசி எது எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது ? நான்கை விளக்குக.

9. பசியினால் வாடும் ஏழைச் சீவர்களின் நிலை எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது ?

10. "உற்பாத சொப்பனங்கண்ட ஊமையைப்போல்", "நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல", "கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போல்" — இடஞ்சுட்டி, உவமேயத்தோடு அந்தந்த உவமானத்தைப் பொருத்திக் காட்டுக.

11. சீவகாருண்யம் மோட்ச வீட்டின் திறவுகோல் என்பதை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகின்றார் ?

3. பண்டிதமணியின் மாண்பு.

(சித்தாந்த கலாநிதி பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி பிள்ளை)

முது பெரும்புலவர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் இந்த நூற்ருண்டில் சிறந்து விளங்கிய புலவர் பெருமக்களுள் தலைமையிடம் பெற்றுத் திகழ்ந்தவர். தமது தனியுழைப்பு ஒன்ருலே உயர்ந்த பெரியவர். செட்டிநாட்டிலுள்ள மகிபாலன்பட்டியில் தனவணிகர் குடியிற் பிறந்து தமிழிலும், வடமொழியிலும் நல்ல புலமை பெற்று உயர்ந்து அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்து தமிழ்ப்பணி புரிந்து ஓய்வு பெற்றுத் திருவாசகத்துக்கு உரையெழுதும் பணியை மேற்கொண்டு அது முடியுமுன்பே மறைந்து இறைவன் திருவடிப் பெருவாழ்வு பெற்ருர்,

மகிபாலன்பட்டிக்கு அப்பெயர் இடைக்காலச் சோழ மன்னர் காலத்தில் உண்டாயிற்று; அதற்கு முன்பெல்லாம் அவ்வூர் '**பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றம்**' என்று வழங்கி வந்தது. சங்ககாலத்துச் சான்ருேர்களுள் **கணியன் பூங்குன்றன்** என்னும் சான்ருேர் இவ்வூரினர்; "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று தொடங்கும் பாட்டு அப்பூங்குன்றனுருடையது. பரந்த புலமையும் சால்புமுடைய அத்தக்கோர் நிலவிய ஊரே நம் பண்டிதமணிக்கும் பிறந்த வூராய்த் தமிழ்ப் பெரும்புலமை யெய்துதற்கு ஏற்ற இடமாய் அமைந்தது. இஃது அவர்கள் கருவிலே வாய்த்த தமிழ்த் திருவாகும்.

சான்ருேர் பாராட்டும் தகவுடைப்புலமை எய்தியதும் பண்டிதமணியவர்கள் தாம் பயின்ற வடமொழிக்கண் சிறந்து நிலவிய நூல்களுள் **சுக்கிரநீதியைத்** தமிழில் மொழி பெயர்த்தார்கள். அதன்பின் **சுலோசன, மிருச்சகடிகம், உதயண காவியம்** ஆகியவற்றை இனிய தமிழில் மொழி பெயர்த்தார்கள். பண்டிதமணியவர்கட்கு முன்னேரும் பின்னேருமாகப் பலர் தோன்றி வடமொழிநூல்கள் மொழி

பெயர்த்தோர் உண்டு. அவர் பலரும் தமிழில் நிரம்பிய புலமையில்லாக் குறையால் கற்பவர் விரும்பத்தக்க நிலையில் அம்மொழிபெயர்ப்புக்களைச் செய்யும் திறம் குன்றினர். பண்டிதமணியின் மொழிபெயர்ப்புக்கள் முதனூலிலும் சிறந்த சொல்நலமும், பொருள்வனப்பும் கொண்டு சிறப்புற்றன. சுக்கிரநீதி, மிருச்சகடிகம் (மண்ணியல் சிறுதேர்) என்ற இரண்டன் மொழிபெயர்ப்புக்கள் அச்சாகி வெளிவந்துள்ளன.

இந்நிலையில் மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சங்கத்தை நிறுவி, ஆண்டுதோறும் விழாக்கள் நடத்துவதுடன் பல மாணவர்களை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நிறுவி நடத்திய தேர்வுகளுக்கு அனுப்பும் முறையில் கல்லூரி நிறுவி இடையறவின்றி நடைபெறச் செய்தது பண்டிதமணியின் கல்விப்பணியாகும். சன்மார்க்க சங்க நிகழ்ச்சிகளில் தமிழகத்தில் சிறந்து விளங்கிய தமிழ்ச் சான்றோர் பலரும் கலந்து இன்புறுவது வழக்கம். இப்புலவர் பெருமக்கள் பண்டிதமணி யவர்களின் புலமை நலத்தை வியந்து தம்மிற் கலந்து நல்கிய சிறப்புத்தான் '**பண்டிதமணி**' என்னும் பட்டம்.

பண்டிதமணி அவர்களின் பெரும் புலமை நலத்தை நேரில் கண்டு வியந்து பாராட்டி இன்புற்ற தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் த. வெ. உமாமகேசுவரன் பிள்ளை யவர்கள் வாயிலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் பண்டிதமணியவர்களின் புலமைச் சிறப்புணர்ந்து பல்கலைக் கழகத்திற் பேராசிரியராகக் கொண்டு பெருமையெய்தினர். அக்காலத்தே அவரது புலமை விளக்கத்தை அறிந்து இந்திய அரசியலார் அவருக்கு '**மகாமகோபாத்தியாயர்**' என்ற சிறப்புப் பெயர் தந்தனர்.

பண்டிதமணியவர்கள் "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" முற்றும் சுற்றி ஆங்காங்குள்ள தமிழறிஞர் கூட்டத்தில் இனிய சொற்பொழிவாற்றி இன்பம்செய்தவராவர். அவருடைய சொற்பொழிவு

எளிய நடையில் அரிய கருத்துக்களை இலேசாக உரைக்கும் இயல்பினதாகும். எல்லோரும் நன்கு தெரிந்த பாட்டேயாயினும் அது பண்டிதமணியவர்களின் சொற்பொழிவில் அகப்படின், அவர் அனைவரும் அதுகாறும் கேட்டிராத நயங்கள் பல உட்கொண்டிருப்பது வெளிப்பட்டுக் கேட்டார் உள்ளத்தைப் பிணித்து இன்பம் செய்யும். **பெரிய புராணம், சிலப்பதிகாரம், கம்பராமாயணம்** என்ற தொடர்நிலைச் செய்யுட்கள் வரலாறு கலந்தவையாகலின், இயல்பாகவே இனிமையுறச் சொல்லாடும் பண்டிதமணிபால் அவை பெரிய அறிவின்ப நிலையமாய்க் காட்சி யளிப்பது ஒரு புறமிருக்க, இறையன்பில் பேரீடுபாடு கொண்ட திருவாசகப் பாட்டுக்கள் வந்துவிடின், பண்டிதமணியவர்களின் சொன்னலம் காலமும் கருத்தும் கடந்து இறையின்ப வெள்ளத்தில் ஆழ்த்தி மகிழ்விக்கும் இயல்பிற்றாகும்.

பண்டிதமணியவர்கள் ஒரு கூட்டத்தில் தலைமை தாங்குகின்றார்கள் என்றால், சொற்பொழிவாளர் பலரும் மிக்க விழிப்புடன் தமது பணியை ஆற்ற முற்படுவர். சொற்பொழிவில் பொறுக்குமளவினும் மிக்க அளவில் குற்றம் நிகழின், அவற்றைக் கண்ணோட்டமின்றி எடுத்துக் காட்டுவதில் பண்டிதமணியவர்கள் பின்வாங்குவதில்லை. ஒருகால் அதுபற்றி அவரோடு சொல்லாட நேர்ந்தபோது அவர்கள் சொன்ன கருத்து மிக்க வியப்பை அளித்தது. அவர் சொன்னது: ‘ஒருவன் ஒருபொருள் பற்றிச் சொற்பொழிவு செய்ய வருகின்றான் என்றால், அவனுக்காகப் பலரும் தமது காலத்தை ஒதுக்கிக்கொண்டு வருவர். அக்காலம் அவர்களது வாழ்நாளின் ஒரு கூறு; அது கழிந்தால் மீளப் பெறலாகாதது. அதன் அருமையை எண்ணாது, குற்றம் நிறைந்த கருத்துக்களை ஒருவன் சிறிதும் சிந்தனையின்றிச் சொல்லி வீணாக்குவானாயின், அஃது அவனுக்கும், கேட்போருக்கும் நன்மை விளைவிக்காது; அவனை அது செய்யுமாறு நாம் விட்டுவிட்டால் மென்மேலும் காலக்கேடு செய்யும் குற்றம் பெருகும் என்பது பற்றியே யான் இவ்வாறு கண்டிக்கும் கடமையை மேற்கொண்டேன்’ என்றுகூறினார்.

சென்னையில் நடந்த தமிழ்க்கூட்டம் ஒன்றில் அரசிய லில் அமைச்சராம் செல்வாக்குப் பெற்ற ஒருவர் தமிழாசிரி யர்களைக் குறைகூறுவதில் ஓர் இன்பம் கண்டு, தமிழ்ப் புலவர்களுக்கு, க, கா என்ற இரண்டுக்குமேல் ஒன்றுந் தெரியாது; க என்பது கடவுள்; கா என்பது காதல் என் ருர். எல்லோரும் கைகொட்டி அமைச்சரின் அறி வுரையைப் பாராட்டினர். அதன்பின் அங்கே சொற் பொழிவாற்றிய பண்டிதமணியவர்கள் ''தமிழாசிரியர்க ளுக்கு க, கா என்ற இரண்டிற்குமேல் ஒன்றுந் தெரியாது என அமைச்சர் கூறுவது உண்மை; அதற்குமேல் இவர் அறிந்தது என்ன? இவ்வுலகில் கடவுளுக்கும், காதலுக் கும் மேலாக எப்பொருள் இருக்கிறது? இந்த வகையில் தமிழ்ப் புலவர்கள் மாத்திரமல்ல, இங்கிலீஷ் புலவர்க ளும் அரசியல் நிபுணர்களும் எல்லாரும் ஒன்றுதான். இந்த அறியாதவர் கூட்டத்தில் அமைச்சர் விலக்கல்ல'' என்று கூறினர்கள். எல்லோரும் பண்டிதமணியவர்களின் நுண் மாண்புலமையைப் பாராட்டிப் பரவினர்.

திருவாசகத்துக்கு உரை காண்பது என்பது நெடுங் காலமாகத் தமிழறிஞர்கள் உலகில் பேரச்சத்தை விளைத்துக் கொண்டிருந்தது. பின்னர் அறிஞர் சிலர் தோன்றி உரை யெழுதி வெளியிட முற்பட்டனர். அவ்வுரைகளுள் **மறைமலை யடிகள்** முதல் நான்கு பகுதிகட்கு எழுதியவுரை கற்றோ ரிடையே செல்வாக்குப் பெறுவதாயிற்று. ஏனைப் பகுதி கட்கு அவர் உரை வாராதாகவே, திரு. கா. சு. பிள்ளை யவர்கள் திருவாசக முழுவதிற்கும் உரைகண்டு வெளியிட் டார். அவ்வுரைக்குத் துணையாக அறிஞர் சிலர் உரை வகுத்து அளித்தனர். இந்நிலையில் பண்டித மணியின் திருவாசகச் சொற்பொழிவுகளின் நயங்கண்டு வியந்த அறிஞர் அவரையே திருவாசகத்திற்கு உரையெழுதுமாறு வேண்டினர். மறைமலையடிகள் எழுதிய பகுதிகட்கு மேலுள்ள **திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம்,** திருவெம்பாவை என்ற மூன்றுக்கும் பண்டிதமணியவர்கள் **கதிர்மணிவிளக்கம்** என்ற பெயரால் உரைகண்டு வெளியிட்டனர். அடுத்துள்ள

திருவம்மானையில் முதல் மூன்று செய்யுட்களுக்கு ஒரு வகையாக உரையெழுதி முடித்தற்குள் அவர்கள் இம் மண்ணுலக வாழ்வைத் துறந்து சென்றார்கள். திருவாசக முழுவதற்கும் உரை நிரம்புதற்குள் பண்டிதமணி மறைந் தது சைவத் தமிழுலகின் தவக்குறை யென்று சொல்ல வேண்டும்.

தமிழ், நம் தமிழ்நாட்டில் அரசியல் மொழியாதல் வேண்டும். அரசியல் அவைகளிலும், நீதி மன்றங்களிலும் தமிழ்மொழியே இடம் பெறல் வேண்டும். உயர்கலைகள் பலவும் தமிழிலே கற்பிக்கவும், எழுதவும் வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை நம் பண்டிதமணியவர்கள் அடிக்கடி கூறி வந்தனர். அவரது பெரும் பிரிவால் தமிழ் நாடு சால்புடைய தமிழ்ச்சான்றோரை இழந்தது; தமிழ் மக்கள் சிறந்த பேராசிரியரை இழந்தனர்; தமிழ்மொழி பிறமொழி நலங்களைத் தமிழாக்கி அணி செய்யும் தமிழ்ப் பெரும் புலவரை இழந்தது; தமிழ்ச்சமயமாகிய சைவம், எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்துக்குப் பெருமை சான்ற உரை கூறும் பெருமகனை இழந்தது. இன்னாதம்ம உலகம் !

குறிப்புரை.

திகழ்ந்தவர்-விளங்கியவர்; உழைப்பு-வேலை; புலமை-அறிவு; தமிழ்ப்பணி-தமிழுக்காகச் செய்யும் தொண்டு; சான்றோர்-அறிவுடையோர்; கேளிர்-நண்பர்; சால்பு-நிறை குணம்; தக்கோர்-பெரியவர்; நிலவிய-வாழ்ந்த; திரு செல்வம்.

தகவுடை-தகுதியுடைய; நிரம்பிய-நிறைந்த; குன்றினர்-குறைவு பட்டனர்; வனப்பு-அழகு; நிறுவி-ஏற்படுத்தி; இடையறவின்றி-இடையே தடையில்லாமல்; வடவேங்கடம்-வடக்கேயுள்ள திருவேங்கடமலை; தென்குமரி-தெற்கேயுள்ள குமரியாறு; ஆயிடை-அ + இடை, செய்யுளாதலால் அகரச்சுட்டு நீண்டது. நல்லுலகம்-தமிழ் நாடு; உட்கொண்டிருப்பது-தன்னில் பொருந்தியிருப்பது; சொல்லாடும்-பேசும்; நிலையும்-இடம்; இறையன்பில்-கடவுளுடைய அன்பினல்; பேர் ஈடுபாடு-மிக்க விருப்பம்.

ஆற்ற-நிறைவேற்ற; கண்ணோட்டம்-தாட்சணியம்; ஒருகால்-ஒரு தடவை; கூறு-பகுதி; சிந்தனை-ஆராய்ச்சி; செல்வாக்கு-புகழ்;

நிபுணர்-அறிஞர்; நுண் மாண் புலமை-நுட்பமான சிறந்த அறிவுடைமை; வாராதாகவே-வராததால்; துறந்து-விட்டு; நிரம்புவதற்குள்-முற்றுப் பெறுவதற்குள்; அவை-சபை, கூட்டம்; மன்றம்-சபை; பெரும்பிரிவு-சாவு; அணி-அழகு; சான்ற-நிறைந்த; இன்னது-துன்பமுடையது.

பயிற்சி வினுக்கள்.

1. பண்டிதமணி என்று யாருக்குப் பெயர்? அவருடைய பெருமை எத்தகையது?

2. பண்டிதமணியின் சொந்தவூர் எது? அதன் பழம் பெயர் யாது? அவ்வூரின் சிறப்பு என்ன?

3. "இஃது அவர்கள் கருவிலே வாய்த்த தமிழ்த் திருவாகும்"—இடஞ்சுட்டி விளக்குக.

4. பண்டிதமணியின் மொழிபெயர்ப்புக்கள் எவை? அவற்றின் சிறப்பியல்புகள் யாவை?

5. பண்டிதமணியின் கல்விப்பணி யாது? அவருக்குப் 'பண்டிதமணி' என்ற பட்டம் எவ்வாறு கிடைத்தது?

6. பண்டிதமணியின் பேராசிரியர் பதவிக்குக் காரணமாயிருந்தார் யார்? அரசியலார் அவரை எவ்வாறு பெருமைப்படுத்தினர்?

7. பண்டிதமணியின் சொற்பொழிவாற்றலைச் சுருக்கி எழுதுக.

8. பண்டிதமணி யாரையும் கண்ணோட்டமின்றிக் கண்டிக்கும் இயல்புடையவர் என்பதை விளக்குக.

9. பண்டிதமணியின் நுண்மாண் புலமைக்கு ஓர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

10. திருவாசகத்திற்கு உரை கண்ட பெரியார் யார் யார்? பண்டிதமணியின் உரையைப்பற்றிக் குறிப்பு வரைக.

11. பண்டிதமணியின் நாட்டுப்பற்று, மொழிப்பற்றினைக் குறிப்பிடுக.

12. பண்டிதமணியின் பிரிவால் யார் யாருக்கு என்னென்ன இழப்பு ஏற்பட்டுள்ளது?

4. நாகரிகம்.

(பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர், எம். ஏ.)

நாகரிகம் என்னும் சொல் நகரகம் என்னும் சொல்லி னின்று பிறந்தது. நகரகம் என்பது முறையே நகரிகம், நாகரிகம் எனத் திரிந்தது. ஆங்கிலத்திலும் நாகரிகம் பற்றிய வினை நகரப் பெயரினின்று பிறந்ததே [Civilise from Civitas (Latin) City].

நாகரிகம் என்னும் சொல் நாகர் என்னும் பெயரி னின்று பிறந்தது என்றும், நாகரென்பார் பண்டைக் காலத்தில் நாகரிகத்திற் சிறந்திருந்தனரென்றும், 'ஆயி ரத்தெண்ணூருட்டை முற்றமிழர்' (The Tamils 1800 years ago) என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது. நாகர் என்பார் பண்டைக் காலத்தில் நாகநாடெனப்பட்ட கீழ்த் திசை நாடுகளில் வாழ்ந்து வந்த ஒரு மக்கள் வகுப்பார். நாகவணக்கமுடைமையின் அவர் நாகரெனப்பட்டார். நாகருடைய நாடு நாகநாடு. நாகரில் நாகரிகரும் அநா கரிகருமான இரு வகுப்பார் இருந்துள்ளமையும், அவருள் நாகரிகரும் எவ்விதத்தும் தமிழரினும் உயர்ந்தவர் அல்லர் என்பதும் மணிமேகலையிலிருந்து அறியப்படும். ஆதலால், நாகரிகம் என்னும் சொல் நாகர் என்னும் பெயரடிப் பிறந்ததன்று.

நாகரிகம் என்பது 'திருந்திய வாழ்க்கை' எனப் பொருள் படும். திருந்திய வாழ்க்கை உலகத்தில் முதன் முதல் நகரத்தில் தோன்றினமையின் நாகரிகம் எனப் பட்டது. இக்காலத்தும் நாகரிகமில்லாதானைப் பட்டிக் காட்டானென்றும், நாட்டுப்புறத்தானென்றும் பழித்தல் காண்க. நகரமல்லாதது நாடும் பட்டியும்.

நாகரிகம் என்னுஞ் சொல்லைத் திருவள்ளுவர்,

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்னும் குறளில், கண்ணோட்டம் என்னும் பொருளில்

வழங்கியுள்ளார். இது பரிமேலழகர் உரையால் விளங்கும். கம்பரும் இச்சொல்லை இதே பொருளில் ஆண்டுள்ளார். கண்ணோட்டம் திருந்திய குணங்களில் ஒன்றாதலின் நாகரிகம் எனப்பட்டதென்க.

அறிவும் அதன் வழிப்பட்ட ஒழுக்கமுஞ் சேர்ந்து திருந்திய வாழ்க்கையாகும். ஒழுக்கமின்றி அறிவு மட்டு மிருப்பின், அது நாகரிகமாகாது அநாகரிகத்தின் பாற் படுவதேயாகும். ஒழுக்கமில்லாத கற்றோன் கற்ற மூடன் என இழித்திடவே படுவான். அறிவென்பது ஒழுக்கத் திற்குக் காரணமாகிய இயற்கையும், செயற்கையுமாகிய இருவகையாயிருப்பது. இவற்றுள், இயற்கையாவது குடிப்பிறப்பாலும், தெய்வத்தாலும் அமைவது; செயற்கை யாவது கல்வியாலும், நல்லினத்தாலும் உண்டாவது. ஒழுக்கமென்பது அகம், புறம் என்னும் இருவகைத் தூய்மை. இவற்றுள், அகத்தூய்மையாவது மனம், வாய், மெய் என்னும் முக்கரணங்களும் தூயவாயிருத்தல்; புறத்தூய் மையாவது உடம்பு, உடை, உணவு. காற்று, உறையுள் முதலியன தூயவாயிருத்தல்.

பரிமேலழகர் திருக்குறளுரைப் பாயிரத்தில், ஒழுக் கத்தைப்பற்றி, "ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வரு ணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளின்று, அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்" என்று கூறியுள்ளார். இஃது எல்லார்க்கும் பொதுவான உயர்தர வொழுக்கமன்று. இதை அவ்வுரை யாசிரியரே மீண்டும், "அதுதான் நால் வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின் சிறுபான்மை யாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து, எல்லார்க்கு மொத் தலிற் பெரும்பான்மையாகிய பொதுவியல்புபற்றி இல் லறந் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது" என்று நூலாசிரியர் கருத்திற்கேற்பக் குறித்துள்ளார். ஆதலால், ஒழுக்கம் என்பது எல்லார்க்கும் பொதுவான முக்கரணத் தூய்மையே யன்றிக் குலந்தோறும் வேறு பட்ட வரணச்சிரம தருமமன்று.

இல்லறத்தில் அகத்தூய்மையும், புறத்தூய்மையும் ஒரு நிகரவாயெண்ணப்படும்; துறவறத்தில், அகத்தூய்மை புறத்தூய்மையினும் பன்மடங்கு சிறந்ததாயெண்ணப்படும்.

ஒருவன் எத்துணை எளியவனுயிருப்பினும், தன்னை யும் தன்பொருள்களையும், உள்ளும் புறம்பும் தூயவாய் வைத்துக்கொள்வதே நாகரிகமாகும். கந்தையானாலும் கசக்கிக் கட்டுவதும், கூழானாலுங் குளித்துக் குடிப்பதும், குடிலானாலுங் கூட்டிக் குடியிருப்பதும் உயர்தர நாகரிகமே. அழகியனவும் விலையுயர்ந்தனவுமான உடைகளால் உடம் பைப் பொதிவதும், விலையும் சுவையுமிக்க உண்டிகளைப் பன்முறை யுண்பதும், மேனிலையும் அகலிடமுமுள்ள மாளி கைகளில் வாழ்வதும், வசதியும் விலையுயர்ந்தனவுமான ஊர்திகளிற் செல்லுவதும், இயந்திரத்தாலும் ஏவலாள ராலும் வினை செய்வதும், இன்னும் இவை போன்ற பிறவும், அறிஞரும் அறிவிலிகளுமான செல்வர்க்கேயுரிய ஆடம்பர வாழ்க்கையன்றி நாகரிகவொழுக்கமாகா. இவற்றை நாகரிகமென் றெண்ணுவது மேலைப் புது நாகரி கம் பற்றிய திரிபுணர்ச்சியாகும்.

மேலைக்கல்வி கற்று மேனுட்டுடை யணிபவரெல்லாம் நாகரிகத்திற் சிறந்தவரென்றெண்ணுவதும் அறியா மையே. கல்வி எம்மொழியினு மிருக்கலாம். உடை தட்ப வெப்ப நிலைபற்றித் தேசந்தோறும் வேறுபடுவதாகும். நாகரிகத்திற்கு இன்றியமையாத வேளாண்மை (பிறரை யுபசரித்தல்), விருந்தோம்பல், தாழ்மை முதலிய சிறந்த குணங்களை, மேலைநாகரிக மறியாத நாட்டு மக்களிடையே மிகுதியாய்க் காண்கிறோம்.

ஆகையால், நாகரிகமென்பது, செல்வர் வறியர் என்னும் இரு சாரார்க்கும் பொதுவான, துப்புரவும் ஒழுக்கமும் பற்றியதேயன்றி, செல்வர்க்கும் மேலை யொழுக் கத்தார்க்குமே யுரிய பொருள் அழகும் பெருஞ்செலவும் பற்றியதன்று.

திருந்திய உழவு, நுண் கைத்தொழில், நீர்வணிகம், போக்கு வரவுக்குரிய வாயில் வசதி, ஓவிய உணர்ச்சி, மொழி வளர்ச்சி, கலைப்பெருக்கம், திருந்திய அரசு, குலப் பிரிவின்மை முதலியன நாகரிகத்தின் சிறந்த அடை யாளங்களாம்.

மக்களை மற்றவுயிர் (பிராணி) களினின்றும் வேறு படுத்திக் காட்டுவது நாகரிகமேயாதலின், தம்மை உயர் திணையென்று கூறிக் கொள்வாரெல்லாம் நாகரிகமுடைய ராயிருத்தல் இன்றியமையாததாகும்.

குறிப்புரை.

அகம் — இடம்; வகுப்பார் — பிரிவினர்; பழித்தல் — இழிவாகப் பேசுதல்; பட்டி — கிராமம்; பெயக்கண்டும் - இட்டுவைக்கக் கண்டும்; அமைவர் — கூடிப் பழகுவர்; நயத்தக்க - விரும்பத்தக்க; கண்ணோட் டம் — கருணை; இழித்திட — இழிவாக நினைக்க; முக்கரணம் — மூன்று துணைக்கருவிகள்; உறையுள் — தங்குமிடம்.

வருணத்தார் — சாதியினர்; வருணச்சிரமம் — சாதிநிலை; நிகர வாய் — ஒரே தன்மையாக; குடில் — குடிசை; கூட்டி - சுத்தம் செய்து; பொதிவது — மூடுவது; உண்டி — உண்பொருள்; மேலை — மேலை நாட்டு; திரிபுணர்ச்சி — மாறுபட்ட அறிவு; தட்பம் — குளிர்ச்சி; வெப்பம் — வெம்மை; விருந்தோம்பல் — விருந்தினரை உபசரித்தல்; வறியர் — எளியவர்; துப்புரவு — தூய்மை; நீர் வணிகம் - கடல் கடந்த வியாபாரம்.

பயிற்சி வினாக்கள்.

1. நாகரிகம் என்னும் சொல் எதனடியாகப் பிறந்தது? அதற்குச் சான்று யாது?

2. நாகரிகம் என்னும் சொல் நாகர் என்னும் பெயரடிப் பிறந்த தென்பார் யார்? அது எவ்வாறு மறுக்கப்படுகிறது?

3. நாகரிகம் என்பதற்குப் பொருள் யாது? வள்ளுவர், கம்பர் ஆகியோர் அதனை எப்பொருளில் எவ்வாறு எடுத்தாண்டுள்ளனர்?

4. அறிவையும் அதன் வகையையும் ஆசிரியர் எங்ஙனம் விளக்கு கின்றார்?

5. ஒழுக்கத்தையும் அதன் வகையையும் ஆசிரியர் எங்ஙனம் குறிப்பிடுகின்றார்?

6. ஒழுக்கமென்பதற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் யாது? திருவள்ளுவர் கருத்து யாது?

7. உண்மை நாகரிகம் எது? எது நாகரிகமானது?

8. செல்வர்க்கேயுரிய ஆடம்பரவாழ்க்கை என்று ஆசிரியர் எவைகளைக் குறிப்பிடுகின்ருர்?

9. "இவற்றை நாகரிக மென்றெண்ணுவது மேலைப் புதுநாக ரிகம் பற்றிய திரிபுணர்ச்சி யாகும்" — எவற்றை?

10. நாகரிகத்திற்கு இன்றியமையாத பண்புகள் எவை?

11. நாகரிகத்தின் சிறந்த அடையாளங்கள் எவை?

12. "நாம் நாகரிகமுடையவராயிருத்தல் இன்றியமையாத தாகும்" — ஏன்?

5. அன்பும் அருளும்.

(வித்துவான் வ. தங்கையா நாடார்)

உலகில் நல்லொழுக்கத்தையும், அந்நல்லொழுக்கத்தைப் பயிலுதற்குரிய நன்னெறிகளையும் புகட்டி, உலக மக்கள் நல்வாழ்வு பெற்று வாழ்வதற்கு வழி வகுத்த பெரியார் பலராவர். அன்னார் ஓர் இடத்தில் உள்ளவரும் அல்லர்; ஒரு காலத்தில் பிறந்தவருமல்லர்; ஒரு சமயத்தினையோ, சாதியினையோ சேர்ந்தவருமல்லர்; அவர்கள் பல தேயங்களில், பலவேறு காலங்களில் தோன்றியவர்கள்; பல சமயங்களையும் ஆராய்ந்து, பல சாதியினரிடையேயும் நன்னெறிகள் பலவற்றை அவர்கள் விதைத்தவர்கள். அவர்களில் தமிழ்நாட்டிடையே தோன்றித் தமிழ்நாட்டின் பெருமையை உலகமறியச் செய்த தெய்வப்புலவர் **திருவள்ளுவர்** ஒருவராவர். அவர் ஆராய்ந்த குணங்களில் அன்பும், அருளும் சாலச் சிறந்தவையாகும். அவற்றைத் தாயும் சேயு மென்றல் மிகப் பொருத்தமுடையதாகும். திருவள்ளுவரும் '**அருளென்னு மன்பீன் குழவி**' என அவற்றிற்கு அம்முறையே பெயர் வைத்து வழங்கி இருப்பதுவும் நோக்கத்தக்கதாகும்.

மக்கள் வாழ்க்கையின் இயல்பினை இருகூறுகளாக வகுத்துக் கூறலாம். ஒன்று தனி வாழ்க்கை; மற்றொன்று சமுதாய வாழ்க்கை. இவை இரண்டும் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதன. இவைகளையே வள்ளுவர் 'இல்வாழ்க்கை' என்றும், 'துறவற வாழ்க்கை' என்றும் பாகுபடுத்திக் கூறியுள்ளார். ஒருவன் அவனிடத்தும், அவனோடு தொடர்புடைய அவன் மனைவி மக்களிடத்தும் கொள்ளும் விருப்பம் அன்புடைமையாகும். அதுவே ஒருவனுடைய தனிவாழ்க்கையில் காணப்படும் சிறந்த பண்பு. அப்பண்பு வளர்ச்சியுற்று முற்றிய நிலையே அருளுடைமை எனப்படும். இவ்வுண்மையை அறியாதார் வள்ளுவர் கூறிய துறவறவாழ்க்கையை முற்றுந் துறந்த முனிவர் வாழ்க்கையெனக் கருதி, அதற்கேற்பப் பொருள்

கூறிப் பிழைபடுவாராயினர். அன்பின்வழிப் பிறக்கும் அருளுடைமை, அன்புடைமைக்கு இருப்பிடமாகிய இல் வாழ்க்கையை அறியாத துறவிகளிடத்துப் பிறத்தல் எங் ஙனம்? ஆகையால், துறவறமென்று வள்ளுவர் கூறியது சமுதாய வாழ்க்கையைச் சுட்டுமென்பதே சாலப் பொருத்தமுடையதாகும். அதனால், ஒருவன் தன்னையும், பிறனையும் ஒன்று போல் கருதுவதே வாழ்க்கையின் குறிக்கோள் என்பது வள்ளுவர் கருத்தெனலாம்.

அன்புடைமை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் அன்பு ஒருவனிடம் உண்டா, இல்லையா என்பதை முதலில் ஆராய்கின்றார். 'அன்பு செய்யப்பட்ட ஒருவருக்குத் துன் பம் உண்டாகின்றது. அவரிடத்தில் அன்புடையாருக்கு அதனைக் காணும்போது ஆற்ற முடியவில்லை; அவரு டைய கண்களிலிருந்து கண்ணீர் வடிகின் றது. அவரிடத்திலுள்ள அன்புடைமையை அவருடைய கண்ணீரே காட்டிவிடுகின்றது' என்கிறார் வள்ளுவர். இத் தகைய அன்புடைமையின் சிறப்பியல்புகளெவை? வள் ளுவர் அவைகளை எங்ஙனம் கூறியுள்ளார்? அன்பில்லா தவரது பொருள் அவருக்கே பயன்படும்; அன்புடையார் அவருடைய பொருளாலே மட்டுமன்றித் தம் செயலா லும் அடுத்தவர்க்குப் பயன் படுவர். உடலோடு உயிரை ஒன்று படுத்துவது அன்பென்றே சொல்லவேண்டும். அன்பினால் பிறரிடத்தில் ஆர்வமுண்டாகின்றது. அதனால் நட்பு ஏற்படுகிறது. இல்வாழ்க்கையில் இருக்கின்ற வர்கள் அன்பினாலேதான் மறுமை இன்பத்தை அடைகின் றனர். அறஞ் செய்வதற்காக மட்டும் அன்பு உதவுமென்று கருதுதல் கூடாது; அது மறஞ் செய்வாரை நல்வழிப் படுத்தவும் உதவுகின்றது.

அதிகமான் நெடுமான் அஞ்சி ஒரு குறுநில மன்னன். ஔவையார் அவனால் அன்பு செய்யப்பட்ட அவனது அவைப் புலவர். கிடைத்தற்கரிய நெல்லிக்கனி ஒன்றை அதிகமான் பெற்றான். அதனுடைய பெருமையை அவன்

அறிவான். அதை உண்பவர்கள் நீண்டநாள் உயி ரோடிருப்பர். அதிகமான் தான் நீண்டநாள் உலகில் வாழவேண்டுமென்று விரும்பவில்லை. அவ னுல் அன்பு செய்யப்பட்ட ஔவையார் வாழவேண்டு மென்று அவன் கருதினுன். அப்பெண்பால் புலவற்கு அவன் அக்கனியைக் கொடுத்து மகிழ்ந்தான். இது அன்புடைமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதனுல் அன்பு டைமை எத்துணை இன்றியமையாதது என்று தெரிகின்ற தல்லவா? அன்பில்லாதவனை வள்ளுவர் பலவாறு தூற்று கின்ருர். என்பில்லாத உடலை வெயில் காயும்; அன்பில் லாதவனை அறக்கடவுள் காயும். அன்பில்லாதவன் உயிர் வாழ்க்கை பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்து நிற்பதை ஒக்கும். ஒருவனுக்கு இடம், பொருள், ஏவல் முதலிய எல்லா வசதிகளும் இருப்பினும் அவனது அகத்தே அன் பாகிய குணமில்லையேல் அவன் அவைகளைப் பெற்றும் பெருதவனுகவே கருதப்படுவான். ஆகையால் அன்பு முதலாக அதன்வழி நிற்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பு எனப்படும். அன்பில்லாத உடலை உயிர் இல் லாத உடம்பு என்றே சொல்லவேண்டும்.

அன்பை முதலாகக் கொண்டு ஈட்டப்படும் அருட் செல்வமே சிறந்த செல்வமென்னலாம். பொருட்செல் வம் அத்தகையதன்று. அது எல்லார்க்கும் பொதுவானது. அருட்செல்வம் ஒரு சிலர்க்கே அமையக் கூடியது. ஆகை யால், நாம் ஈட்டக்கூடிய செல்வம் அவ்வருட்செல்வமே யாகும். சமயங்களும் அவ்வாறே கூறுகின்றன. அருட் குணமுடையாருக்கு இன்பமேயன்றித் துன்பமென்பது ஒரு நாளும் இல்லை. அவரே உலகத்து உயிர்களைக் காக் கும் பேறு பெற்றவர். அருளுடையார் சமூகப்பணி புரி கின்றனர். சமுதாய நலனுக்காகப் பாடுபடுகின்றனர். அவர்கள் என்றும் இன்பமே அடைகின்றனர். அதற்கு உலகமே சான்ருகும். பாரி என்பவன் பறம்பு நாட்டிற்குத் தலைவன். அவன் ஒரு நாள் மலைவளம் காணும் பொருட்டு நகர்ப்புறத்தே சென்றிருந்தான். அங்கு அவன்

ஓரிடத்தில் தேரை நிறுத்தி, இயற்கை நலன்களைக் கண்டு களித்தான். மீண்டு வருகையில் முல்லைக்கொடியொன்று காற்றினால் அலைக்கப்பட்டு, வேறு கொழுக் கொம்பின்றி, அவனது தேரையே பற்றுக்கோடாகக் கொண்டு நிமிர்ந்து நின்றது. அதனைக் கண்ணுற்ற பாரி, அம்முல்லைக்கொடியிடத்தே அருளுள்ளம் காட்டி, அது அத்தேரைப்பற்றி நின்றே வளரும்படியாகத் தன் தேரை அங்கேயே விட்டு விட்டு, நகரத்திற்கு நடந்து சென்றான். மேகத்தைக் கண்டு தன் தோகையை விரித்தாடிய மயிலைக் குளிரினால் நடுங்குகின்றது என்று கருதிய பேகன் என்னும் பெருவள்ளல் அவனுடைய விலையுயர்ந்த பொன்னாடையால் அம்மயிலைப் போர்த்தான் என்று வரலாறு கூறுகின்றதல்லவா?

எனவே, அருள் இல்லாது பிற உயிர்களுக்குத் துன்பம் தருவோர் பொருள் அற்றவர்; அவர்கள் துன்பச் சூழலில் வாழ்கின்றவர் என்றே கருதப்படுவர். இவ்வுலக இன்பத்திற்குப் பொருளே காரணமாயினாற்போல, மறுமை இன்பத்திற்கு அருட் குணமே காரணமாகின்றது. பொருள் இல்லாதவர் மீண்டும் பொருள் பெற்று மகிழ்வர்; அருளில்லாதவரோ அதனை மீண்டும் பெறாது அழிவர். அறிவில்லாத ஒருவன் உண்மைப் பொருளை ஆராயப்புகின் அது அவனுக்குப் புலப்படாது; அது போல அருளில்லாத ஒருவன் அறஞ் செய்யத் துணிவது பயனற்ற செயலேயாகும். முடிவாக, வலியார் எளியார் எல்லாரிடத்தும் நாம் அருள் காட்டுவதற்கு வள்ளுவர் ஒரு வழி கூறுகின்றார்.

'வலியார்முன் தன்னை நினைக்க; தான் தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து'

என்பது எத்துணைச் சிறந்ததும் எளியதுமான நெறியாய் இருக்கின்றது, பார்த்தீர்களா?

அன்பும் அருளும் ஒன்றுபட்ட வாழ்க்கையே 'மனித வாழ்க்கை' என்றும், 'இன்ப வாழ்க்கை' என்றும் கூற

வேண்டும். அன்பு மட்டும் வாழ்க்கைக்குப் பயன்படாது; அருளும் உடனமைந்திருத்தல் வேண்டும். ஒருவன் எரிகோ என்னும் ஊரிலிருந்து எருசலேம் என்னும் நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றான், வழியிலே அவன் கள்ளர் கையில் அகப்பட்டுக் குற்றுயிராய் விடப்பட்டான். அவன் உடல் முழுவதும் காயமுற்றிருந்தது. இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அவ்வழியாக வந்த அவன் இனத்தவரில் இருவர் அவனைக் கண்டார்கள். அவனிடத்தில் கொண்டிருந்த அன்பினால் அவர்கள் அவன் நிலைக்கு இரங்கினார்கள். ஆயினும் அவனுக்கு உதவி செய்ய அவர்கள் முன்வரவில்லை. வந்த வழியே சென்றனர். சிறிது நேரம் கழிந்தது. அவனை அறியாத மற்றொருவன் அந்த வழியே ஒரு குதிரையின்மேல் ஏறி வந்தான். அவனது பெருமைக்கும், குற்றுயிராய்க் கிடப்பவன் சிறுமைக்கும் அதிக வேறுபாடு உண்டு. ஆயினும், அவன் காயமுற்றவனைக் கண்டதும் குதிரையிலிருந்து கீழே இறங்கினான். காயப்பட்டவன் காயங்களைக் கட்டினான். அவனைத்தன் குதிரையின்மேல் ஏற்றிக்கொண்டுபோய் அவனுக்கு. ஆதரவளித்தான். அன்போடு கூடிய அருளன்றோ அவனை இத்தகைய அறச் செயலுக்குத் தூண்டியது!

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அன்பும் அருளும் கலந்த இத்தன்மையைப் பற்றிக் கிறித்துவ வேதம் கூறுவது என்ன? "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கு இராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தையுடையவனாய் இருந்து சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத் தக்கதான சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கு இராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப் படுவதற்குக்

கொடுத்தாலும் அன்பு எனக்கு இராவிட்டால் எனக்குப் பிரயோசனம் ஒன்றுமில்லை.'

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமை இல்லை; அன்பு தன்னைப் புகழாது; இறுமாப்பாய் இராது. அயோக்கியமானதைச் செய்யாது; தற்புகழை நாடாது; சினமடையாது; தீங்கு நினையாது; அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும்; சகலத்தையும் விசுவாசிக்கும்; சகலத்தையும் நம்பும்; சகலத்தையும் சகிக்கும். தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம்; அறிவானாலும் ஒழிந்துபோம். அன்பு ஒருகாலும் ஒழியாது" என்றல்லவோ கூறுகின்றது! ஆகையால் நாம் நம்மில் அன்பு கொள்வது போலப், பிறரிடத்திலும் அன்பு கொள்ள வேண்டும்; நமக்காகப் பணி செய்வது போலச் சமூகத்திற்காகவும் பணி புரிதல் வேண்டும். அதுவே மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அன்பும், அருளுமாகிய இருபெரும் பண்புகளாகும்.

குறிப்புரை.

நெறி—வழி; சால—மிகவும்; குழவி—குழந்தை; கூறு-பகுதி; பாகு—பிரிவு; அடுத்தவர்—நெருங்கியுள்ளவர்; ஆர்வம்—ஆசை; மறம்—வீரம், தீமை; குறுநில மன்னன்—சிற்றரசன்; அவை சபை; எடுத்துக்காட்டு—உதாரணம்; துணை—அளவு; தூற்றுதல்—பழித்துக்கூறுதல்; அறக்கடவுள் அறம்; ஈட்டுதல்—சம்பாதித்தல்; சான்று—எடுத்துக்காட்டு; கொழு கொம்பு—ஆதரவு; பற்றுக்கோடு—துணை; தோகை—மயிலிறகு; குற்றுயிர்—குறை உயிர்; பாஷை—மொழி; தூதர்—தேவர்; தீர்க்க தரிசனம்—முக்காலமும் உணரும் தன்மை; விசுவாசம்—நம்பிக்கை.

பயிற்சி வினாக்கள்.

1. திருவள்ளுவரின் சிறப்பு யாது?

2. திருவள்ளுவர் ஆராய்ந்த குணங்களில் எவை சிறந்தனவாகும்? அவற்றின் தொடர்பினை அவர் எங்ஙனம் கூறுகின்றார்? நாம் எவ்வாறு கூறலாம்?

3. வாழ்க்கையின் இரு கூறுகள் எவை? அவற்றை வள்ளுவர் எங்ஙனம் வகுத்துள்ளார்?

4. அன்புடைமை, அருளுடைமைகளின் சிறப்புக்கள் எங்ஙனம் கூறப் பெற்றுள்ளன?

5. அதிகமான் நெடுமானஞ்சி, பாரி, பேகன்—இவர்களின் அரிய செயல்கள் எவை? இவற்ருல் அறியப்படும் பண்புகள் எவை?

6. அன்பும், அருளும் கலந்த செயலாகக் கூறப்படும் வரலாறு யாது?

7. அன்பு, அருள் இவற்றின் தன்மை கிறித்துவ வேதத்தில் எங்ஙனம் கூறப் பெற்றுள்ளன?

6. தமிழகத்துக் கோவில்கள்.

(திரு. புலவர், டாக்டர் மா. இராசமாணிக்கனர்)

கோவிலும் கல் வெட்டும் :—

"செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவை இல்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திர சித்தன் (மகேந்தர பல்லவன் — அப்பர் காலத்தவன்) அமைத்த கோவில் இது" என்னும் கல்வெட்டு, மண்டபப்பட்டு என்னும் இடத்துக் கோவிலிற் காணப்படுகிறது. இதன் காலம் கி. பி. 615–630 ஆகும். இக்கல்வெட்டால் அறியத்தக்க செய்திகளாவன :

1. மகேந்திரன் காலத்திற்கு முன் தமிழகத்தில் கற்கோவில்கள் இல்லை. இருந்த கோவில்கள் செங்கல், சுண்ணும்பு, மரம், உலோகம் இவற்ருல் ஆனவை.

2. மகேந்திரனுக்கு முன்னரே தமிழர் கோவில் கட்டத் தெரிந்திருந்தனர். ஆயின் அவை மண், மரம் முதலியவற்ருலாகி அழியத்தக்கன.

3. இங்ஙனம் அழியத்தக்க பொருள்களால் அமைந்த கோவில்களையே மகேந்திரன் கற்களிற் செதுக்கி அமைத்தான்.

தரையும், சுவர்களும் செங்கற்களால் ஆனவை; மேற்கூரை மரத்தால் ஆயது. அங்கங்கு இணைப்புக்காக ஆணிகள் முதலியன பயன்பட்டன. இங்ஙனம் அமைந்த கோவில்களே அவை. இத்தகைய கோவில்களை இன்றும் மலையாள நாட்டிற் காணலாம். இங்ஙனம் கோவில்களை அமைப்பதில் தமிழர் பண்பட்டிராவிடில், திடீரெனக் கி. பி. 7ஆம் நூற்ருண்டிலிருந்து பல கோவில்கள் தமிழ் நாட்டில் தோன்றிவிட்டன எனல் பொருளற்றதாய் விடும்.

"விமானங்கள், 'தூயது, கலப்பு, பெருங்கலப்பு' என மூவகைப்படும். கல், செங்கல், மரம் முதலியவற்றில்

ஒன்றைக்கொண்டே அமைக்கும் விமானம் 'தூய விமானம்' எனப்படும். இரண்டைக்கொண்டு அமைவது 'கலப்பு விமானம்' எனப்படும். பல பொருள்களால் அமைவது 'பெருங்கலப்பு விமானம்' ஆகும்" என்பது கட்டடக்கலைநூல் கூற்றுகும். இதனுலும் பண்டைக்காலத்திற் கோவில்கள் இருந்தமையும், விமானங்கள் உண்மையும் அறியலாம்.

சங்ககாலத்துக் கோவில்கள் :—

பண்டைத் தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திலே வீரர் வணக்கத்துக்குரிய கோவில்கள் இருந்தன. முருகன், திருமால், காடுகிழாள் முதலிய தெய்வங்கட்குக் கோவில்கள் இருந்தன. தொகை நூல்களில் சிவபெருமான், முருகன், திருமால், பலராமன் இவர்கள் சிறப்புடைக் கடவுளராகக் கூறலை நோக்குக. ஆலமர் செல்வதற்கு நீல நாகம் நல்கிய கலிங்கத்தை, ஆய்வேள் அளித்தனன் என்று புறநானூறு புகலல் காண்க. இதனுல் அக்காலத்தில் கோவிலும், கடவுள் உருவச்சிலையும் இருந்தமை நன்கறியலாம். கி. பி. 2ஆம் நூற்றுண்டில் இயற்றப்பெற்ற சிலப்பதிகாரத்தும், மணிமேகலையிலும் காணப்படும் கோவில்கள் பல. மணிமேகலையில்,

"காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்"

என வரும் அடிகள்—வீரர், அருந்தவர், அரசர், பத்தினிமார் இவர்க்குக் கோவில்கள் இருந்தமை வலியுறுத்துகின்றன. சுடுமண் (செங்கல்) கோவில்கள் குன்றுகள் போல உயர்ந்திருந்தன என்பது அறியத்தக்கது.

தேவார காலத்துக் கோவில்கள் :—

தேவார காலத்தில் தமிழகத்தில் ஏறத்தாழ 200 கோவில்கள் இருந்தன. அவை அனைத்தும் மரம், செங்கல், மண், உலோகம் இவற்ருல் ஆனவை. அவை (1) பெருங் கோவில் (2) இளங்கோவில் (3) மணிக்கோவில் (4) கரக் கோவில் (5) தூங்கானை மாடம் முதலிய பலவகைப் படும். இவற்றுள் தம் காலத்தில் பெருங்கோவில்கள் 78 இருந்தன என்று அப்பரே அறைந்துள்ளார். பெரிய கோவில்களைப் பழுது பார்க்குங்கால் மூர்த்தங்களை எழுந் தருளச் செய்து வந்துள்ள (பெரிய கோவில் திருச்சுற் றில் உள்ள) சிறிய கோவிலே இளங்கோவில் எனப்படும். பெரிய கோவிலுக்கு அண்மையிலுள்ள சிறிய கோவிலும் இளங்கோவில் எனப் பெயர் பெறும். எனவே, தேவார காலத்திற்கு முன்பே பல கோவில்கள் புதுப் பிக்கப்பட்டன என்பது தெளிவாகிறதன்ருே? தேவார காலத்தில் விமானம் கொண்ட கோவில்கள் இருந்தன என்பது பெண்ணுகடம் தூங்கானை மாடம் கோவில் அமைப்பைக் கொண்டு நன்கறியலாம். விமானம் 'தூங்கும் யானை' வடிவில் அமைந்ததாகும். திரு இன்னம்பர், திருத் தணிகைக் கோவில் விமானங்கள் இம்முறையில் அமைந் தவை. திரு அதிகைக் கோவில், திருக்கடம்பூர்க் கோவில் இவற்றின் உள்ளறைகள் (மூலத்தானம்) தேர்போன்ற அமைப்புடையவை; உருளைகளும், குதிரைகளும் பூட்டப் பெற்றவை. திருச்சாய்க்காட்டுக் கோவிலை ஒட்டித் தேர் போன்ற விமானம் ஒன்று உருளைகளுடன் உள் ளது.

பழைய கோவில்கள் :—

இந்த விமான அமைப்புடைய தேர் போன்ற கோவில் களே பழையவை. இன்று காணப்படும் கோவில்களை அடுத் துள்ள தேர்கள் மிகப்பழைய காலத்தில் மரக்கோவில் களாக இருந்தவை. மனிதன் மரக்கோவில்களைப் போலச் செங்கற்களைக் கொண்டு பிற்காலத்தில் கோவில்கள் அமைத்தான். சான்ருக, நகரியில் உள்ள சில கோவில்

களைக் காணலாம். அவை கி. மு. 250இல் ஆக்கப்பட்டவை. அவற்றைச் சுற்றிக் கற்சுவர்கள் உள்ளன. ஆயின், கோவில்கள் மரத்தால் கட்டப்பட்டவையே யாகும்.

"மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றைக்கல் கோவில்கள் எல்லாம், பல்லவர் காலத்தில் இருந்த தமிழ் நாட்டுக் கோவில்களைப் போன்றவையே என்பதைப் பார்த்தவுடன் கூறிவிடலாம்." என அறிஞர் **லாங்ஹர்ஸ்ட்** குறித்தல் காண்க.

திராவிடக்கலை :—

கோவில் கட்டுதல் திராவிடரது பழக்கம் ஆகலாம். அதனைப் பிற்காலத்தில் ஆரியர் கைக்கொண்டனர். தூபி, சைத்தியம் என்பன திராவிடருடையன. இவற்றை ஆரியர் கடன் பெற்றனர். இவை பிற்காலத்தில் இந்து சமயக் கோவில் களிற் காணப்பட்டன. இவற்றையே பௌத்தர் மேற் கொண்டனர். விமான வகைகள் பல தென்னிந்தியாவில் உண்டு. அவையாவும் கல்லறைகளிலிருந்து தோன்றின என்னல் தவறாகாது. தென் கன்னடக் கோட்டத்தில் உள்ள 'முதுபித்ரி' என்னும் இடத்திற் காணப்படும் குருமார் கல்லறைகளில், மூன்று முதல் ஏழு அடுக்குகள் கொண்ட 'விமானம்' காணலாம். சதுரத்தின் மேல் சதுரம் வைத்துக் கட்டப்பட்ட ஏழு அடுக்குகள் கொண்ட சதுரக் கல்லறைகள் பல இந்நாட்டில் உண்டு. இவ்வமைப் புக்கள் நாளடைவில் பெரிய விமானங்களாக மாறிவிட் டன என்பதில் ஐயமில்லை. தென்னாட்டுக் கட்டடக்கலை தமிழகத்துக்கே உரியது. இன்றுள்ள வானளாவிய கோபு ரங்கள், விமானங்கள் இவற்றிற் காணப்படும் வேலைப் பாடுகள் அனைத்தும் இந்நாட்டுப் பழைய வேலைப்பாடு களிலிருந்து வளர்ச்சியுற்றனவே ஆகும். இந்த வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக உண்டானவை. மனிதக் குரங்கின் மண்டை ஓட்டிலிருந்து இன்றைய மனிதனது மண்டை ஓடு வளர்ச்சியுற்றாற் போலவே தமிழகக் கட்டடக்கலை யும் வளர்ச்சி பெற்று வந்ததாகும். இதன் உண்மையை மாமல்லபுரத்துத் தேர்களைக் கொண்டும், திருப்பாதிரிப்

புலியூரில் உள்ள சிவனுர் கோவில் வேலைப்பாட்டைக் கொண்டும் செவ்வனே அறியலாம்.

கோவில்கள் பயன்பட்ட வகை:—

1. சங்ககாலத்துக் கோவில்கள் அழியக்கூடிய பொருள்களால் ஆனவை. ஆதலால், நமக்குக் 'கல்வெட்டுக்கள்' கிடைக்கவில்லை. பின்வந்த பல்லவர் கற்கோவில்கள் அமைத்தனர். ஆதலின் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. அவர்க்குப் பின் வந்த சோழர் பழைய கோவில்களைக் கற்கோவில்களாக மாற்றினர். ஆதலின், அழியா நிலையுடைய கல்வெட்டுக்கள் தோன்றின. அவை கோவில் அறப்பணிகளைக் குறிக்க எழுந்தன. ஆயினும், அரசர்மரபு போர்கள், அரிய செயல்கள் இன்ன பிறவும் முதலிற் பொறிக்கப் பெற்றிருந்தன. அக்குறிப்புகளே இன்று தமிழக வரலாறு கட்ட அடிப்படையாக இருந்து உதவுகின்றன.

2. கோவிலை அடுத்துச் சமயவளர்ச்சிக்குரிய மடங்கள் இருந்தன. அவை சமயக் கல்வியைப் புகட்டி விழாக்களைக் காணவந்த அடியார்கட்கு உண்டியும், உறையுளும் உதவின. அம்மடங்கட்குப் பலர் தானம் அளித்துப் பாதுகாத்து வந்தனர்.

3. கோவிலை அடுத்து மருத்துவசாலை இருந்தது. இதனைத் தஞ்சாவூர்ப் பெரிய கோவிற் கல்வெட்டால் அறியலாம்.

4. நடனம், இசை, நாடகம் முதலிய நாகரிகக் கலைகள் கோவிலில் வளர்க்கப் பெற்றன. இவற்றிற் பண்பட்ட பெண்மணிகள் இருந்தனர். அவர்கள் அடிகள்மார், மாணிக்கத்தார், கணிகையர், உருத்திரக் கணிகையர் எனப்பட்டனர். தஞ்சை பெரிய கோவிலில் மட்டும் 400 பேர் இருந்தனர்; காஞ்சி முத்தீசுவரர் கோவிலில் 42 அடிகள்மார் இருந்தனர். பெருங் கோவில்களில்

எல்லாம் நடன அரங்கு, இசை அரங்கு, நாடக அரங்குகள் இருந்தன.

5. கோவிலில் 'தருக்க மண்டபம்', 'பிரசங்க மண்டபம்' என்பனவும் இருந்தன என்பது திருவொற்றியூர் கோவிற் கல்வெட்டுக்களைக் கொண்டு அறியலாம். பாரதம், ஆகமம் போன்ற நூல்களைப் பொது மக்கட்குப் படித்துக் காட்டக் கோவில்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

6. இவை அனைத்திற்கும் மேலாக கோவில்கள் ஓவிய சிற்பக் கலைக்கட்குத் தாயகமாக விளங்கின. இன்று நமது பழம் பெருமையை உலகிற்குக் காட்டி நிற்பன இந்த இரண்டே அல்லவா? இவற்றைத் தம் அகத்தே கொண்டுள்ள கோவில்களே இன்று நம்மைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்துள்ளன என்னல் மிகையாமோ?

இன்றைய நிலை :—

இங்ஙனம் இவ்வுலக வாழ்வில் பேரின்பம் துய்த்தற் குரிய ஒப்பற்ற இடமாகக் கோவில்கள் விளங்கின. இவ்வு யரிய நோக்கம் கொண்டே அவை கட்டப்பட்டன ஆயின், நாளடைவில் அறிவற்ற பக்தியற்ற—பழம் பெருமையும் வரலாறும் உணராத பலர் கைகளில் கோவில் ஆட்சி சென்றமையாலும், பூசை முதலியன உணர்ச்சியற்ற முறையில் நடைபெற்றமையாலும், பெறலாலும் கோவில் கள் தம் பொலிவிழந்து விட்டன. அவற்றைப் பண்டைச் சிறப்பில் பாதியளவிலேனும் கொண்டு நிறுத்தல் தமி ழறிஞர்—சமயப்பிரியர் நீங்காக் கடமை ஆகும்.

குறிப்புரை.

மும்மூர்த்தி — சிவன், பிரமா, திருமால் ஆகிய மூவருடைய திருவுருவங்கள்; கல்வெட்டு—கல்லில் செதுக்கப்பட்ட பண்டைச் செய்திகள்; பண்பட்டிராவிடில் — பழகி இராவிட்டால்; விமா னம்—கோவில், கோவில் மூலஸ்தானம்; கூற்று—சொல்; உண் மையும்—உண்டாயிருந்தமையும்; காடுகிழாள்—துர்க்காதேவி, காளி;

கோட்டம்—கோவில்; வருணம்—சாதி; பால்—பிரிவு; குன்று—சிறுமலை.

அப்பர்—திருநாவுக்கரசர்; அறைந்துள்ளார் — கூறியுள்ளார்; மூர்த்தம் – திருவுருவம்; திருச்சுற்று—கோயிலைச் சுற்றியுள்ள பகுதி; அண்மை—பக்கம்; தூபி — சிகரம்; சையம் — கற்கோயில்; செவ்வனே— நன்றாக; பொறிக்கப் பெற்று—எழுதப்பட்டு; உறையுள்—தங்குமிடம்; பண்பட்ட—பழகிய; தாயகம் - சொந்த இடம்; அகம்—உள்ளிடம்.

பயிற்சி வினாக்கள்.

1. விசித்திரசித்தன் என்பவன் யார்? அவன் காலத்துக் கோவில் எத்தகையது?

2. மண்டபப்பட்டுக் கோவில் கல்வெட்டால் அறியப்படுவது யாது?

3. விமானம் என்பது என்ன? அதன் வகையையும், அமைப்பு முறையையும் குறிப்பிடுக.

4. தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் கோவில்கள் இருந்தன என்பதை எதனாலறியலாம்?

5. மணிமேகலை எக்காலத்தது? அதில் யார் யாருக்குக் கோவில்கள் இருந்ததாகக் குறிக்கப் பெற்றுள்ளது?

6. தேவார காலத்துப் பலவகைக் கோவில்களைக் குறிப்பிட்டு விளக்குக.

7. விமானங்கொண்ட கோவில்களாகத் தேவாரத்தில் எந்தெந்த இடத்துக் கோவில்கள் குறிக்கப் பெற்றுள்ளன?

8. தேர்போன்ற விமானமுள்ள கோவில்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

9. தேர்கள் அமைப்பில்தான் ஆதியில் கோவில்கள் கட்டப்பட்டன என்பதை விளக்குக.

10. கோவில் கட்டுதல் திராவிடரது பழக்கம் என்பதை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகிறார்?

11. விமான வகைகள் கல்லறையிலிருந்து வளர்ச்சி பெற்றன என்பதை ஆசிரியர் எங்ஙனம் புலப்படுத்துகின்றார்?

12. தமிழகக் கட்டடக்கலை வளர்ச்சி எத்தகையது? அவற்றை எவைகளைக்கொண்டு அறியலாம்?

13. கோவில்கள் பயன்பட்ட வகையைச் சுருக்கி எழுதுக.

14. இக்காலத்தில் கோவில்கள் தம் பொலிவிழந்து விட்டமைக்குக் காரணங் கூறுக.

7. யாது மூரே யாவருங் கேளிர்.

(திருமதி. மேரி. மாசில்லாமணி அம்மையார், எம். ஏ.)

புறநானூற்று பாடல்களொன்றில் கணியன் பூங்குன்றனர், மேற்காட்டிய மொழிகளை யமைத்துள்ளார். பண்டைத் தமிழ் மக்களைத் தமது அறிவுரைகளாற்றிருத்திய நல்லிசை புலவருள் இவரும் ஒருவர். உண்மைத் தமிழனொருவனுக்கு, உலகின் கண்ணுள்ள ஊரெல்லாம் தன் ஊரே; உலக மக்கள் எல்லோரும் உறவினரே என்பது இவ்வடியின் கருத்து. சாதி, மத, பேத மகற்றி மக்கட் டொகுதியை ஒரே தொகுதியாக் கண்டவரிவர். வானத்தைக் கிழித்துச் செல்லும் ஆகாயவிமானங்களும், திரை பொருங்கடலை நீந்திச் செல்லும் மரக்கலங்களும் பெருகிய தற்காலத்தில், இப்புலவர் பெருமான் கூறிய அப்பொன் மொழிகள், முன்னையைக் காட்டிலும் உண்மை மொழிகளாய்த் திகழ வழியுண்டு. இப்புலவர் அன்றறிந்த நாடு தமிழ்நாடும் அந்நாட்டையடுத்த நாடுகளுமே. இன்றோ, இவ்வுலக கோளத்தில் அடங்கியுள்ள நாடுகளுடனெல்லாம், வியாபாரம், பொருளாதாரம், அரசியல், கல்வி முதலியவை சம்பந்தமான தொடர்பு நாம் பூண்டுள்ளோம்.

பல்வகைக் கேளிக்கைகட்கும், வேடிக்கை விநோதத்திற்கும், உறைவிடமாய்த் திகழ்வது பாரிஸ் நகரம். எனினும், அந்நகரே மேல் நாட்டுச் சரித்திரத்தில் மத்திய கால (Mediaeval ages) நாகரிகத்திற்கும், கல்வி நிலைக்கும், நுண் கலைகட்கும் இருப்பிடமானது. சுதந்திரம், சமத்துவம், சகோதரதத்துவம் என்ற மூன்று குறிக்கோள்களையும் ஒரு பெரும் புரட்சியால் சாதித்து, உலகினர்க்கவைகளைத் திரவியப் பொருளாயீந்த நகர் அப்பாரிஸ் நகரே. கோடைக்கால மாதங்களில், குவலயத்து மக்களுள், பணம் பதவி படைத்த மக்கள் பலருங்கூடி விநோதமாய்ப் பொழுது போக்கும் நகர் அது. மண்ணுலகில் மாபெரும் நிலையமெனப் பெயர் பெற்ற நூல் நிலையம் (Bibliothequenationale) அங்குண்டு. அந்நிலையத்துள் நின்று

* புதுச்சேரி கல்விக் கழகக் கட்டுரையில் வெளி வந்தது.

கொண்டு, பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள தண்டமிழ் நாட்டை என்றடைவோமென்றேங்கினேன். ஆனால் அங்கு நான் கண்ட காட்சி என்னைத் திகைக்க வைத்தது. நூற்றுக்கணக்கான தமிழ்ச் சுவடிகள், சங்கத் தமிழ் நூல்கள், கம்பர் பாடல்கள், பெரிய புராணப் பாடல்கள், பிரபந்த நூல்கள் இவையாவும் அடங்கிய பழஞ்சுவடிகள், காந்திமகான் கற்பித்த சொற்பொருட்களின் விளக்கமடங்கிய நூல்கள்— பண்டைத் தமிழர் சரித்திரத்தைப் பாராட்டும் நூல்கள்—இவைகள் யாவும் கண்டேன்.

இந்த வுலகினுக்கோர் நாடு—அது
என்னை மகிழ் விக்கு மோர் நாடு—அது
கம்பன் கபிலன் கணக்கறு பாவலர்
கண்டு களித்த தமிழ் நாடு

என்று பாடித் தமிழின் பெருமையை வியந்தேன். பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்த அந்நகர், அந்நேரத்தில் எனது நாடாய்த் தோன்றிற்று. "யாது மூரே" என்று நான் முணு முணுத்துக் கொண்டேன்.

மற்றொருநாள், அந்நகரின் உயர்ந்த மேடையில் கட்டப்பட்டுள்ள சாக்ரே கர் (Sacre coeur) என்ற கோவிலைப் பார்க்கச் சென்றேன். அன்று பூரணச் சந்திரன். ஆனால் மங்கிய ஒளிதான். மேகப்படலம் அடிக்கடி சந்திரனை மறைத்தது. கோவிலை நோக்கி, எண்ணற்ற கற்படிகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கடந்து ஏறிச் சென்றேன். படிகள் மீது ஏறும்போதே திரும்பித் திரும்பிக் கீழேயிருந்த நகரையும், அந்நகர்ப் பெரு வீதிகள் அமைக்கப் பெற்ற ஒழுங்கையும், எல்லையில்லா மின்சார விளக்குகள் பல வர்ணத்துடன் விளங்கியதையும் கண்டேன். கோவில் அடிவாரத்தை யடைந்தேன். அங்குப் பல்வேறு மொழி பேசும் பல தேசத்தாருமிருந்தனர். அந்த மங்கிய நிலவொளியில் மௌனமாய் நின்று, அக்கோவிலின் கண் கொள்ளாக் காட்சியையும், அந்நகர் மக்கள், அவ்வெழில்

சிகரத்தை இறைவனுக்கிருப்பிடமாயளித்த செயலேயும் வியந்தோம். சீனன், ஆப்பிரிக்கன், அமெரிக்கன், இந்தியன்–யாவருக்கும் உரிமையான அவ்வழகையும் அமைதியையும் ரசித்துக் கொண்டு, சொல்லொணு மகிழ்ச்சிக் கடலிலிருந்தோம். அந்த ஒன்றுபட்ட மனப்பான்மையில், ஒருவர் மனத்துடன் மற்ருெருவர் மனம் கலந்த அந் நிலேயில், "யாது மூரே, யாவருங் கேளிர்" என்ற தண்டமிழ்ப் புலவர் மொழியில் எத்தனே உண்மை என்று நினேத்துக் கொண்டேன்.

மாதங்கள் கடந்தன. பின்னெரு நாள், ஜெர்மானிய தேசத்தில், பிராங்பட் (Frankfurt) பட்டணத்தின் தெருக்களொன்றில் நடந்து சென்றேன். ஐயோ! அந்நகரில் எங்கெங்கே நோக்கினும் அங்கெல்லாம் பாழடைந்த வீடுகள், கோவில்கள், குண்டு வீழ்ந்து உடைந்த பாலங்கள், விறுவிட்ட சன்னல்கள், சுவர்கள்; யுத்தவரக்கன் தாண்டவமாடிச் சீரழிந்த நாடென்பதை அத்தெருக்களே காட்டின. போன உலகப் பெரிய யுத்தத்தில், எமக்கெதிர்ப்புறத்திருந்து போர் புரிந்து இந்நிலேயடைந்தவரல்லரோ இவர் என்றதோ ரெண்ணம் என் மனக் கோட்டையில் நுழைந்தது. ஆனல் தங்கள் நாட்டை இப்பொழுது அயலகத்தாராகிய நான்கு பெரும் நாடுகள் பங்கிட்டு உரிமையாக்கிக் கொண்டதையும், தங்கள் மக்கள் பல்வகைச் சுதந்திரங்களேயும் இழந்து, அளவற்ற பழிச்சொல்லே ஏற்றுக் கொண்டதையும் அறிந்தும், தோல்வி மனப்பான்மையை எடுத்தெறிந்து விட்டுத் தம் நாட்டை மீண்டும் உயர்நிலேக்குக் கொண்டு வரத் திடசித்தம் கொண்ட அம்மக்களின் உயர்வுதான் என்னே! ஆடவரும், பெண்டிருமாகிய அவர்கள், பகல் தொட்டு இரவுவரை உழைத்து உண்டாக்கியுள்ள எண்ணிறந்த ஆப்பிள் மரத் தோட்டங்கள், திராட்சைச் செடித் தோட்டங்கள் இவைகளேக் கண்டேன். "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலேவின்றித், தாழாதுஞற்று பவர்" என்ற திருக்குறட்கு அரிய எடுத்துக்காட்டாய் விளக்குபவர் இவரன்றே என்று வியந்து நின்றேன். காடு வெட்டி

நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி, சலிப்ப டையா உழைப்பால் சிறந்த தமிழரசர்கள் ஆண்ட நாட் டிலிருக்கும் எனக்கு அம்மக்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தோன்றியது. அந்நிலையில் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்று அறிந்தேன்.

உலகத்தில் பெரும் தொகுதியை ஒரு காலத்தில் தமக்கே உரிமையாக்கிக் கொண்ட ஆங்கிலேயர் பாரத நாட்டைத் தமக்கடிப்படுத்தி இந்திய மாதாவின் சுதந் திர உணர்ச்சியை யழித்து, தேசத்தொண்டர் பலருக்கும் சிறை வாசமளித்த ஆங்கிலேயர் நாட்டின் தலைநகர மாகிய லண்டன் பட்டணத்தில், பக்கிங்காம் அரண் மனையை அடுத்தொரு வீதியில், வழி தெரியாது திகைத் துப் போய் நின்று கொண்டிருந்தேன். எண்ணற்ற ஆங் கில மக்களும், அயல் நாட்டு மக்களும், அங்குமிங்கும் ஓடு வதும் சாடுவதுமா யிருந்தனர். அவரவர் தத்தம் பணி யாற்ற விரைந்து சென்று கொண்டிருந்தனர். ஒரு நொடி யில் சோவென்று மழை பிடித்துவிட்டது. என் கையில் குடையுமில்லை, மழைச்சட்டையுமில்லை. கனமான தோல் பெட்டியொன்று வைத்திருந்தேன். மழைக் கொதுங் குவோமென்று அந்நியர் வீட்டில் போய் நுழைகிற வழக்கம் ஆங்கிலேயரிடத்தில் இல்லை. அச்சமயத்தில் ஓர் இளைஞன் ஓடி வந்தான். "மன்னித்துக் கொள்ளுங்களம்மா. நீங்கள் எங்கே போகவேண்டும்?" என்றான். நான் மஸ் வல் ஹில் (Muswell Hill) போக வேண்டுமென்றேன். அப்படியானால் நீங்கள் 134ஆம் நம்பர் வண்டியில் ஏற வேண்டும். இரண்டடி யெடுத்து வைத்தால் அவ்வண்டி நிற்குமிடத்தைப் போய்ச் சேரலாம். இவ்விடத்தில் அவ்வண்டி நிற்பதில்லை. உங்கள் பெட்டியை நான் தூக்கிக் கொண்டு வர எனக்கு அநுமதி யளிப்பீர்களா?" வென்று மிகவும் விநயமாய்க் கேட்டு விட்டுப் பெட்டி யைத் தூக்கிக் கொண்டு நடந்தான். நாங்கள் வண்டி நிலையத்தை யடைந்ததும் 134ஆம் நம்பர் வண்டியும் வந்து விட்டது. என்னை வண்டியில் ஏற்றி விட்டுப் "போய்

வாருங்கள் " என்று மலர்ந்த முகத்துடன் இனிய சொற் கூறி நகர்ந்தான் இளைஞன். ஊரும் பேரும் தெரியாத அவ்வாங்கில இளைஞனின் உதவியை எங்ஙனம் மறக்க வியலும்? "யாது மூரே, யாவருங் கேளிர்" என்ற நம் தமிழ்ப்புலவர் பொன் மொழியை வியந்து கொண்டே சென்றேன்.

உயர்தரப் புலவனொருவன் கூறிய கூற்று அவன் காலத்திற்கு மாத்திரமே பொருந்தியதன்று. அது முக் காலத்திற்கும் பொருந்தியதாகும். இதற்கு, உலகப் பெரும் புலவர்களாகிய ஜெகப்பிரியர் (Shakespeare), தாந்தே (Dante), ஹோமர் (Homer) முதலியோர் இயற் றியுள்ள நூல்களில் அழுந்திக்கிடக்கும் அரிய கருத்துக் களே சிறந்த சான்ருயமைகின்றன. இக்கருத்துக்களை, உலக மக்கள் யாவருக்கும் பொருந்திய உயர்தரக் காவி யக் கருத்துக்கள் எனலாம். இந்த ரீதியில் அமைவதே நம் கணியங்குன்றனுர் "யாது மூரே, யாவருங் கேளிர்" என்று கூறிய கூற்று.

குறிப்புரை.

பேதம்—வேறுபாடு; தொகுதி—கூட்டம்; திரைபொரும்—அலை மோதும்; கோளம்—உருண்டை; கேளிக்கை—பொழுது போக்கு; சாதித்து—நிலைநாட்டி; குவலயம்—உலகம்; கணக்கறு—எண்ணில் லாத; பாவலர்—புலவர்; மேகப்படலம்—மேகப் பரப்பு; கண் கொள்ளா—கண்நிறைந்த; எழில்—அழகு; சிகரம்—உச்சி; ரசித் துக்கொண்டு—அனுபவித்துக் கொண்டு; விறுவிட்ட—கட்டு விட்ட; தாண்டவமாடி—கூத்தாடி; சீரழிந்த—அழகிழந்த; திடசித்தம்—மன வுறுதி; ஊழ்—விதி; உப்பக்கம்—பின்புறம்; உலைவின்றி—சோர் வில்லாது; தாழாது—பின்வாங்காது; உஞற்றுபவர்—தொழில் புரி பவர்; எடுத்துக்காட்டு—சான்று; வியந்து—ஆச்சரியப்பட்டு; குளம் தொட்டு—குளம்வெட்டி.

எண்ணற்ற—கணக்கில்லாத; சாடுவதும்—குறுக்கே செல்லு வதும்; பணி—செயல்; அனுமதி—உத்தரவு; விநயமாய்—பணி வாய்; நகர்ந்தான்—நடந்து சென்ருன்; கூற்று—சொல்; ரீதி— தன்மை.

பயிற்சி வினுக்கள்.

1. "யாது மூரே யாவரும் கேளிர்"—இஃது யார் கூற்று? எந் நூலில் உள்ளது? இதன் கருத்து யாது?

2. 'யாது மூரே யாவரும் கேளிர்' என்னும் இக்கூற்று எக் காலத்தில் தோன்றியது? அது இக்காலத்திற்கும் பொருந்துமென் றது எவ்வாறு?

3. பாரிஸ் நகரத்தின் தனிச்சிறப்புகள் யாவை?

4. பாரிஸ் நகரத்து நூல்நிலேயம் 'யாது மூரே யாவரும் கேளிர்' என்ற உண்மையை எவ்வாறு புலப்படுத்திற்று?

5. பாரிஸ் நகரத்திலுள்ள 'சாக்ரேகர்' என்ற கோயில் எவ்வாறு 'யாது மூரே யாவரும் கேளிர்' என்ற உண்மையைப் புலப்படுத்தியது?

6. செர்மன் தேசத்திலுள்ள பிராங்பட் என்ற பட்டணத்தின் சீரழிந்த நிலே எவ்வாறு வருணிக்கப்படுகின்றது?

7. 'யாது மூரே யாவரும் கேளிர்' என்ற உண்மை செர்மன் தேசத்தவர்களின் முயற்சிகளில் எவ்வாறு காணப்பட்டுள்ளது?

8. "ஊழையு முப்பக்கங் காண்பர் உலேவின்றித்
தாழாதுஞற்று பவர்"—இவ்வுண்மைக்கு எடுத்துக்காட்டாக அமைந் துள்ளார் யாவர்? எங்ஙனம்?

9. ஆங்கிலேயர் ஆட்சியைப்பற்றி ஆசிரியர் கூறியிருப்ப தென்ன?

10. ஆங்கில இளேஞன் ஒருவனது எச்செயல் "யாது மூரே யாவருங் கேளிர்" என்ற உண்மையை நினேப்பூட்டியது?

11. உயர்தரப் புலவனெருவன் கூறும் உண்மை முக்காலத்திற் கும் பொருந்துவதாகும் என்பதற்குக் கணியன் குன்றனர் வாக்கு எவ்வாறு அமைகின்றது?

8. நாடக வகைகள் — தெருக்கூத்து.

(பேராசிரியர் ரம்போலா மஸ்கரன் ஹாஸ், எம். ஏ.)

நமது நாட்டின் கூத்து மிகவும் தொன்மை வாய்ந்தது; நன்மை பயக்கும் சாதனமாக ஏற்பட்டது. "வேர்த்து ஆவி மயங்காது விளங்க நடமிடும்" தில்லை அம்பலவாணன், 'கூத்தரசன்' என்றே பெயர் பெறுகின்றான். அவனது காரியக்கூத்து இடையீடின்றி நிகழ்கின்றது என்பர். அதனை 'பஞ்சகிருத்தியப் பரமானந்தத் திருத்தாண்டவம்' என்று பாராட்டி மகிழ்வர். ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களும் அந்தத் திருக்கூத்திலிருந்தே தோன்றுவதாகச் சொல்லப்படும்.

உலகியல் வரம்பில் கூத்து என்று தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறமுடியாத பழமை உடையது. உள்ளம் நிறைந்து உவகை உணர்ச்சிகள் உயர்ந்தோங்குமிடத்து மனிதரிடத்து இயல்பாய் எழுஞ் செயல் கூத்தே. தூய மனத்தின் பொங்கலை இயற்றமிழ் என்றும், தூய வாயின் முழக்கத்தை இசைத்தமிழ் என்றும், தூய மெய்யின் இயக்கத்தைக் கூத்துத் தமிழ் என்றும் வகுத்துரைத்தனர் முத்தமிழ் வல்லாராகிய பேரறிஞர்.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்" என்ற பழமொழியை நாம் பலகாலும் கேட்டிருக்கின்றோம் அல்லவா? கொண்டாடும் என்ற சொற்றொடரை ஒரு சொல் நீர்மையதாகவே கொண்டு விடுகின்றோம். கொண்டு + ஆடும் என்று பிரித்துப் பொருள் காண்கிற காலத்தில் தான், குழந்தையால் மகிழ்வோன் அதனைத் தலையில் கொண்டு ஆடும் நிகழ்ச்சியும், தெய்வத்தால் மகிழ்வோன் அதனை தலையில் சுமந்தாடும் நிகழ்ச்சியும் நம் கண் முன்னர்க் கொணர்வோம்.

கூத்து வகையின் இலக்கணங் கூறும் நூல்களாகக் கேட்கப் பெறுவன **இந்திர காளியம், கூத்தநூல், முறுவல், சயந்**

தம், செயிற்றியம், பஞ்சபாரதீயம், பரதம், பரதசேனபதியம், குணநூல், மதிவாணம், சுத்தானந்தப்பிரகாசம் என்பன. இவற்றுள் பல முழுமையும் கிடைக்குமாறில்லை. கிடைக்கப் பெறும் சூத்திரங்கள் கொண்டு கூத்தின் தன்மையை ஒருவாறு நிர்ணயிக்கலாம்.

கூத்துக்கள் அரங்குகளிலேயே ஆடப்பெற்றன. 'கூத்தாட்டவை' என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். புறநானூறு " கூத்தர் ஆடுகளம் " இருந்ததைப் புலப்படுத்துகின்றது. கம்பர் காலத்தில் "ஐய நுண் இடையார் ஆடும் நாடக அரங்குகள் " நாடெங்கும் இருந்திருத்தல் வேண்டும். 'கூத்துக்களரி' என்பது தொன்று தொட்டு வருகின்ற தொடர்.

பழமையாய்ப் பகுக்கப்பெற்ற **வசைக்கூத்து, புகழ்க் கூத்து, வேத்தியல் கூத்து, பொதுவியல் கூத்து, வரிச்சாந்திக்கூத்து, சாந்திக்கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க்கூத்து, தேசியக்கூத்து, மார்க்கக்கூத்து** ஆகிய எந்தப் பகுப்பிலும் சேர்க்க இயலாதது தெருக்கூத்து. தெருக்கூத்துக்களுக்கு வானமே கூரை ; கோவிலைச் சார்ந்த நெடுவெளியோ அல்லது நடுச் சந்தியோதான் ஆடுகளம். தொடர்ந்து தொடர்ந்து ஆடி ஆடிப் பக்குவம் பெற்ற பரம்பரையினரைக் கொண்டு சுருங்கிய செலவிலும் குறுகிய முயற்சியிலும் நடைபெறுவது தெருக்கூத்து. பாடுவோர் நடிப்போர் திறத்திற்கே பெருமதிப்புத் தருதற்கு இடமாவது தெருக்கூத்து. கண்கவர் திரை அமைப்போ, காட்சி சோடனையோ இன்றிக் கதாபாத்திரங்களின் நடிப்பின் மேன்மையால் வளம் பெறுவது தெருக்கூத்து. இதிகாசக்கதைகளையும், புராண சம்பவங்களையும், சன்மார்க்க போதனைகளையும், சீர்திருத்தக் கருத்துக்களையும் உள்ளீடாகக் கொண்டு பாமர மக்களுக்குக் களிப்பின் மூலம் கருத்தூட்டும் கலைச்சாலை தெருக்கூத்து. உழைத்துக் களைத்த பாட்டாளி மக்களுக்குப் புத்துணர்ச்சியும், ஆர்வமும் ஊட்டும் சக்திக் கருவூலம் தெருக்கூத்து. பொதுஜன ரஞ்சகமாக நடத்தப் பெற்ற தெருக்

கூத்துக்கள் பல நூற்றுண்டுகளாக ஜீ வ க ளை யு ட ன் இலங்கி வருவனவாயின.

இராமாயணமும், பாரதமும் நம் தேசத்தில் படித்தவர் படியாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோராலும் விரும்பி அறியப்பெறும் சிறந்த பெருங்கதைகள். கம்ப ரும், வில்லியாரும் இவற்றை நம் தமிழகத்தில் கற்றோர்க்கி தயம் களிக்க அளித்தார்கள். கற்றோரேயன்றி மற்றோரும் கண்டு கேட்டு மகிழும்படியாக இக்காவியங்களை நாடக அமைப்பில் உ ரு வ ா க் கி த் தெருக்கூத்திற்கு உதவிய வர்கள் பலர். அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க வர் அருணசலக்கவிராயரும், இராமச்சந்திரக்கவிராயரும் ஆவர். அரிச்சந்திர புராணமே அரிச்சந்திர நாடகமாகத் தெருக் கூத்தில் மருவி வருகின்றது. வீரச்சுவைக்கு இரணியன் கதை. சோகச்சுவைக்கு அரிச்சந்திரன் கதை. இலக்கிய இரசனையாளர்க்கு இளங்கோவடிகள் இயற்றிக் கொடுத்த சிலம்புச் செல்வத்தைப் பாமர மக்களுக்குப் பொருந்த அமைத்துக் கொடுத்தவர்கள் தெருக்கூத்து ஆசிரியர் களே. **சிறுத்தொண்டர் விலாசம், திருநீலகண்ட நாயனர் விலா சம், மீனுட்சியம்மை நாடகம், தாருகவன விலாசம்** தெருக்கூத் திற்கமைந்த நாடகங்கள். மன்மதனைச் சிவபெருமான் எரித்த கதை மிக விறுவிறுப்புடன் நடிக்கப் பெறும் தெருக் கூத்து. மார்க்கண்டேயன் கதையும் இத்தகைய கவர்ச்சி தரும் நிகழ்ச்சியே. தெருக்கூத்துத் துறையில் **அப்பாசு** நாடகமும், **அல்லிபாதுஷா** நாடகமும் முஸ்லீம்கள் வழங்கிய நாடகங்கள். **ஞானத்தச்சன், தேவசகாயம் பிள்ளை வாசகப்பா, ஞானசௌந்தரியம்மாள் நாடகம், எஸ்தாக்கியர் நாடகம்** கிறிஸ்தவர்கள் தந்த நாடகங்கள். இந்நாடகங்கள் யாவும் சர்வ சமயத்தாராலும் போற்றப்படுவன.

தெருக்கூத்துக்கள் நெடுங்காலமாக நமது கிராமங் களில் நடைபெற்று வருகின்றன. நம் கிராமங்களுக் கேற்ற சாவகாசமான நிதானப் போக்கிலேயே இவை நிகழும். இரவு ஒன்பது மணிக்கு இன்ன கூத்து இன்ன இடத்தில் நடைபெறும் என்று காலையிலேயே அறிவிப்

பார்கள். கூத்தின் காலம் பெரும்பாலும் வேனில் விழாக் காலமாக இருக்கும். கோவிலை அடுத்த திறந்த வெளியில் கிராமத்து ஜனங்கள் வந்து கூடுவர். பலர் பாயும் தலையணையுமாக வருவர். சிலர் பட்சணங்களோடு வருவர். ஒன்பது மணி என்றால் பத்தாகும். பத்து பதினொன்றானாலும் அதனாலே ஜனங்களிடையே ஒருவிதமான ஆத்திரமோ, அதிருப்தியோ உண்டாகாது. எல்லாப் பெரிய மனிதர்களும் வந்து சேர்ந்த பின்னரே ஆட்டம் தொடங்கும். இரண்டுபேர் ஒரு வெள்ளைத்துணியைக் குறுக்காகச்சபை எதிரில் பிடித்துக் கொள்வார்கள். அத்திரைக்குப் பின் கூத்தாடிகள் நின்று கொண்டு இரண்டு மூன்று நிமிடங்கள் தாளம் தட்டிப் பாட ஆரம்பிப்பார்கள். பின்னர் கட்டியங்காரன் காட்சியளிப்பான். வரும்போதே கட்டியங்காரன் வந்தானையா என்று ஆர்ப்பாட்டத்தோடு தன்னை அறிமுகப்படுத்தியே ஆஜர் ஆவான். கூத்திற்கேற்றபடி நாடக பாத்திரங்கள் ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் வருவார்கள். அர்ச்சுனன் போன்ற பெரிய பாத்திரங்கள் வரும்போது கட்டியங்காரன் அவர்கள் வரவைப் பெரிய ஆரவாரத்தோடு அறிவிப்பான். அவன் உட்பட நடிகர் அனைவரும் காலில் சதங்கை அணிந்திருப்பார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் கூத்தை முடிப்பதில்லை. விடிந்துவிட்டால் கூத்தை நிறுத்துவார்கள். விட்ட இடத்திலிருந்து அடுத்து வரும் நாட்களில் தொடர்பு அறாதபடி நடத்தி முடிப்பார்கள்.

கூத்தில் வருபவர்கள் வேஷந் தரிக்கிறார்கள் என்று சொல்லுவதில்லை. வேஷங் கட்டுகிறார்கள் என்றே சொல்வதுண்டு. ஆண்வேஷங் கட்டுபவர் காலுக்குச் சல்லடம் போன்ற உடையை உள்ளே கட்டி அதற்குமேல் பெண்கள் அணியும் பாவாடை போன்றதைக் கட்டியிருப்பார்கள். அவர்கள் சுழலும்போது இந்த ஆடையும் சுழலும். கிரீடம் கவசம் இவை மரத்தால் செய்யப்பட்டவை; கண்ணாடிக்கற்கள் அழுத்தப் பெற்றவை. பெரும்பாலும் ஆண்பாலரே பெண்பாலர் வேஷங்கட்டுவர். கூத்தர் பூசும் வர்ணம் அரிதாரமும், செந்தூரமும், கரிப்பொடியுமாகும். அரி

தாரம் முகத்திற்கு மஞ்சள் வர்ணம் கொடுக்க உபயோகமாகும். செந்தூரம் உதட்டில் செந்நிறம் காட்டப் பயன்படும். கரிப்பொடி புருவத்தில் கன்னங்கரேல் என்ற நிறத்தை உண்டாக்கும்.

பட்டினத்தில் வசிக்கும் பெரிய நடிகர்களும் கிராமக் கூத்தர்களிடமிருந்து கற்றுக் கொள்ளத்தக்க விசேடங்கள் உண்டு என்பதை நிறுவ நாடகப் பேராசிரியர் திரு. சம்பந்த முதலியார் அவர்கள் தாம் நேரிற்கண்ட ஒரு சம்பவம் சொல்லுகிறுர்கள்.

"தமிழ் நாடகமானது மிகுந்த க்ஷீண திசையை அடைந்த காலத்தும் தெருக்கூத்துக்களாகிய கிராமக்கூத்துக்கள்தான் "நாடகத் தமிழ்" என்று ஒன்று இருக்கிறதென்னும் பெயரைக் காப்பாற்றி வந்தன. அக்கூத்துக்கள் தற்போது மிகத் தாழ்ந்த ஸ்திதிக்கு வந்துள என்பதற்கும் சந்தேகமில்லே. அப்படியிருந்தும் அவைகளிடம் சில குணங்களும் இருக்கின்றன வென்பதற்குத் தடையில்லே. பெரிய வேஷங்கள் ஒரு புறமிருக்க, சில்லரை வேஷங்கள் மிகவும் ஒழுங்காகவும் தத்ரூபமாகவும் இருந்தன வென்பதற்கு ஐயமில்லே. இதற்கு ஒரு உதாரணங் கூறுகின்றேன். சில வருடங்களுக்கு முன்பு சென்னேயில் ஒரு பிரபல நாடக சபையினர், விக்டோரியா மண்டபத்தில் அரிச்சந்திரா நாடகம் நடத்தினர். அதில் வெட்டியானுக வேடம் தரித்த ஒரு நடிகர் தன் மீசையை (Spirit Gum) வைத்து ஒட்டிக்கொண்டு வந்தார். அந்த கோந்து சரியாக ஒட்டாதபடியால் மேடையில் அவர் நடிக்கும் போதே பாதி மீசை கீழே விழுந்துவிட்டது! மேடையின் மீதிருந்த மற்ற நடிகர்களே இதைக்கண்டு நகைத்தார்கள் என்ருல் நாடகம் பார்க்க வந்த சபையோரைப்பற்றிக் கேட்க வேண்டியதேயில்லே. பாதி மீசை கீழே விழுந்துவிட்ட அந்த நடிகருக்கு இந்தப் பெரும் நகைப்புக்குக் காரணம் தெரியவில்லே. 'என்னேப் பார்த்து நகைக்கிறீர்களா' என்று கோபத்துடன் மீசையில் கைபோட அப்பொழுது

தான் அவருக்குப் பாதி மீசை விழுந்துபோன விஷயம் தெரிந்தது. இதே வெட்டியான் வேஷம் சூணும்பேட்டுக்கு அடுத்த ஒரு கிராமத்தில் கூத்து நடந்தபோது அக்கிராம வேஷதாரி நடிக்கப் பார்த்தேன். அவன் மீசை மிகவும் சரியாக இருந்தது. இரவில் அவனை அருகில் அழைத்து நான் பார்த்தபோதிலும் அது ஒட்டியதாகக் காணப்பட வில்லை. அவ்வளவு சுவாவத்திற்கு ஒத்திருந்தது. மறு நாள் காலையில், அந்த வேஷதாரி, நான் இறங்கியிருந்த வீட்டிற்கு வந்த பொழுது, அவனைக் கேட்டதில், அந்த மீசையை அத்திப்பால் கொண்டு ஒட்டியதாகவும் அது சுலபமாக விழுந்து விடாதென்றும் கூறினன். ஆகவே நமது பட்டினங்களில் வசிக்கும் பிரபல நடிகர்களும் கிராம நாடகசாலை நடிகர்களிடமிருந்து கற்க வேண்டிய பல விஷயங்கள் உள."

பழங்காலத்தில் கலையாக ஓங்கிய தெருக்கூத்து இக்காலத்தில் மிகவும் சீர்கேடான நிலைக்கு வந்து செல்வாக்கிழந்து தவிக்கின்றது. இந்த நிலைக்குப் பல காரணங்கள் உள. கண்ணுக்கும் செவிக்கும், கருத்திற்கும் ஒருசேர விருந்தளிக்கும் சினிமா கிராமங்களிலும் பரவி வருகின்றது. இதனல் கிராமங்களில் தெருக்கூத்தைப் பேணுவார் தொகை அருகி வருகின்றது. பனி, குளிர், காற்று முதலியவற்றிற்கு ஆளாகாமல் சுகமான வசதிகளுடன் அரங்குகளில் ஆட்டம் காணும் கூட்டமே பெருகி வருவதில் வியப்பில்லை. தெருக்கூத்தில் புதுமை இல்லை. ஒரு வார்ப்படத்தில் அமைந்த மாமூல் கதைகளே மீண்டும் நடிக்கப் பெறுகின்றன. திறமை வாய்ந்த நடிகர்கள் பொருள் வருவாய் சூன்யமான தெருக்கூத்தில் தலைப்பட ஒருப்படவில்லை. முற்காலத்தைப்போல பெருஞ்செல்வர்கள் தெருக்கூத்தை ஆதரிக்க முன்வரவில்லை. தெருக்கூத்து இன்று கேலிக்கூத்தாக ஒதுக்கப்படுகிற அளவுக்கு வந்துவிட்டதென்ருல் அதன் பெரும் பொறுப்பை

அதில் ஈடுபட்டு நடிப்போரே ஏற்க வேண்டும். வரன் முறையாக வரும் பார காவியங்கள், புராண சம்பவங்கள் இவற்றைக் குலைத்துச் சிதைத்துக் கோரம் பண்ணிவிட்டார்கள் சில தெருக்கூத்தர்கள்.

பத்தினிப் பெண்மணியான கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலைநாட்டியபொழுது 'பொன் செய் கொல்லன் தன் சொல் கேட்ட, யானோ அரசன் யானே கள்வன்!' என்று மனம் வெடித்துக் கூறியவண்ணம் மன்னன் உயிர் நீத்தான் என்று உரைக்கும் சிலப்பதிகாரம் எங்கே? பத்தினித் தேவியைப் பத்திரகாளித் தேவதையாக்கிப் பாண்டியனின் வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாகப் போடச் செய்யும் தெருக்கூத்து எங்கே?

இந்நாளில், கையையும் கண்ணையும் இயக்கி முகக்குறியாலும் பிறவகையாலும் விறல்பட ஆடும் அபிநயம் என்ற ஊமைக்கூத்தும் உயிர்பெற்று உயர்ந்து வருகின்றது. இசைப்பாட்டு இன்னுரை எழிலமை நடிப்பு ஆகிய பல்வகைத் திறமும் ஒருங்கியைந்த தெருக்கூத்தும் உயிர் பெற்றோங்க வேண்டும். கதை அமைப்பிலும், பேச்சிலும் காலத்திற்கேற்ற கருத்தும் நடமும் இசையும் இடம் பெற வேண்டும். தெய்வக் கதைகளை அடுத்து அரசர்கள் பெருமை, வீரர்கள் மாண்பு விளங்கும் வரலாறுகள் நிறையச் சேர்க்க வேண்டும்.

சென்ற காலத் தெருக்கூத்தினை நினைவில் இருத்தி அதனை நிகழ்காலத்திற்கேற்பத் திருத்த முயல்வோரே எதிர் காலத்திற்கு இயைந்ததைக் கருதிச் செய்தவராவர்.

குறிப்புரை.

கூத்து—நடனம்; தொன்மை—பழமை; வேர்த்து—வியர்த்து; ஆவி–உயிர்; தில்லை அம்பல வாணன்—சிதம்பரத்தில் எழுந்தருளிய

நடராச மூர்த்தி; கூத்தரசன் — கூத்தாடு தலைவன்; இடையீடு இன்றி — இடையில் தடையின்றி; பஞ்ச கிருத்தியம் — ஐவகைத் தொழில்; அவை ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்பன. தாண்டவம் — கூத்து, நாடகம்.

உலகியல் வரம்பில் — உலகம் தோன்றிய காலஅளவில்; பொங்கலை — எழுச்சி; இயக்கம் — அசைவு; அரங்கு — மேடை; ஆடுகளம் — ஆடுமேடை; நுண்இடையார் — மகளிர்; கதாபாத்திரங்கள் — கதைக்குரிய நடிகர்கள்; உள்ளீடு — உள்ளே பொதிந்த பொருள்; களிப்பு — மகிழ்ச்சி; ஆர்வம் — விருப்பம்; கருவூலம் — நிதிச்சாலை; ரஞ்சகம் — விருப்பம்; ஜீவகளை — உயிர்வனப்பு; பாகுபாடு — பிரிவு; இரசனை — இன்பம்; சர்வசமயத்தராலும் - எல்லா மதத்தவராலும்; பாத்திரங்கள் — நடிகர்கள்; கவசம் — சட்டை; கன்னங்கரேல் — கருப்புநிறம்.

க்ஷீணதிசை — தாழ்ந்த நிலை; தத்ரூபம் — உண்மை வடிவம்; ஐயம் — சந்தேகம்; கோந்து — ஒட்டும் வருவகைப் பசை; விஷயம் — உண்மை; சுபாவம் — இயற்கை; செல்வாக்கு — பெருமை; பேணுவார் — காப்பாற்றுவார்; மாமூல் — வழக்கம்; வருவாய் — வருமானம்; சூன்யம் — இல்லாமை; ஒருப்பட — சம்மதிக்க; ஈடுபட்டு — சேர்ந்து, வரன்முறையாக — வழி வழியாக; பாரகாவியம் — பெரிய கதை; கோரம் - அழிவு; இயக்கி - அசைத்து; விறல்பட - பெருமையுண்டாக; அபிநயம் — கூத்து.

பயிற்சி வினாக்கள்.

1. ‘பஞ்சகிருத்திய பரமானந்த திருத்தாண்டகம்’ — என்று எதற்குப் பெயர்? விளக்குக.

2. கூத்தின் தோற்றத்தைப்பற்றி ஆசிரியர் தரும் விளக்கம் யாது?

3. ‘குழந்தையும், தெய்வமும் கொண்டாடும் இடத்தில்’ — இப்பழமொழிக்கு ஆசிரியர் தரும் விளக்கம் யாது?

4. கூத்து வகையின் இலக்கணம்கூறும் நூல்கள் எவை?

5. கூத்துக்கள் அரங்குகளிலே ஆடப்பெற்றன என்பதற்குத் திருக்குறள், புறநானூறு, கம்பராமாயணம் இவற்றிலிருந்து சான்றுகள் காட்டி விளக்குக.

6. தெருக்கூத்து எந்தெந்தக் கூத்து வகையினின்றும் வேறுபட்டதாகும்? அதன் இயல்பினைக் குறிப்பிடுக.

7. இராமாயணத்தையும், பாரதத்தையும் தெருக்கூத்தாக ஆக்கித் தந்தவர்கள் யாவர்?

8. தெருக்கூத்திற் கமைந்த நாடகநூல்களில் வீரம், சோகம், இன்பம் செறிந்தன யாவை?

9. முஸ்லீம்கள், கிறித்தவர்கள் தெருக்கூத்திற்கு ஆக்கித்தந்த நாடகங்கள் எவை?

10. தெருக்கூத்து நடைபெறும் இயல்பினைச் சுருக்கி எழுதுக.

11. 'பட்டினத்தில் உள்ள பெரிய நடிகரும் கிராமக் கூத்தர்களிடமிருந்து கற்றுக் கொள்ளத்தக்க விசேடங்கள் உண்டு' என்பதைச் சமபந்த முதலியார் எங்ஙனம் விளக்குகின்றார்?

12. தெருக்கூத்து இக்காலத்தில் சீர் கேடான நிலைமையில் இருப்பதற்குக் காரணங்கள் யாவை?

13. தெருக் கூத்து மீண்டும் வளர்ச்சி பெற யாது செய்யலாம்?

TAMIL ILAKKIYA KOVAI

Form IV — Part II

By

Vidwan V. Thangiah Nadar

Publishers

The Tirunelveli Diocesan Book Depot

Palayamkottai

Price : Rs. 0—14—0